யாதும் ஊரே யாவரும் கேளிர்

Sangathamil

# சங்கத்தமிழ்

குரல் – 72 | சர்வதேச மின் செய்தித்தாள் | மே 01 2024




## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்





























# விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203

Sangathamil

# சங்கத்தமிழ்

யாதும் ஊரே யாவரும் கேளிர்

சர்வதேச மின் செய்தித்தாள்

## www.sangathamil.ca




# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**சுயநிறைவான, தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாகஎமது சமூகம் உருவாகவேண்டும். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவவேண்டும். உழைப்பவனே பொருளுலகினைப் படைக்கிறான் மனிதவாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றான். உழைக்கும் கரங்களே மனித வாழ்க்கையை இயக்கும் கரங்கள்.**






## சங்கத்தமிழ்

**தொடர்புகளுக்கு**

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.


All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# நிமிர்ந்த பனை

## லெப். கேணல்

# சூட் / அருணன்




சிலந்திவலைப்பின்னலாகிப் படர்ந்திருந்த இந்தியர்களின் கையில், தமிழீழம் சிக்கிப்போயிருந்தது ஒரு காலம்.

மறக்க முடியாத அந்த நாட்களில் யாழ்ப்பாணத்தில் நின்று பிடித்து புலிகளின் சுவடுகளைப் பேணிக்காத்து நிலைநிறுத்தி வைத்திருந்த வீரர்கள், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சிலபேர் தான். அந்தச் சிலபேருக்குள் நேற்று வரையும் எஞ்சியிருந் தவந்தான் சூட்.

அவனை விளங்கிக்கொள்ள அந்த நேரத்து "இராணுவச் சூழ் நிலை" யைப் புரிந்துகொள்ளவேண்டும். அந்த சூழ்நிலையைப் புரிந்து கொள்ள வலிகாமத்தின் தரையமைப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

தமிழீழத்தில் வேறெங்கும் இல்லாதவிதமாக முற்றுமுழுதான நகரச் சூழலை பெரிய அளவில்கொண்ட புவியியல் அமைப் பையும், குறைந்தளவு நிலத்தில் கூடியளவு மக்கள் அடர்த்தியாக வாழும் குடியியல் நிலையையும் கொண்ட பிரதேசம் அது.

பகைவனுக்கு முழுமையாக ஒத்துழைத்தது அந்த நில அமைப்பு. அது அவனுக்குச் சாதகமான ஒரு சூழல்.

அதே சமயத்தில் - இனங்காண முடியாமல் சனங்களோடு இரண்டறக் கலந்திருந்த துரோகிகள் வேறு. இந்தியர்கள் போட்ட எலும்புகளை நக்கிக்கொண்டிருந்து, இயலுமான அள வுக்கு அவர்களுக்குத் துணைபோன கும்பல்களும், ஆட்களும்.

இதற்குள் இன்னொரு விடயம் என்னவென்றால், யாழ்ப்பாண மாநகரத்தை தன்னகத்தே கொண்டிருக்கும் வலிகாமம் பிர தேசத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதுமான ஒன்றாக இந்திய - சிறீலங்காத் தளபதிகள் அப்போதும் இப் போதும் கருதுகிற அளவுக்கு முக்கியத்துவத்தையும் பெற்றிருந்த பகுதி அது.

அந்தவகையில், மணலாற்றுக்கு அடுத்தபடியாக இந்தியர்களின் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்ட மையமாகவும் வலிகாமப் பகுதி விளங்கியது.

இத்தகைய ஒரு புற நிலைமைக்குள்-

உயிர்வாழவே உத்தரவாதமற்ற இராணுவச் சூழ்நிலைக்குள்- புலிகள் இயக்கத்தை நிலைநிறுத்தி வைத்திருப்பதற்கு இடை யறாது போராடிய வரலாற்று நாயகர்களில் எஞ்சியிருந்தவன் சூட் மட்டும்தான்.

ராஜன், சுபாஸ், லோலோ, தும்பன், ரெட்ணா, கட்டைசிவா, கரி காலன்..... என எல்லோரும் அவனைவிட்டுப் போய்விட, அவர் களின் நினைவுகளைச் சுமந்துகொண்டு போராடியவன் இன்று எங்களை விட்டுப் போய்விட்டான்.

இப்போது.... அவனது நினைவுகளைச் சுமந்துகொண்டு நாங்கள்....

அந்த இருண்ட இரண்டரை வருடங்கள்.

அது மிக நெருக்கடியான காலகட்டம். வர்ணித்துச் சொல்ல முடியாத ஒரு பயங்கரச் சூழ்நிலை அப்போது நிலவியது.

பாசமிகு மக்கள் பாதுகாத்து இடமளிக்கத், தூங்கப்போகும் இர வுகள் தூக்கமற்றுப் போகும். ஒரோசையுமற்று அசையும் இர வில், தூரத்து நாயோசை இந்தியன் நகரும் சேதியைச் சொல் லும். திடீரென ஒரு பதற்றம் பற்றிக்கொள்ளும். அந்த சூழ்நிலை யில் அது இயல்பானது. நாய் குரைப்புச் சத்தம் அகோரமாய் நெருங்கும். அது ஒரு அச்சமூட்டும் குறியீடு. விரிந்து நகர்ந்து வட்டமிட்டுச் சுருங்கி எதிரி முற்றுகையிடுகிறபோது, நாயோசை உச்சக்கட்டத்தில் இரையும். நெஞ்சு விறைத்துப்போகும். நள் ளிரவின் அமைதி சிதைய ஊர் துடித்து விழிக்கும். தங்களுக்காக வேண்டிக்கொள்ளும் மனங்கள் "பிள்ளைகளைக்" காக்கச் சொல்லியும் இறைவனிடம் மன்றாடும். துப்பாக்கிகள் தயா ராகும். தேர்வு நெம்பு, தானியங்கிக்கு மாற, சுட்டுவிரல் சுடு வில்லை வளைத்துக்கொள்ளும். இருளை ஊடறுத்து விழிகள் முன்னேறும். எதிரி எதிர்ப்படும் கணத்தில் சன்னங்கள் பாய முற்றுகை உடைபடும். தப்பித்து மீண்டு, சொல்லப்பட்ட இட மொன்றில் சந்திக்கின்றபோது தோழர்களில் ஒருவனோ இருவரோ வந்திருக்கமாட்டார்கள்....

ஆள்விட்டுப் பார்த்து ஆமி இல்லை என்ற பின் மெல்ல நடந்து வீதி கடக்கும்போது, சடுதியாய் எதிர்ப்படும் சிற்றூர்திக்குள் ளிருந்து துப்பாக்கிகள் உறுமும். ஆளையோ, அல்லது ஆடை களையோகூட சன்னங்கள் துளையிடும். உரப்பைக்குள் இருக் கும் எங்கள் துப்பாக்கியின் சூடு தணியும்போது, நாலாவது வெளி கடந்து நாங்கள் ஓடிக்கொண்டிடுப்போம். எம்மை முந்திக் கொண்டு எதிரியின் சன்னங்கள் சீறும்.

"முற்றுகையிடுகிறான் பகைவன்" என நினைத்து அடித்து உடைத் துக்கொண்டோ, அல்லது வலு அவதானமாக நகர்ந்தோ அவ னைக் கடந்து மறுபக்கம் போய் "தப்பி வெளியேறிவிட்டோம்" என மகிழும்வேளை, இப்போதுதான் முற்றுகைக்குள்ளே வந்து சிக்கிப்போயுள்ளோம் என்பது தெரியவரும். நடந்த தவறு விளங் கும் போது தலை விறைக்கும்.

"பிரச்சினை இல்லாதவை" எனக் கருதி இரவில் படுக்கப்போகும் இடங்கள். அதிகாலையில் எதேச்சையாகச் சுற்றிவளைக்கப் படுகின்ற துரதிர்ஷ்டம் நிகழும் சர்ந்தர்ப்பவசமாகச் சிக்கிக் கொண்டுவிடுகிற அந்த விபரிக்க முடியாத் சூழ்நிலைகளில் "வாழ்க்கை வெறுக்கும்".

"எல்.ரீ.ரீ" எனக் கத்திக்கொண்டு இந்தியன் எட்டிப் பிடிக்கும் போது, "கதை முடிந்தது" என்று குப்பியைத் தொடும் வேளை யில், இறுதி நேர முயற்சியா உதறிப் பறித்துக்கொண்டு தப்பி ஓடுகிறபோது நெஞ்சுக்குள் தண்ணிவரும்.

இப்படியாக ஏராளமான மயிரிழைகள்.

சன்னம் துளைத்தவர்களையும், "சயனைட்" அடித்தவர்களை யும் தவறவிட்டு தப்பித்து வந்தபோதெல்லாம், அந்த ஆருயிர் நண்பன் ஓரமாய் இருந்து கண்ணீர் சொரிவான்.

ஆனால், ஒருபோதும் அந்தப் புலிவீரனின் உள்ளம் தளர்ந்து போனதில்லை.

நெருக்கடிகள் கூடிக்கூடி அழுத்திய போதெல்லாம் இருதிக் கொண்டே போனது அவனுடைய மனவுறுதி.

கற்பாறையைப் பிளந்து முளையிடும் துளிராகி, இந்தியர்களின் கூடாரங்களுக்கு நடுவில் அவன் நிமிர்ந்தான்.

எதிரி வளைந்து நின்ற மண்ணில், கைவிடாத் துப்பாக்கியோடு கடைசி வரைக்கும் வலம்வந்து போராட்டத்தை உயிர்த்துடிப் போடு உயர்த்திச் சென்ற வேங்கை அவன்.

மரணம் அவனது உயிரை உரசிச் சென்ற போதெல்லாம் தப் பித்து மீண்டுவந்து, "என்ன நடந்ததோ...?" என ஏங்கி நின்ற எங்களின் முன் கண்குளிரக் காட்சியளித்து, ஆச்சரியப்படுத்திய வீரன்.

கட்டிக் காற்சட்டையும் சேட்டுமாக அந்த "சின்னப் பொடியன்" தோற்றத்தில், இந்தியர்கள் பலதரம் ஏமாந்திருக்கிறார்கள்.

மூலைமுடுக்கெல்லாம் நுழைந்து இந்தியர்கள் ஒத்தியெடுத்த வேளைகளிலெல்லாம், அவன் நேசித்த மக்களால் பொத்தி வைத்துப் பாதுகாக்கபட்ட குழந்தை.

எப்படி அனவால் நின்றுபிடிக்க முடிந்தது...?

அது அதிசயம் தான்!

ஆனால், அவனைப் பாதுகாத்தது வெறும் அதிஷ்டம் மட்டு மல்ல.

விவேகம், புத்திக்கூர்மை, மக்கள் செல்வாக்கு அவனுடைய சின்ன உருவம் இவற்றுக்கு மேலாக அவனுடைய உறுதியும், துணிச்சலும்.

இவைதான் அவனை உயிர்வாழச் செய்வித்தன.



அடுத்த காலை நிச்சயமற்றிருந்த அந்த நாட்களில் அவனோடு தான் நம்பிக்கையோடு தூங்கப் போகலாம். சாவு எங்களைத் தட்டி எழுப்பிய எத்தனையோ தடவைகளில் தப்பி வந்தது அவ னால்தான் எனலாம்.

அப்போது யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த பொட்டம்மானும் தோழர்களும் அவனது "ஒழுங்கமைப்பு"களால் பல சர்ந்தப்பங் களில் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள்.

"மக்கள் நேசம்" அவனது உயரிய குணாம்சங்களில் ஒன்று. அவன் அவர்களில் வைத்த அன்பு அவர்களை அவனில் பாசம் வைக்கவைத்தது.

அந்த நெருக்கம் அலாதியானது; அதுதான் அவனுக்கு கவச மாகவும் இருந்தது.

அந்த நேசத்தின் தொடக்கம், அவன் போராளியான ஆரம்பம். அது 1984ம் ஆண்டின் இறுதிப்பகுதி. தனது பதினேழாவது வயதில் இயக்கத்தில் சேர்ந்தவன், அப்போது முதல் அந்த மக்க ளோடேயே வாழ்ந்தான். அந்த மக்களுக்குக் காவலாய் இருந் தான்.

அவன் மக்களை அணுகிய விதமே வித்தியாசமானது அதனால் தான் அவர்கள் அவனை நெஞ்சிலிருத்தி வைத்திருந்தார்கள்.

"மற்ற இயக்கங்களின் ஊர்கள்" என்று ஒதுக்கிய கிராமங்களில் தான் தூக்கமும், வேலையும். "மற்ற இயக்கங்களின் ஆட்கள்" எனப்பட்டவர்கள் வீடுகளில்தான் குளிப்பும், சாப்பாடும். எல்லா ஊரையும் எம்முடையதாக்கி, எல்லாப்பேரையும் எம்மவர் களாக்கினான்.

31.05.1967 அன்று தனலட்சுமி அம்மாவுக்கும், நவரத்தினம் ஐயாவுக்கும் பிறந்தவனுக்கு விக்னராஜன் என்று பெயரிட் டார்கள்.

தனது 16வது வயதிலேயே "புலிப்படைப் பொடியளுக்குப் பின் னால்" திரியத் துவங்கிவிட்டான்.

பாயில் தலையணை அடுக்கி ஆள்மாதிரிப் போர்த்திவிட்டு இர வில் காணாமல் போனவன்... ஸ்ரான்லி கொலிச்சில் தம்பியை யும், தங்கையையும் இறக்கிவிட்டு, உள்ளே வராமல் மிதிவண் டியைத் திருப்பிக்கொண்டு மற்றப்பக்கமாகப் போனவன்... போய்ப்போய் வந்தவன்....

ஒரு நாள் ஒரேயடியாகப் போய்விட்டான்.

சூட் ஒரு அற்புதமான போராளி.

தனது ஆழகான ஆளுமையால் தோழர்களைத் தன்னோடு இறுகப் பிணைத்திருந்த நண்பன்.

கண்டிப்போடும், பரிவோடும் அரவணைத்து வருடிய இனிய காற்று. அவர்களில் அவன் பொழிந்த பாசமே தனி.

மனங்குழம்பிப்போகின்ற எந்தப் போராளியையும் ஆதரவோடு கதைத்துத் தெளிவூட்டுகிறபோது, அவனொரு பேரசான்.

முழுமையாக என்று சொல்லாவிட்டாலும் இயக்கத்தின் நீண்ட வரலாற்று ஓட்டத்தோடு பெருமளவு கலந்து, அமைதியாக, ஆர வாரமில்லாமல், தனது செயலால் வளர்ந்து மெல்ல மெல்ல உயர்ந்தவன்.

சூட் ஒரு சண்டைக்காரன் அல்ல, அதற்காக சண்டை தெரி யாதவன் என்றும் சொல்லிவிட முடியாது. அதாவது அவன் தேர்ச்சிபெற்ற யுத்த வீரன் அல்ல.

அப்படியானால் அவன் முன்னுக்கு வந்தது..........?

அது சண்டைகளால் அல்ல;

சண்டைக்கு வெளியில் நின்று அவன் போராட்டத்திற்கு ஆற்றிய அளப்பரிய பணிகளால்.

தான் பணியாற்றிய துறைகளிலெல்லாம் தனக்கு கொடுக்கப்பட்ட வேலைகளில் பேர்சொல்லும் முத்திரைகளைப் பதித்து வளர்ந்த போராளி.

சண்டைக்கு வெளியில் நின்று எல்லாப் போராளிகளையும் போல அவனும் போர்க்களத்துக்குப் போகத்தான் துடித்தான். ஆனால், அவனது தேவை அவனை அதிலிருந்து தள்ளியே வைத்திருந்தது.

ஒரு விடுதலை வீரனின் போராட்டப் பணியானது இராணுவ அளவுகோலால் மட்டும் அளவிடப்பட முடியாது.

சண்டையிடுவதுதான் ஒரு விடுதலைப் போராட்டத்தில் பிரதான அம்சம். ஆனால், அது மட்டுமே போராட்டம் ஆகாது.

சண்டை என்பது, போராட்டம் நகர்த்திச் செல்லப்படும் பல்வேறு பரிமாணங்களில் ஒன்று.

சண்டைகளில் நிற்காதபோதும், உண்மையான அர்ப்பண உணர்வோடு வாழ்ந்து, போராட்டத்தின் ஏனைய பரிமாணங் களூடு அபார திறமையாகக் காரியங்களைச் சாதித்த எத் தனையோ போராளிகளுள் அவனும் ஒருவன்.

இந்தியப்படை வெலியெற்றப்பட்டுவிட்டது.

இப்போது அவன் புலனாய்வுத்துறையில்.

பொட்டம்மானின் உற்ற துணைவர்களாக நின்று, இயக்கத் தையும், போராட்டத்தையும், தேசத்தையும் பாதுகாத்த முதன் மையான போராளிகளுள் ஒருவனாக, சூட் அல்லும் பகலும் ஓய்வற்றுச் சுழன்றான்.

துவக்கத்தில் யாழ். மாவட்ட புலனாய்வுத்துறைப் பொருப்பாள னாகப் பணி.

அவன் பொறுப்பை ஏற்றபோது அங்கு இருந்த சூழ்நிலை வித்தி யாசமானது. அதனால் மிக்க அவதானமாகவும், மிக்க நிதான மாகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அவன் எச்சரிக்கையோடு அடிகளை வைத்தான்.

நேற்றுவரை எதிரியினால் முற்றுகையிடப்பட்டிருந்த அந்தப் பிராந்தியம். இன்று திடீரென, ஒருநாளில் எங்கள் கைகளுக்கு வந்துவிட்ட காலகட்டம் அது. இந்தியாவின் எச்சசொச்சங்கள் எங்கும் பரவியிருந்த நேரம். "மக்களே போல்வர் கயவர்" என்று அன்றொருநாள் வள்ளுவன் சொல்லியிருந்ததைப் போன்ற நிலைமை.

எவரிலும் சந்தேகம் எழக்கூடிய சூழல்.

மிகக் கவனமாக இனங்கண்டு பிரித்தறிய வேண்டும். எங்கள் புலனாய்வு நடவடிக்கைகளில் தவறு நேர்ந்து, அது மக்களைப் பாதித்துவிடாமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

புலனாய்வுத் தவறுகளினால் மக்கள் எவ்விதத்திலும் துன்பப் பட்டுவிடக்கூடாது, அத்தகைய அவதானத்துடன் செயற்படும் போது நடவடிக்கைகளில் நாங்கள் காட்டும் நிதானமானது, துரோகிகளுக்கு வாய்பளித்து அவர்கள் சுலபமாகச் செயற்பட இடமளிக்கவும்கூடாது.

இப்படிப்பட்ட சிக்கலான ஒரு சூழ்நிலையில் பொறுப்பெடுத்து, மிக நேர்த்தியாகவும் சிறப்பாகவும் தனக்குரிய பணியை சூட் செய்து முடித்தான்.

நாட்கள் உருண்டன.

புலனாய்வுத்துறையின் முக்கியமான ஒரு போராளியாக-

அதன் தாக்குதற் படைப்பிரிவுக்குத் தளபதியாக-

இயக்கத்தின் "கரும்புலிகள்" அணி ஒன்றுக்குப் பொறுப் பாளனாக-

சூட் படிப்படியாக உச்சத்துக்கு வந்தான்.

இயக்கத் தலைமையினது அதீத நம்பிக்கைக்கு அவன் பாத்திர மானான்.

முக்கியத்துவம் மிக்க ஒரு கரும்புலித் தாக்குதல்.

இலக்குப் "பெரியது"

எனவே, ஒழுங்கமைப்பும் பெரிதாக இருந்தது.

திட்டம் திட்டப்பட்டபோது பொட்டம்மான் சூட்டைத்தான் தெரிந் தெடுத்தார்.

தியாகமும், துணிச்சலும், இலட்சிய வேட்கையும் போக... மதிநுட்பமும், விவேகமும், செயற்திறனும் அதிகமாகத் தேவை. இவையெல்லாம் ஒருங்கிணைந்தவன் சூட்.

ஆனால் தலைவரோ ஆளை மாற்றசொன்னார்.

இந்தப் பணியைவிடவும் அதிகமாகப் போராட்டத்துக்கு அவன் பயன்படுவான் என்று அவருக்குத் தெரிந்தது உண்மைதான்.

ஆனாலும், தாக்குதலின் முக்கியத்துவத்தையும், அதன் பிசகாத - துல்லியமான - வெற்றியையும் கருத்திற்கொண்டு பொட்டம் மான் சூட்டைத்தான் வலியுறுத்தினார்.

இருந்தபோதும்-தலைவரது கருத்திற்கிணங்க கடைசியில் முடிவு மாற்றப்பட்டது.

அதன் பின்னர்-

எங்களது இன்னுமொரு கரும்புலி வீரன், அந்த "இலக்கை" மிக வெற்றிகரமாகத் தாக்கி அழித்து வரலாற்றைப் படைத்தான்.

பூநகரிச் சமருக்குப் புறப்படும்போது சூட் தேர்ச்சிபெற்ற ஒரு சண் டைத் தளபதியாக விளங்கினான்.

ஆனால், அவன் இராணுவ ரீதியில் மேலோங்கியதானது நீண்டகால அனுபவத்தில் படிப்படியாக வளர்ச்சிகண்டு அல்ல.

நன்றாக இனங்காணப்பட்டு, திடீரென அவனுக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது.

குறுகியகால இராணுவப் பணியையே அவன் ஆற்றினான்.

ஆனால், அந்தச் சொற்ப காலத்துக்குள்ளேயே பெருந் தளபதி களினது மதிப்பையும், பாராட்டையும் அவன் பெற்றுவிட்டிருந் தான். அது ஒரு இலேசான காரியமல்ல.

அவனது குறுகியகால இராணுவ வளர்ச்சி அசாத்தியமான ஒரு சாதனை.

பூநகரி பெரும் போர்க்களம்.

பல்வேறு படையணிகள், பல்வேறு சண்டை முனைகள், பல்வேறு வழிமுறைகள்.

பரந்த ஒரு பிரதேசத்தில் எழுந்து நின்ற எதிரியின் பெரும் படைத் தளம் ஒன்றின்மீது அதன் எல்லா அரண்களிலும் சமநேரத்தில் தாக்கி, புலிகள் நிகழ்த்திய மிகப்பெரிய படியெடுப்பு.

ஒரு முனையில் சூட்டின் படையணி.

எதிரியின் அரண் தொகுதி ஒன்று சூட்டினது படையணிக்குரிய இலக்கு. அதன் அருகிலிருந்த இன்னொரு அரண்தொகுதி லெப். கேணல் குணாவின் படையணிக்குரிய இலக்கு.

இரண்டு அணிகளும் தமத் இலக்குகளை வீழ்த்திய பின் ஒன் றிணைந்து பிரதான தாக்குதலணி ஒன்றுக்குத் தோள் கொடுக்க வேண்டுமென்பது திட்டம்.

ஆனால் விசயம் பிழைத்துவிட்டது. பூநகரி வெற்றியின் முதல் வித்தாக, சண்டையின் ஆரம்ப நிமிடங்களிலேயே குணா வீழ்ந்து போக - அந்தப் பகுதியில் சண்டை திசை மாறிவிட்டது.

தமது இலக்கைக் கைப்பற்றிய சூட்டினது அணி முன்னேறிய போது, குணாவினது பகுதி பிசகிவிட்டிருந்தது. எதிரி அங்கு தாக்குப்பிடித்துக் கொண்டிருந்தான்.

துணை சேரவேண்டிய அணிக்குத் துணைகொடுக்கவேண்டிய நிலை.

மூர்க்கத்தனமான தாக்குதல் குணாவுக்குரிய பகுதிமீது ஆரம் பித்தது.

இறுக்கமான சண்டை. ஆர் பி ஜி குண்டின் சிதறல்பட்டு அவனது எம்.16 உடைந்து போக, அருகில் நின்ற தோழனுடன் ரி.56ஐ வாங்கிகொண்டு சூட் முன்னேறினான்.

கடுமையாகத் தாக்கிக்கொண்டிருந்த எதிரியின் பலமான அர ணொன்றை சூட் ஆக்ரோசமாக நெருங்கினான்... தனி ஆளாகப் பாய்ந்தான். எதிரிக்கு அருகில் அவன் முன்னேறினான்... மிக அருகில்... போய்விட்டான்... போனவன் திரும்பி வரவில்லை;

அன்பு, குணா, நவநீதன், பாமா, றூபன், கணேஸ், கோபி, அவன்... என்று 458 தோழர்கள்... வெற்றியைத் தந்துவிட்டு வராமலே போய்விட்டார்கள்!

தமிழீழம் இப்போது தலைநிமிர்ந்து நிற்கிறது; அந்த மைந்தர் களின் நினைவோடு; அவர்கள் பெற்றுத் தந்த வெற்றியின் பெருமிதத்தோடு.

இப்போது... நம்பிக்கையோடு காத்திருக்கிறது....

அடுத்த வெற்றிக்காக!

- விடுதலைப்புலிகள் - வைகாசி 1994

www.sangathamil.ca




# ஈகைத்தாய் அன்னை பூபதியின் 03ம் நாள் ஊர்திப்பவனிக்கு மக்கள் நினைவு வணக்கம் செலுத்தினர்!

ஏப்ரல் 15, 2024

ஈகைச் சுடர் அன்னை பூபதி அவர்களுடய 36 ம் ஆண்டின் 03ம் நாள் 15.04.2024 இன்று அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனியானது மூங்கிலாறில் ஆரம்பிக்கப்பட்டு, தொடர்ந்தும் உடையார்கட்டு, வள்ளிபுனம், கைவேலி ஊடாக புதுக்குடியிருப்பு முள்ளிவாய்க்கால் முல்லைத் தீவு வழியாக முள்ளியவளை, ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி, மன்னார், வவுனியா ஆகிய இடங்களுக்கு மக்களின் வணக்கத்துக்காக சென்றடைந்தது. இதில் பெரும் திரளான மக்கள் வீதிகள் தோறும் நின்று நினைவு வணக்கம் செலுத்தி தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தமிழீழத்தின் பல மாவட்டங்களிற்கும் ஈகைச்சுடர் அன்னை பூபதி தாய் அவர்களின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வணக்கத்திற்காக வலம் வரவிருக்கிறது.









# வவுனியா வந்தடைந்த ஈகைச்சுடர் அன்னை பூபதியின் ஊர்திப் பவனி!

ஏப்ரல் 16, 2024

ஈகைச்சுடர் அன்னை பூபதியின் 36 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இடம்பெறும் ஊர்திப் பவனியானது 13.04.2024 அன்று வட தமிழீழம் யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபன் அவர்களின் நினைவுத் தூபி முன் மாலை 4.00 மணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் பொன் மாஸ்ரர் தலைமையில் ஆரம்பமாகி முன்னணியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா.கஜேந்திரன் அவர்களின் நினைவுரையுடன் பயணமான ஊர்தி யாழ் நகரை அண்டிய கொக்குவில் அரசடி, நாவாந்துறை, அரியாலை, நல்லூர், திருநெல்வேலி, வண்ணார்பண்ணை, இணுவில் ஆகிய பகுதிகளூடாக மக்களின் வணக்கத்துக்காக சென்று முதல் நாள் ஊர்திப்பவனியை நிறைவு செய்தது இதில் பெரும் திரளான மக்கள் வீதிகள் தோறும் நின்று நினைவு வணக்கம் செலுத்தி தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

இந்நிலையில் நான்காம் நாளான இன்றைய நாள் (16.04. 2024) வவுனியாவில் மக்கள் வணக்கத்திற்காக ஈகைச் சுடர் அன்னை பூபதி ஊர்திப் பவனி தொடர்ந்து பயணித்து வவுனியா நகர், குருமன்காடு, வைரவபுளியங்குளம், கோயில்குளம், சிதம்பரபுரம், ஆசிகுளம், இலுப்பையடி, தாண்டிக்குளம், ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம், புளியங்குளம், நெடுங்கேணி, கனகராயன்குளம் ஆகிய இடங்களுக்கு மக்களின் வணக்கத் துக்காக சென்றடைந்தது.










# வெடுக்குநாறிமலை சம்பவம் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவிசாரணை ஆரம்பம்!

ஏப்ரல் 16, 2024

கடந்த சிவராத்தி தினத்தன்று வெடுக்குநாறிமலையில் இடம் பெற்ற மனித உரிமைகள் மீறல் சர்ச்சை தொடர்பாக வவுனியா பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு இன்று (16) விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.





விசாரணைக்கு தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், ஆலயத்தின் செயலாளர் மற்றும் கைதுசெய்யப்படடிருந்த இளை ஞர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

விசாரணை தொடர்பில் ஆலய செயலாளர் கருத்து வெளி யிடுகையில் நாங்கள் தொல்லியல் இடங்களை சேதப்படுத்திய தாக தொல்பொருள் திணைக்களத்தினர் சில ஆவணங்களை வழங்கியிருந்தனர்.

குறிப்பாக மலை உச்சியில் தீ மூட்டப்பட்டதையடுத்தே எம்மை கைது செய்ததாகவும் தெரிவித்திருந்தார்கள்.

“நாங்கள் அதனை எரித்தமைக்கான எந்த ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. தீ மூட்டியதாக தொல்பொருள் துறை யினர் புகைப்படம் ஒன்றைக் காட்டினார்கள். அந்தப் புகைப்படம் முதல்நாள் இரவில் அங்கு காவல் கடமைகளில் இருந்த நெடுங்கேணி காவல்துறையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடு.

அதற்கான சான்றுகளை நாம் வெளிப்படுத்தியிருந்தோம். அந்த புகைப்படத்தினையே இன்றைய நாள் அவர்கள் இங்கு சமர்பித் திருந்தார்கள். அது முற்றிலும் பொய்யானது. அதனை நாம் சுட் டிக்காட்டினோம்” என ஆலய செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளதுடன், எதிர்வரும் நாட்களில் நெடுங்கேணி காவல்துறையினர் மற்றும் வனவளத்திணைக் களத்தினரும் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளதாக தெரி விக்கப்படுகின்றது.

# தமிழர்களை பயங்கரவாதிகளென அடையாளப்படுத்தி முன்னெடுக்கும் அரசியல் நாட்டை அழிவுக்குள்ளேயே தள்ளும்!

## அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா. சத்திவேல்

ஏப்ரல் 16, 2024

தமிழர்களை தொடர்ந்தும் பயங்கரவாதிகள் என அடையாளப் படுத்தி செய்ய முற்படும் அரசியல் நாட்டின் எதிர்காலத்தை மேலும் அழிவுக்குள்ளேயே தள்ளும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற் கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அருட்தந்தை மா.சக்திவேல் இன்று செவ்வாய்க்கிழமை (16) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.






அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரச பயங்கரவாதம் தமிழர் தரப்பில் பேரினவாதத்தின் கைக் கூலிகளாக செயற்பட்டோரை தவிர ஏனைய அனைத்து தமிழர் களையும் தொடர்ந்து பயங்கரவாதிகளாகவே பார்க்கிறது என் பதை எழுத்தாளரும் கவிஞருமான தீபச்செல்வனை அண்மை யில் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் அழைத்து நடத்திய நீண்ட விசாரணை மூலம் புலப்படுத்துகின்றது.

ஒரு நூல் வெளியீட்டு நிகழ்வினை தலைமை தாங்கியமையை காரணம் காட்டி விசாரணை என அழைத்து குறித்த நூல் புலிகளின் மீளுருவாக்கம் தொடர்பில் கருத்துள்ளனவா? என கேட்டு விசாரணை நடத்தியமை தமிழர் தாயகத்தின் இலக் கியவாதிகள், எழுத்தாளர்கள் என்போரின் கருத்து சுதந்திரம் எழுத்து சுதந்திரம் என்பவற்றுக்கு எதிரான அச்சுறுத்தல் மட்டு மல்ல அடிப்படை உரிமை மீறலுமாகும்.

இத்தகைய அச்சுறுத்தல் உளவியல் தாக்குதலை வன்மையாக கண்டிப்பதோடு இத்தகைய தாக்குதலுக்கு எதிராக இலக்கிய வாதிகள், எழுத்தாளர்கள் என்போர் ஜனநாயகத்தின் வழியில் எழுதுகோலினை(பேனை) கையில் எடுத்து தமது எதிர்ப்பினை வெளியிடுதல் வேண்டும்.

கருத்து சுதந்திரம் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் என்பவற்றை நசுக்குவதற்காக நிகழ்நிலை காப்பு சட்டத்தை நிறைவேற் றியுள்ள ஆட்சியாளர்கள் தமிழக தாயகத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மூலம் போர்க்கால நிகழ்வுகளை வெளிக் கொண்டுவரும் இலக்கியவாதிகள் எழுத்தாளர்கள் என்பவரை இலக்கு வைத்து அவர்களின் கழுத்தை நெரிக்க முற்படுவது ஜனநாயத்திற்கு எதிரான அராஜகமே.

பயங்கரவாத தடுப்பு பிரிவினர் நடாத்தியுள்ள இத்தகைய விசாரணை மூலம் இலக்கியவாதிகள், எழுத்தாளர்கள் என்ப வரை மன உளைச்சலுக்குள் தள்ளுவதோடு அவர்களின் குடும்ப உறவுகளையும் அச்சுறுத்தல் உளவியல் தாக்குதலுக் குள் உட்படுத்தி தாம் பாதுகாப்பில்லா சூழலிலா வாழ்கிறோம் எனும் மனநிலைக்குள் தள்ள வைப்பது பயங்கரவாத தடுப்பு பிரிவினரின் நோக்கமாகவும் இருக்கலாம்.

இராணுவத்தினரை பயன்படுத்தி மாவீரர் துயிலும் இல் லங்களை அழித்து அதன்மூலம் தியாக வரலாற்றை அழிக்க நினைத்து அது கை கூடாத நிலையில் நினைவேந்தலை தடுக்க சட்டம் கொண்டுவர உள்ளனர். இன்னொரு பக்கம் தொல்லியல் திணைக்களம் மூலம் தமிழர்களின் வரலாற்று தொன்மையை சிங்கள பௌத்தமாக்கி ஆக்கிரமித்துக் கொண்டு இப்போது போர்கால வரலாற்றினை அடுத்த சாந்ததியினருக்கு கடத்தும் இலக்கியவாதிகள் எழுத்தாளர்கள் என்போரை அச்சுறுத்தி அடக்கு முறையை பிரயோகிக்க நினைப்பது அரச பயங்கர வாதத்தின் அரசியல் கோழைத்தனமே அன்றி வேறில்லை.

போர்க்கால அனுபவங்கள், போரின் வலிகள் அதனை சுமந்து நிற்கும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தேங்கிக்கிடக்கின்றது. அதனை இலக்கிய வடிவில் வெளியில் கொண்டு வருவதும் அதனை தமது வாழ்வு பயணத்தோடு சேமித்து கடப்பதும் உள வியல் சுகமாகும். அத்தோடு வரலாற்றையும் சேமிக்கும் செயற் பாடுமாகும். இதனை பயங்கரவாதமாக்குவது பயங்கரவாத சிந்தனை உளவியலாகும். இதுவே பயங்கரவாதம். இத்தகைய பயங்கரவாதத்திற்கு ஆட்சியாளர் முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும். இல்லையேல் எதிர்காலம் இன்னும் பயங்கர மாகவே இருக்கும்.

பயங்கரவாத தடுப்பு பிரிவினர் தீபச்செல்வனை விசாரணைக்கு உட்படுத்தியதன் மூலம் அவர்கள் நோக்கத்தை அடைய முடி யாது. எந்த நூல் தொடர்பாக அவர் விசாரணைக்கு அழைகப்பட் டாரோ அந்த நூலான 30 நாட்களை நீந்தி கடந்த நெருப்பாறு எனும் மூத்த எழுத்தாளர் நா. யோகேந்திரநாதன் அவர்களின் நோக்கம் மிக மிக வேகமாக மக்களை சென்றடையும். அத் தோடு தீபச்செல்வன் அவர்கள் எழுத்தின் வீச்சும் மேலும் விரி வடையும். இதற்கு தேசிய பற்றாளர்கள் தமது ஆதரவினையும் வழங்குவர்.

தமிழர்களின் தேசியம் தொடர்பான சிந்தனையை 2009 இனப் படுகொலையோடு முடிவுக்கு வந்துவிட்டோம் என ஆட்சியாளர் நினைக்கும் போது அது ஜனநாயக வடிவில் மீண்டும் மக்கள் மயமாகி உயிர்ப்பு பெற்று வருகின்றது. தற்போது பேரினவாதத் தின் அடக்குமுறை, ஆக்கிரமிப்பு என்பவற்றை யுத்தமற்ற சூழ் நிலையிலும் நேரடியாக காண்பவர்கள் ஆங்காங்கே ஜனநாயக வடிவில் தமது தேசிய சிந்தனையை மீளுருவாக்கம் செய்து வருகின்றனர். இதற்கு பயங்கரவாதம் சாயம் பூசுவதற்கு எடுத் தாளர்களை விளக்க வைக்கின்றனர்.

பேரினவாதிகள் தமிழர்களை தொடர்ந்தும் பயங்கரவாதிகள் என அடையாளப்படுத்தி செய்ய முற்படும் அரசியல் நாட்டின் எதிர்காலத்தை மேலும் அழிவுக்குள்ளேயே தள்ளும். அழி வுகளை அரசியலாக்குவது நீடிக்க முடியாது என்பதை தற் போதைய சூழ்நிலை உணர்த்துகின்ற போது அதனை ஏற்றுக் கொள்ளாது வேறு திசையில் மக்களை திருப்பம் அடைவது வெட்கக்கேடு.

# கோவிட் தொற்று பற்றி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி அவர்கள் தெளிவுபடுத்தல்!

ஏப்ரல் 16, 2024

கோவிட் தொற்று பற்றிய உலக சுகாதார நிறுவனம் மற்றும் இலங்கை சுகாதார அமைச்சின் ஆலோசனைகள் தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்திய மூர்த்தி தெளிவுபடுத்தியுள்ளார்.

யாழ் மாவட்டத்தில் நீண்ட காலத்திற்கு பின்னர் கொவிட்தொற்று காரணமாக பெண் ஒருவர் உயிரிழந்துள்ளநிலையில், மக்கள் மத்தியில் தேவையற்ற சந்தேகங்களை தீர்க்கும் வகையில் குறித்த தகவலை தனது சமூக வலைத்தளத்தில் வெளியிட் டுள்ளார்.

இதன்படி 2023 ஒக்டோபர் 10ம் திகதி முதல் கீழ்வரும் 7 விட யங்கள் சுகாதார அமைச்சினால் சுற்றறிக்கையொன்று வெளி யிடப்பட்டு பின்பற்றப்படுகிறது.

1. கோவிட் தொற்று ஏற்பட்டவர்களுக்கு ஏனைய சுவாசத் தொற்று நோய்கள் ஏற்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்ற அதே உரிய பாதுகாப்பும் பராமரிப்பும் வழங்கப்பட வேண்டும். பொருத் தமான சிகிச்சையும் வைத்தியசாலையில் வழங்கப்படும்.

(பொதுவாக சுவாச தொற்று வருத்தம் இன்னொருவருக்கு இலகு வாக பரவலாம். ஆகவே சுவாசத் தொற்று உடையவர்கள் உரிய அடிப்படை சுகாதார விதிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அவ்வாறே தொற்று உடையவருக்கு அருகில் இருப்பவர்கள் மற் றும் பராமரிப்பவர்கள் உரிய சுகாதார பழக்கவழக்கங்களைப் பேண வேண்டும்.)

2. எதாவது நோய் ஒன்றின் சிகிச்சைக்கு முன்னர் அல்லது சத்திர சிகிச்சை ஒன்றிற்கு முன்னர் கோவிட் தொற்றும் இருக் கின்றதா என பரிசோதனைகள் செய்யப்படுவதில்லை.

3. கோவிட் தொற்று உடையவரிற்கு அருகில் இருந்தவர்களிற்கு அல்லது அவருக்கு அருகில் சென்று சிகிச்சை அளித்தவர் களுக்கு கோவிட் தொற்று இருக்கின்றதா என பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

4. இருமல் மற்றும் தடிமன் போன்ற சுவாசத் தொற்று ஏற்பட் டவர்கள் இன்னொருவருக்கு தொற்று ஏற்படாத வகையில் உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். குறிப்பாக அதிகளவில் ஒன்றுகூடும் இடங்களில் உரிய முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

5. கோவிட் இறப்பு ஏற்படும் போது உரிய சுகாதார விதிகளைக் கடைப்பிடித்து வீடுகளில் இறுதிச் சடங்கை செய்யமுடியும்.




6. சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்பு பிரிவின் அறி வுறுத்தலின் அடிப்படையில் சமுதாயத்தில் கோவிட் தொற்று இருக்கின்றதா என பலருக்கு பரிசோதனைகள் செய்யப்படுவ தில்லை.

7. தனியார் சிகிச்சை நிலையங்களும் இந்த நடைமுறை களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

# அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டும்!

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

ஏப்ரல் 16, 2024

முன்னாள் போராளி செல்வநாயகம் ஆனந்தவர்ணன் கடந்த 2024.03.26 இல் கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரி வினால் விசாரணைக்காக அழைக்கப்பட்டு அன்றைய தினமே கைது செய்யப்பட்டு கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலை யில் வெலிக்கடையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரது முகநூலில் கடந்த 2020 இல் ஒரு படமும் 2022 இல் ஒருபடமும் பகிரப்பட்டதாகவும் அதன் மூலம் புலிகளை மீளுரு வாக்கம் செய்யும் முயற்சி என்ற பொய்க் குற்றச்சாட்டினைச் சுமத்தி அவரைத் தடுத்துவைத்துள்ளனர். ஏற்கனவே அவர் சுமார் 9 ஆண்டுகள் கொடிய சிறையில் அடைக்கப்பட்டு சித்திர வதைகளுக்கும் பல பொய் வழக்குகளுக்கும் முகம் கொடுத்து விடுதலையாகி தனது பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த நிலை யில் மீண்டும் கைது செய்யப்பட்டு கொடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ளார்.

அடிப்படை வசதிகள் மிகவும் மோசமாகவுள்ள சுமார் 400 பேர் மாத்திரம் அடைக்கப்படக்கூடிய வெலிக்கடை விளக்கமறியல் சிறையில் 2286 பேர் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிறைச் சாலையில் அடைத்துவைக்கப்பட்டுள்ளார்.

அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள வெலிக்கடைச் சிறைச் சாலையில் இன்று (16-04-2024) அவரைச் சந்தித்து உரை யாடியிருந்தேன். சுமார் 3 வருடங்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகள் இயக்கச் சீருடையில் உள்ள படத்தை முகநூலில் பகிர்ந் தாகக் குற்றம் சுமத்தி அதன் மூலம் புலிகளை மீளுருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டதாகவும் குற்றம் சுமத்தி தன்னை கைது செய்து அடைத்துள்ளத் தெரிவித்தார். மேலும் அடுத்த தடவை எப்போது நீதிமன்றில் முற்படுத்துவார்கள் என்ற திகதிகூடத் தெரியாத நிலையில் தன்னைத் தடுத்து வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். தன்னைக் கைது செய்து அடைத்துள்ளமையி னால் தனது பிள்ளைகள் அநாதரவான நிலையில் இருப்ப தாகவும் தனது விடுதலைக்கு அழுத்தம் கொடுக்குமாறும் மிகுந்த வேதனையுடன் கோரினார்.

கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழர்களது குரல் வளையை நசுக்கி தமிழர்களை தமது கொத்தடிமைகளாக வைத்துக் கொள்வதற்கான எல்லையற்ற அதிகாரத்தை பொலீசாருக்கு வழங்கியுள்ளது. பொலீசார் இனவாதமாகவே செயற்படுகின்றார்கள். மீளுருவாக்கம் என்ற பொய்க்குற்றச் சாட்டுக்களின் கீழ் ஆனந்தவர்ணன் கைது செய்யப்பட்டுள் ளமையை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

ஆனந்தவர்ணன் உடனடியாக விடுதலை செய்யப்படல் வேண் டும். அத்துடன் கொடிய பயங்கரவாதத் தடைச்சட்ட முழுமை யாக நீக்கப்படல் வேண்டுமெனவும் வலியுறுத்துகின்றோம். அச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏனைய அரசியல் கைதிகள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்படல் வேண்டுமெனவும் கோருகின்றோம்.

நன்றி




செல்வராசா கஜேந்திரன்
பாராளுமன்ற உறுப்பினர்
பொதுச் செயலாளர்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

# திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் கோவில் காணியில் சட்டவிரோத புத்தர்சிலை திறப்பு!

ஏப்ரல் 17, 2024

திருகோணமலை மடத்தடி வீரகத்தி பிள்ளையார் ஆலய காணியில் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டு வந்த புத்தர் சிலை திறந்து வைக்கப்பட்டது.



திருகோணமலை சிவபுரி கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட மடத்தடி பகுதியில், வீரகத்தி பிள்ளையார் ஆலயத்திற்கு சொந் தமான காணியில் கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி முதல் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டுவந்த புத்தர்சிலை கடந்த வெள்ளிதிறந்து வைக்கப்பட்டது.

ஆப்பகுதியில் கடந்த 2019 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சட்ட விரோதமான முறையில் தமிழ் மக்களுடைய எதிர்ப்பையும் மீறி புத்தர்சிலை ஒன்று வைக்கப்பட்டது. அவ்விடத்திலேயே தற் போது பாரிய கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

சட்ட விரோத கட்டுமானம் தொடர்பாக திருகோணமலை நகராட்சி மன்றத்திற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து நகரசபையின் செயலாளர் அப்பகுதிக்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டு கட்டுமானங்களை பார்வையிட்டிருந்தார். கட்டு மானப்பணிகளுக்காக நகராட்சி மன்றம், நகர அபிவிருத்தி அதிகாரசபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை உட்பட எவ்வித அனுமதிகளும் பெறப்படாத நிலையிலேயே கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

வீரகத்தி பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமான 2 ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதிகள் 200க்கும் மேற்பட்ட சிங்கள குடும்பங் களினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும், சட்ட விரோதமான முறையில் புத்தர்சிலை நிறுவப்பட்டுள்ளதாகவும் இதுபோன்ற செயற்பாடுகள் இன நல்லிணக்கத்தை பாதிக்கும் எனவும் தமிழ் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.



பௌத்த மயமாக்கலின் மூலம் தமிழர் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களுடைய காணிகள் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டு சிங்கள மயமாக்கப்பட்டு வருவதாகவும், சிறிய புத்தர் சிலை வைப்பதில் தொடங்கி அது விகாரையாக மாற்றப்பட்டு சிங்கள குடியேற் றங்களை மேற்கொள்ளும் வரையிலான செயற்பாட்டை அரசு முன்னெடுப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட் டுள்ளது.

# கல்முனை வடக்கில் நிர்வாக அடக்குமுறையை எதிர்த்து 24 நாளாகவும் தொடரும் பொதுமக்களின் கவனயீர்ப்பு போராட்டம்!

ஏப்ரல் 17, 2024

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 24 நாளாக புதன்கிழமை (17) கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

சுட்டெரிக்கும் வெயிலின் கொடூரத்திலும் நிழல் கூடாரம் அமைக்கத் தடை விதித்த நிலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலக தீர்விற்கான தமது கோரிக்கைகளை முன் வைத்து பொது மக்கள் தம்மைக் காக்க பனைமட்டைகளைத் தாங்கி போராடி வருகின்றனர்.







குறித்த பிரதேச செயலகத்தின் முன்பாக கடந்த மார்ச் மாதம் திங்கட்கிழமை(25) பொதுமக்கள் பல்வேறு சுலோகங்களை உள்ளடக்கிய பதாதைகளை தாங்கிய வண்ணம் அமைதி வழியில் ஒன்று கூடி போராட்டம் ஒன்றினை முன்னெடுத்து இருந்தனர். அத்துடன் கல்முனை வடக்கு பிரதேச செயலக நிருவாக செயற்பாடுகளுக்கெதிரான அடக்குமுறைகளுக்கும் அத்துமீறலுக்குமான குறித்த எதிர்ப்புப் போராட்டம் தொடர்ச்சியாக குறித்த பிரதேச செயலகத்தின் முன்பாக உள்ள வீதியின் இரு மருங்கிலும் காலை மாலை இரவு என இடமாறி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று கல்முனை வடக்கு பிரதேச செயலக நிருவாக செயற்பாடுகளுக்கு எதிரான அடக்கு முறைகளுக்கும் அத்துமீறல்களுக்குமான எதிர்ப்பு போராட்டம் இவ்வாறு தொடராக முன்னெடுக்கப்படுவதாக பொதுமக்கள் குறிப்பிட்டனர்.

மேலும் கடந்த காலங்களில் உதவி அரசாங்க அதிபர் பிரிவாக செயல்பட்டு வந்த மேற்குறித்த பிரதேச செயலகம் 1988 களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து 1993 ஆண்டு அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாக கடந்த 30 வருட காலமாக இயங்கி வருவதாகவும் ஊடகங்களிடம் சுட்டிக்காட்டுகின்றனர்.

இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம் உயர் அதிகாரிகள் வரை குறித்த பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதன் காரணமாக பொது மக்களாகிய தாங்கள் இப்போராட்டத்தை ஆரம்பித்து உள்ளதாக குறிப்பிடுகின்றனர்.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம் பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிருவாக அடக்குமுறைகளையும் கணடித்தும் திட்டமிடப்பட்டு பிரதேச செயலக உரிமைகளை ஒடுக்கும் நிருவாக அடக்கு முறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது எனவும் அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை தமது அமைதிப் போராட்டம் தொடரும் என மேலும் மக்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த பிரதேச செயலக விடயம் தொடர்பில் இறுதியாக கடந்த 2019 ஆண்டு கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக உண்ணாவிரத போராட்டம் பல அரசியல்வாதிகள் பிரமுகர்களின் போலி வாக்குறுதிகளால் போராட்டத்தை கைவிடும் நிலை ஏற்பட்டிருந்தது.

மேற்குறித்த உண்ணாவிரதப் போராட்டமானது அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்தி தரவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பிரதேச செயலகத்தின் முன்னால் உண்ணாவிரத போராட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இதில் கல்முனை சுபத்திராம விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், கிழக்கிலங்கை இந்துகுருமார் ஒன்றிய தலைவர் ஸ்ரீ க.கு.சச்சிதானந்தம் சிவம் குரு, கல்முனை மாநகரசபை உறுப்பினர்களான சா.சந்திரசேகரம் ராஜன் மற்றும் அழகக்கோன் விஜயரத்னம் ஐக்கிய வணிகர் சங்கத்தின் தலைவர் கிருஷ்ணப்பிள்ளை லிங்கேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டு களமிறங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பிற்கு சென்றடைந்த ஈகைச்சுடர் அன்னை பூபதியின் ஊர்திப் பவனி!

ஏப்ரல் 18, 2024

ஈகைச் சுடர் அன்னை பூபதி அவர்களுடய 36 ம் ஆண்டின் 06ம் நாள் 18.04.2024 இன்று அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திப்பவனியானது மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் வணக்கத்திற்காகப் பயணித்திற்கொண்டிருக்கிறது. இதில் பெரும் திரளான மக்கள் வீதிகள் தோறும் நின்று நினைவு வணக்கம் செலுத்தி தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தமிழீழத்தின் பல மாவட்டங்களிற்கும் ஈகைச்சுடர் அன்னை பூபதி அவர்களின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வணக்கத்திற்காக வலம் வரவிருக்கிறது.





# மட்டு. பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்தை கண்டித்து பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தின் முன் ஆர்ப்பாட்டம்!

ஏப்ரல் 18, 2024

மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் இடமாற்றத்தை கண்டித்து ஆர்ப்பாட்டம் ஒன்று பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயத்தின் முன்னால் ஆரம்பாட்டம் இன்று வியாழக்கிழமை நடைபெற்றது.



பழுகாமத்திலுள்ள மூன்று பாடசாலைகளிலும் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் என பலரும் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

குறுகிய காலத்தில் வலயத்தை முன்னேற்றிய கல்விப் பணிப்பாளர் எமக்கு வேண்டும், அரச அதிகாரிகள் மீதான அரசியல் பழிவாங்கலை உடன் நிறுத்து, பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளரின் முறைகேடான இடமாற்றத்தை வன்மையாக கண்டிக்கின்றோம் போன்ற பல வாசகங்கள் எழுதிய பாதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலகத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிவந்த சிவினந்தம் சிறிதரன் அவர்களை இடமாற்றம் செய்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், மீண்டும் சி.சிறீதரனை பட்டிருப்பு வலயத்திற்கு கல்விப் பணிப்பாளராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து, கிழக்குமாகாண ஆளுனர், கல்வி அமைச்சின் செயலாளர், பிரதம செயலாளர், மாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் கவனத்தை ஈர்த்து இவ் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.



# யாழ். நல்லூரில் ஈகைச்சுடர் அன்னை பூபதியின் 36ஆம் ஆண்டு நினைவேந்தல்!

ஏப்ரல் 19, 2024

ஈகைச்சுடர் அன்னை பூபதியின் 36 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றைய நாள் வெள்ளிக்கிழமை காலை வட தமிழீழம், யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவிடத்திற்கு அருகில் நடைபெற்றது.






கடந்த 1988 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரை வெளியேறுமாறு கோரி 8 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து அன்னை பூபதியம்மா மட்டு மாமாங்கேஸ்வர ஆலய முன்றலில் மார்ச் 19 ஆம் திகதி உண்ணாநேன்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்த நிலையில், ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதி உயிர் நீத்தார்.








# வட தமிழீழம் – யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழீழத் தாய் அன்னை பூபதிக்கு புகழ் வணக்கம்!

ஏப்ரல் 19, 2024

இந்தியப் படைகளின் அத்துமீறிய செயற்பாடுகளிற்கு எதிராக உண்ணாநோன்பிருந்து தன்னுயிர் நீத்த ஈகைச்சுடர் அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வுகள் இன்றைய நாள் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.





யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இவ் நினைவேந்தல் நிகழ்வுகளின் போது பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட பெருந்திரளானவர்கள் பங்குகொண்டு அன்னை பூபதிக்கு தங்கள் புகழ் வணக்கங்களைச் செலுத்தியிருந்தனர்.







# யாழ்ப்பாணத்தில் புத்தூர், மாதகல் மற்றும் இளவாலைப் பகுதிகளில் இருந்து சுண்ணக்கல் கடத்தல் தொடர்கின்றது!

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

ஏப்ரல் 19, 2024

யாழ்ப்பாணத்தில் இருந்து தற்போதும் தினசரி சுண்ணக்கல் அகழப்பட்டு இரகசியமான முறையில், திருட்டுத்தனமாக திருகோணமலையில் அமைந்துள்ள சீமெந்து தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்படுவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தகவல் வெளியிட்டுள்ளார்.

“காங்கேசன்துறையில் இயங்கிய சீமெந்து ஆலைக்காக சுண்ணக்கல் அகழ்ந்த பிரதேசங்களான காங்கேசன்துறை, பலாலி தெற்கு ஆகிய பகுதிகளில் உள்ள பாரிய இரு குழிகளும் இன்று மூடப்படமால் இருக்கின்றது.

ஆபத்தான நிலையில் குடிமனைகளின் நடுவே இந்த குழிகள் உள்ளன. இந்தநிலையில், தற்போது புத்தூர், மாதகல், இளவாலைப் பகுதிகளில் சிலர் இரகசியமான முறைகளில் சுண்ணக்கல்லை அகழ்ந்து மூடிய பார ஊர்திகளில் எடுத்துச் செல்கின்றனர்.

அவ்வாறு தினமும்10 முதல் 15 வரையான பார ஊர்திகளில் (கெண்டெயினர்களில்) கற்கள் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கு எந்தத் திணைக்களமாவது அனுமதி வழங்கியதா“ எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

அதேவேளை இதற்குப் பதிலளித்த புவிச் சரிதவியல் திணைக்களமோ அவ்வாறான எந்தவொரு அனுமதியும் வழங்கப்படவில்லை எனத்தெரிவித்துள்ளது.



அதேநேரம் பூநகரி பொன்னாவெளியில் தொடர்புடைய சீமெந்து தொழிற்சாலையே சுண்ணக்கல் அகழ முற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அன்னை பூபதியின் 36ம் ஆண்டு நினைவேந்தல், தென்தமிழீழம் - 19.04.2024

















# சிறீலங்கா படைகளினால் படுகொலை செய்யப்பட்ட கிளிபாதரின் 16ம் ஆண்டு நினைவேந்தல்!

ஏப்ரல் 20, 2024

தமிழ் மக்களின் மனங்களில் என்றும் வாழும் படுகொலை செய்யப்பட்ட கிளிபாதரின் 16 ம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சனிக்கிழமை (20) வவுனிக்குளம் பகுதியில் உணர்வுப் பூர்வமாக நடைபெற்றது.



20.04.2008 அன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி வன்னிவிளாங்குளம் அம்பாள்புரம் 6 ம் கட்டை பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியின் கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சேவியர் கருணாரட்ணம் அடிகளார் (கிளி பாதர்) அவர்களின் 16 ம்



ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சனிக்கிழமை (20) வவுனிக்குளம் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் உணர்வுப் பூர்வமாக இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட தாழ்வுப் பாட்டு பங்குத்தந்தை அருட்பணி பெப்பி சோசை அடிகளார் அவர்களின் தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது விசேட வழிபாடுகள் நடைபெற்றது.

இதேவேளை யுத்தத்தில் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்ட பிரான்சிஸ் ஜோசப் அடிகளாருக்காகவும் அவருடன் காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்காகவும் உயிரிழந்த உறவுகளுக்காகவும் மன்றாடப்பட்டது.

அதனை தொடர்ந்து கிளிபாதர் அவர்களின் கல்லறைக்கு மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

மல்லாவி பங்குத்தந்தை நியூமன் அவர்களது தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவு வணக்க நிகழ்வில் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக ஆன்மீக இயக்குனர் மைக் டொனால்ட் கொழும்பு யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



சிறீலங்கா இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியின் கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்ட சேவியர் கருணாரட்ணம் அடிகளார் (கிளி பாதர்) வடகிழக்கு மனித உரிமைகள் பணிப்பாளராகவும் யுத்த காலங்களில் மக்களுக்கு மனிதாபிமான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வந்த நிலையில் 20-04-2008 அன்று ஞாயிற்றுக்கிழமை அன்று மல்லாவி வன்னிவிளாங்குளம் அம்பாள்புரம் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயம் ஒன்றில் ஆராதனையில் கலந்து விட்டு தனது வாகனத்தில் திரும்பிக்கொண்டு இருந்த பொழுது கிளைமோர் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தையிட்டி பொதுமக்கள் காணியை கையகப்படுத்த உத்தரவு!

ஏப்ரல் 21, 2024



வலிகாமம் வடக்கு தையிட்டி திஸ்ஸ ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ள தனியார் காணியை விகாரைக்கு உரித்தாக்குவதை உறுதி செய்வதோடு அதற்குப் பதிலாக அப்பகுதி தமிழ் மக்களுக்கு வேறு இடத்தில் காணிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு குறிப்பிட்டு ஒருமாத கால அவகாசத்துடன் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளருக்கு தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத்வீரசேகரவை தலைமையாகக் கொண்ட மேற்படி குழுவின் செயலாளர் சூலா ஹேரத் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வலிகாமம் வடக்கில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க திஸ்ஸ ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ள காணிப் பிரச்சினை தொடர்பில் 05-03-2024அன்று சரத் வீரசேகர தலைமையிலான தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் பாராளுமன்ற குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இந்த காணிப் பிரச்சினையானது இன முரண்பாடுகளை மையப்படுத்தி வேரூன்றி இருப்பதாலும், அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்திருப்பதாலும் ஆழமாக ஆராயப்பட்டது.

அதனடிப்படையில் திஸ்ஸ ரஜமகா விகாரை அமைந்துள்ள காணிகள் உள்ளிட்ட அப்பகுதியில் உள்ள காணிகளின் பதிவுகள் அனைத்தும் 2017ஆம் ஆண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு விகாரை அமைந்துள்ள காணியானது ஐந்து பகுதிகளாக பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமையானது பாராளுமன்ற மனுக்கள் பற்றிய குழுவின் பரிந்துரையின் மூலம் தெரியவந்துள்ளது.

அக்குழுவின் இராணுவ அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம், 8.98 ஏக்கர் பகுதியானது விகாரை கொண்டிருப்பது பட்டய நில அளவையாளர்களால் அளவீடு செய்து உறுதி செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் 1956ஆம் ஆண்டு வரைபடத்துக்கு அமைவாகவும், 1971ஆம் ஆண்டு நகரத்திட்டமிடல் வரைபடத்துக்கு அமைவாகவும் குறித்த விகாரை அமைந்துள்ள பகுதியில் உண்மையில் மேலதிகமான நிலங்கள் உள்ளதா என்பதை கருத்தில் கொள்வது பொருத்தமானது.

அதனடிப்படையில், விகாரையைச் சுற்றியுள்ள காணிகளையும், விகாரை அமைந்துள்ள எல்லைக்குள் உள்ள காணிகளையும் அளவீடு செய்து விகாரை உள்ள பகுதியில் தனியார் காணிகள் காணப்படுமாயின் அதற்குப் பதிலாக அருகாமையில் உள்ள வேறு பொருத்தமானி காணிகளை அவர்களுக்கு வழங்குவதற்கு கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், திஸ்ஸ ரஜமகா விகாரைக்குச் சொந்தமான காணிணை முன்னுரிமை அடிப்படையில் விகாரைக்கு வழங்குவதோடு அந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் சம்பந்தமாக அடுத்த ஒருமாத காலத்துக்குள் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட வேண்டும் என்று கோரப்படுகின்றது என்றுள்ளது.

# யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்காக சிறப்பு ஆராதனை!

ஏப்ரல் 21, 2024

யாழ்ப்பாணம் மரியன்னை தேவாலயத்திலும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கான நினைவேந்தல் இன்றைய நாள் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றன.









கடந்த 2029 ஏப்ரல் 21 அன்று தேவ ஆராதனையில் ஈடுபட்டிருந்தபோது உயிர் நீத்தவர்களுக்கு ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், தேவாலய பிரதான மணி ஒலிக்கப்பட்டு கூட்டுத் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண மறைமாவட்ட பங்கு குரு முதல்வர் ஜெயரட்ணம் அடிகளார் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்.

அதனை தொடர்ந்து, உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து பிரார்த்திக்கும் முகமாக மெழுகுவர்த்திகளும் ஏற்றப்பட்டன.

இதில் ஏராளமான கிறிஸ்தவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பெருமளவினர் கலந்துகொண்டனர்.

# மட்டு. சியோன் தேவாலயத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் 5ம் ஆண்டு நினைவு வணக்கம்!

ஏப்ரல் 21, 2024



மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 5 வருட நினைவுதினத்தை முன்னிட்டு குண்டுவெடிப்பு இடம்பெற்ற சீயோன் தேவாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (21) உயிரிழந்தவர்களின் உறவுகள் மலர்களை வைத்து, மெழுகுவர்த்தி ஏற்றி, மௌன வணக்கம் செலுத்தினர்.

கடந்த 2019 ஏப்ரல் 21ஆம் திகதி சீயோன் தேவாலயத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினால் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்ததுடன் 80க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்த குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் 5வது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு சீயோன் தேவாலயத்தில் போதகர் மகேசன் ரொசான் தலைமையில் விசேட ஆராதனையுடன், உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்தி வேண்டி பிரார்த்தனையும் நடைபெற்றது.

அதேவேளை குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட தேவாலயம் இதுவரை புனர்நிர்மாணம் செய்யப்படாமல் பூட்டப்பட்டு இருந்து



வருகின்ற நிலையில், அத்தேவாலயத்துக்கு இன்று உயிரிழந்தவர்களின் உறவினர்கள் சென்று, மலர்களை வைத்து, மெழுகுவர்த்தி ஏற்றி மௌன அஞ்சலி செலுத்தினர்.

# உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பின் சூத்திரதாரிகளை கைது செய்ய கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்!

ஏப்ரல் 21, 2024

மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத் தாக்குதலோடு தொடர்புடைய சூத்திரதாரிகளை கைது செய்யுமாறு கோரி பொதுமக்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் மட்டக்களப்பு காந்தி பூங்காவின் முன்னால் இன்று ஞாயிற்றுக்கிழமை (21) கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த குண்டுவெடிப்பு இடம்பெற்று 5 வருட நினைவுதினத்தை முன்னிட்டு சூத்திரதாரிகளை கைது செய்ய கோரி சமூக செயற்பாட்டாளர்கள் ஆர்பாட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து காந்தி பூங்காவின் முன்னால் பொதுமக்கள் அரசியல்வாதிகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், மதகுருமார்கள் என நூற்றுக்கு மேற்பட்டோர் ஒன்றுதிரண்டனர்.

'அரசே கொலையாளிகளை மறைக்காதே', 'குண்டுவெடிப்பின்





சூத்திரதாரிகளை கைது செய்', 'சர்வதேசமே மௌனத்தை கலைத்து ஈஸ்ரர் குண்டுவெடிப்பின் நீதியை தா', 'வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்', 'ஐ.நாவில் வழங்கிய வாக்குமூலம் என்னாச்சு', '5 ஆண்டு கடந்தும் அவலத்துக்கு நீதி இல்லையா?' போன்ற சுலோகங்கள் ஏந்தியும், கோஷம் எழுப்பியும் சுமார் ஒரு மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர், போராட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# முல்லைத்தீவில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை அபகரித்து சிங்கள மக்களை குடியமர்த்துகிறார்கள்!

### முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்

ஏப்ரல் 25, 2024

முல்லைத்தீவில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை அபகரித்து சிங்கள மக்கள் குடியமர்த்தப்படுகிறார்கள் என முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பில் இன்று (25) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவில் தமிழர்களுடைய பூர்வீக நிலங்களை ஆட்சியாளர்கள் அபகரித்து கொண்டிருக்கிறார்கள். அதாவது முல்லைத்தீவு மாவட்டத்தின் நிலப்பரப்பில் கூடுதலான நிலப்பரப்பினை ஒவ்வொரு திணைக்களங்களின் ஊடாகவும் அபகரித்து அவற்றில் சிங்கள மக்களுக்கு வழங்கி கொண்டிருக்கும் நிலையே காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்த நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 5 இலட்சத்தி தொண்ணூறாயிரம் ஏக்கரில் 74.24 வீதமான காணிகள் வன இலாகாவினுடைய பொறுப்பில் இருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் காலத்தில் இந்த பகுதிகளுக்கெல்லாம் வர பயந்து கொண்டிருந்த நிலையில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் அடர்ந்த காடுகள் என்று கூறக்கூடிய அளவில் 36.72 வீதமான காணிகளும் அதாவது 2 இலட்சத்தி இருபத்தி இரண்டாயிரத்தி ஆறு ஏக்கர் காணிகள்தான் அவர்களுடைய கட்டுப்பாட்டில் இருந்தது.

மக்களுடைய பாவனையில் இருந்த காணிகள் 2009 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் மௌனிக்கப்பட்டதன் பின்பு ஒவ்வொரு திணைக்களங்களாக ஆட்சியாளர்கள் மக்களுடைய பெரும்பாலான விவசாய காணிகளை அபகரித்து வைத்துள்ளார்கள்.

அபகரிக்கப்பட்ட காணிகளில் சில இடங்களில் சிங்கள குடியேற்றங்கள் அதாவது வெலிஓயா என்று சொல்லக்கூடிய 28,500 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு சிங்கள குடியேற்றத்தை ஏற்றி தனி ஒரு சிங்கள பிரதேச செயலக பிரிவாக உருவாக்கி இன்று எங்களுக்கு சவால் விடும் அளவுக்கு மக்கள் தொகையை மேலும் மேலும் வளர்த்தெடுக்கும் விதமாக அவர்களுடைய செயற்பாடுகள் காணப்படுகின்றன

இது தவிர 2009 ஆம் ஆண்டுக்கு பின் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு ஒரு இலட்சத்தி 67 ஆயிரத்தி 484 ஏக்கர் 30.37 வீதமான முல்லைத்தீவின் காணிகளை அபகரித்து வன இலாகா மட்டும் வைத்திருக்கின்றது. இது தவிர 2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 42631 ஏக்கர் காணி அதாவது 7.15 வீதமான காணிகள் அபகரித்து வைத்திருக்கிறார்கள்.

கிட்டத்தட்ட 2 இலட்சத்தி பத்தாயிரம் ஏக்கர் காணிகள் யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு வன இலாகாவினால் மட்டும் அபகரிக்கப்பட்டு எல்லைக்கல்லினை நாட்டி தமிழ் மக்களுடைய பூர்வீக காணிகளை அபகரித்து வைத்திருக்கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில்

விவசாய நடவடிக்கைகள் குறைவடைந்திருப்பதற்கு முழுமுதல் காரணம் வனஜீவராசிகள், வன இலாகா, தொல்லியல் திணைக்களங்கள் அதனைவிட மகாவலி எல் வலயம் இவ்வாறாக மக்களுடைய காணிகளை அபகரித்து வைத்திருக்கின்றார்கள்.

நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் காதர் மஸ்தானின் அறிக்கை ஒன்றில் ஏற்கனவே உள்ள இரண்டு ஜனாதிபதி அவர்களும் பிழைதான் விட்டிருக்கின்றார்கள் என்ற கருத்தையும் ஏற்றுகொண்டு அதாவது, இந்த காணிகள் பறிக்கப்பட்டதில் பிழை நடந்திருக்கின்றது என்ற கருத்தை கூறிக்கொண்டு ரணில் விக்கிரமசிங்க அவர்களூடாக காணிகளை விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளை பார்ப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

இரண்டு இலட்சத்தி பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட காணிகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஐந்து பிரதேச செயலகங்களிலுமாக தமிழ் மக்களுடைய காணிகளை விடுவிக்க ஆவன செய்ய வேண்டும். நிலங்களை அபகரித்து வைத்துக் கொண்டு சிங்கள மக்களை குடியேற்றுவதும், தங்களுடைய திணைக்களங்களூடாக அபகரித்து வைத்து கொண்டிருப்பதும் தான், அரசாங்கத்தினுடைய செயற்பாடுகள் அல்ல என்பதை புரிந்து கொண்டு மக்களிடமிருந்து பறிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கப்பட வேண்டும்.

இதே ஒரு நிலைமையில் ஆறுகள் உள்ள நீர் பரப்புகளாக



சுண்டிக்குளம், நாயாறு, நந்திக்கடல் ஆகியன கிட்டத்தட்ட 69401 ஒரு ஏக்கர் நிலம் நீர்நிலைகளோடு சேர்ந்த நிலங்களாக முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினுடைய புள்ளிவிவரத்தின் ஊடாக நாங்கள் அறியக்கூடியதாக இருக்கின்றது.

29401 ஏக்கர் நிலம் வனஜீவராசிகள் திணைக்களம் கைப்பற்றியுள்ளது. 130 நபர்களுக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களத்தினுடைய வழக்கு தவணையிடப்பட்டு எதிர்வரும் வைகாசி மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அறுநூறுக்கும் மேற்பட்ட ஏக்கர் மக்களுடைய நிலங்களை இரணைப்பாலை, செம்மண்குன்று, அம்பலவன் பொக்கணை, மாத்தளன், வலயர்மடம், முள்ளிவாய்க்கால் போன்ற இடங்களில் உள்ள விவசாயிகளுடைய காணிகள் தான் இவை. இந்த காணிகளை கூட வனஜீவராசிகள் திணைக்களம் தங்களுடைய பறவைகள் சரணாலயம் என்ற பகுதிக்குள் இணைத்து அவர்களுடைய காணிகளையும் பறித்து வைத்திருக்கிறார்கள்.

மக்களுக்குத்தான் அரசாங்கமே தவிர, அரசாங்கத்துக்கு மக்கள் அல்ல. அரசாங்கத்துக்கு மக்கள் என்ற நிலையில் அரசு இயங்கக்கூடாது. மக்களுடைய காணிகளை மக்களுக்கு விடுவித்து அந்த காணிகளின் ஊடாக மக்கள் தங்களுடைய விவசாய நடவடிக்கையை செய்து அவர்களுடைய வாழ்வாதாரத்தை வளமாக கொண்டு நாட்டுக்கு உதவக்கூடிய நிலையில் தான் மக்களை அரசாங்கம் பாவிக்க வேண்டும். அதனை விடுத்து தமிழ் மக்களை ஒடுக்கும் விதமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வாறாக முழு ஏக்கர் காணிகளையும் அபகரித்து கொண்டு சென்றால் மக்கள் எங்கே போவது? மஸ்தான் அவர்கள் கூறிய கருத்தானது உண்மையை ஏற்றுக்கொண்டதாகவும் இருக்கின்றது. அதேநேரம் இன்னும் காணிகள் விடுவிப்பதாகவும் இருக்கின்றது. காணிகள் விடுவிக்கப்பட்டு மக்களிடம் சேர்க்கப்பட்டால் நல்லது என மேலும் தெரிவித்தார்.

# வெடுக்குநாறிமலை விவகாரம்: ஆதாரங்களைக் கோரும் மனித உரிமை ஆணைக்குழு!

ஏப்ரல் 26, 2024

கடந்த மாதம் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் சிவராத்திரி தின வழிபாடுகளில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டமை தொடர்பாக நெடுங்கேணி காவல்துறையினரிடமும், வனவள பணிமனை அதிகாரிகளிடமும் மனித உரிமை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

நேற்று வவுனியா பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆலய நிர்வாகத்தினரிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

அன்றையதினம் நடந்த சம்பவங்கள் தொடர்பாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். அவர்களால் கூறப்பட்ட பல 2 விடயங்களை காவல்துறையினர் மறுத்தனர். சம்பவ இடத்துக்குச் சென்று பார்த்த போது வனப்பகுதிக்குள் தீ மூட்டப்பட்டிருந்தது என்றும், பிளாஸ்ரிக் பொருள்கள், சமையல் கழிவுகள், ஆலயப் பூசைப் பொருள்கள் அங்கு கொட்டப்பட்டிருந்தன என்று வனவள பணிமனையினர் குறிப்பிட்டனர். தொல்பொருள் பணிமனையின் கடிதத்தின் அடிப்படையிலும், வனப் பகுதிக்குள் தீ மூட்டப்பட்டிருந்ததாலும் அங்கிருந்தவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று நெடுங்கேணி காவல்துறையினர் தெரிவித்தனர். தாங்கள் எவர் மீதும் தாக்குதல் நடத்தவில்லை என்றும், வேட்டியை அகற்றி அரைநிர்வாணமாக்கவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். வெள்ளிக்கிழமை, அங்கு நடைபெற்றன என்று கூறப்படும் விடயங்கள் தொடர்பான சான்றுகள் மற்றும் ஆதாரங்களை ஆலய நிர்வாகம் சமர்ப்பிக்க வேண்டும்



என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவுறுத்தியது.

# ஈழத்தமிழர்கள் தமக்கான உரிமையை பெறுவதற்கான வரலாற்றுக் கட்டாயத்தில் உள்ளனர்!

## யாழ். பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் கே. ரி. கணேசலிங்கம்

ஏப்ரல் 26, 2024

ஈழத்தமிழர்கள் தற்போது தமக்கான உரிமையைப் பெறுவதற்கு தம்மை சரிவர தகவமைத்துக் கொள்ள வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தில் உள்ளதாக யாழ். பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

தந்தை செல்வாவின் 47ஆவது நினைவேந்தல் தினத்தை முன்னிட்டு இன்று (26.04.2024) ஆற்றியுள்ள நினைவுப் பேருரையிலேயே இந்த விடயத்தைக்குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறிப்பிடுகையில், "ஈழத்தமிழர்கள் தமக்கான உரிமையை பெறுவதற்கு தம்மை சரிவர தயார்படுத்த வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தில் உள்ளனர்.

வச்சிரம் போன்ற முதுகெலும்பைக் கொண்ட தலைவர்களையும், மூளைப்பலம் கொண்ட அறிஞர்களின் வருகைக்காகவும் தமிழ் மக்களின் வரலாறு செங்கம்பளம் விரித்து காத்துக்கிடக்கிறது.

இந்நிலையில் விலைபோகாத, கண்ணியமுள்ள செயல்திறன் கொண்ட நீண்ட தூர பார்வை மிக்க சிறந்த தலைவர்களை தமிழ் மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதனை நிறைவேற்றவல்ல எவனோ அவனாலே தனது மக்களுக்கான விடுதலையை பெற்றுக் கொடுக்க முடியும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான சிவராம் மற்றும் ரஜீவர்மன் அவர்களின் நினைவேந்தல்!

ஏப்ரல் 27, 2024

சிறீலங்கா ஒட்டுக்குழுவினால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான மாமனிதர் சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினைவாக இன்றைய நாள் சனிக்கிழமை யாழ். ஊடக அமையத்தில் நினைவேந்தப்பட்டது.





இந்நிகழ்வில் யாழ் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டு ஊடகத்துறைக்காகத் தமது இன்னுயிரை நீத்த ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

ஊடகவியலாளரான மாமனிதர் தராக்கி சிவராம் என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் கடந்த 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டு, பின்னர் பாராளுமன்றத்துக்கு அருகில் படுகொலை செய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.



ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்த போது, கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி காலை 10 மணியளவில் யாழ். ஸ்ரான்லி வீதியில் வைத்து உந்துருளியில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

# செம்மணியில் சர்வதேச துடுப்பாட்ட மைதானம் அமைவது ஆபத்தானது!

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன்

ஏப்ரல் 28, 2024

செம்மணியில் முன்னர் உப்பளம் இருந்த பகுதியில் சர்வதேசத் துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கான பகீரத முயற்சியில் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே செம்மணியில் கட்டுமானங்களை மேற்கொள்வதற்குப் பல்வேறு தரப்பினராலும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோது வடக்கு மாகாணசபை அவற்றை நிராகரித்திருந்தது.

தற்போது வடக்கு மாகாணசபையில் மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் செம்மணியில் சர்வதேசத்தரத்தில் துடுப்பாட்ட மைதானம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள் சாதக பாதகங்களை ஆராயாது முடுக்கிவிடப்பட்டுள்ளன.

செம்மணியில் இத் துடுப்பாட்ட மைதானம் அமைந்தால் அயற்பிரதேசங்கள் மாரியில் வெள்ளத்தில் மூழ்கும் அபாயமும், கோடையில் கடும் நீர்ப்பஞ்சத்துக்கு ஆளாகும் அபாயமும் நேரிடும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

செம்மணியில் சர்வதேசத் தரத்திலான துடுப்பாட்ட மைதானத்தை அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணி உப்பளப்பகுதி குடா நாட்டின் பிரதான கடல் நீரேரிகளில் ஒன்றான உப்பாற்றுக் கடல் நீரேரியை அண்டிய தாழ்வான ஈரநிலம் ஆகும். வெளிப்பார்வைக்கு முக்கியத்துவமற்ற வெட்டவெளியாகத் தென்படும் இப் பகுதி சூழலியல் ரீதியாக இன்றிமையாத பங்களிப்புகளை வழங்கி வருகிறது. மாரியில் சுற்றயல் கிராமங்களில் இருந்து வரும் வெள்ள நீரைத்தேக்கி வைத்து நிலத்தடி நீர் மட்டத்தைப் பேணுவதோடு, நிலம் உவராவதையும் தடுக்கிறது.

கூடவே, மேலதிகநீரைக் குடாநாட்டின் இன்னுமொரு கடல் நீரேரியான யாழ்ப்பாணக் கடல் நீரேரிவழியாகக் கடலுக்குள் அனுப்புவதன் மூலம் குடியிருப்புகளையும் வயல் நிலங்களையும் வெள்ளத்தில் மூழ்காமல் பாதுகாக்கவும் செய்கிறது.

அபிவிருத்தி முதலீட்டாளர்களின் வசதிகளையும் நலன்



களையும் மாத்திரமே கருத்திற் கொள்வதாயின் அது நிலைபேறானதாக ஒருபோதும் அமையாது. அபிவிருத்தியில் சுற்றுச் சூழலினதும், அது சார்ந்த சமூகத்தினதும், நலன்கள் முன்னுரிமை பெறும்போதே அது நீடித்த - நிலையான - அபிவிருத்தியாக அமையும்.

# பொது வேட்பாளர் தமிழர்களது அடையாளம்!

## இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்

ஏப்ரல் 28, 2024

தமிழர் ஒருவர் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட முடியா தென்பதை அறிந்துதான் அனைவரும் செயற்படுவதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பொது வேட்பாளர் யார் என்பது முக்கியமல்ல.வடக்கிலும் கிழக் கிலும் வாழுகின்ற தமிழ் மக்களுடைய அரசியல் அபிலா ஷைகள் இந்த பொது வேட்பாளர் மூலம் உலகறியச் செய்யப்பட வேண்டும்.

தமிழர்கள் தங்களது பாரம்பரிய பூமியில் இறைமையோடு வாழ்ந்தவர்கள் அத்தோடு அவர்களுக்கு அவர்களது இறை மையை மீட்டுக்கொடுக்கும் வகையிலான சமஷ்டித் தீர்வினை இந்த பொது வேட்பாளர் முன்வைப்பார்.

தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான ஒருகளமாக நாங்கள் இந்த அதிபர் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரை நிறுத்தி அவருக் கான ஆதரவைக் கேட்போம்.

எங்கள் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கான ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகவே பொது வேட்பாளர் களமிறக்கப்படுவதைத் தமிழர்கள் பார்க்கின்றார்கள்.

இங்கு முக்கியமானது தமிழர்கள் தங்களது அபிலாஷைகளுக் கான அங்கீகாரத்தை இந்த பொது வேட்பாளர் மூலம் கோருகின் றார்கள் என அவர் தெரிவித்துள்ளா



# ஒற்றையாட்சி முறைமைக்கு எதிராக பேராயர் குரல் கொடுக்கவேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

ஏப்ரல் 28, 2024

இலங்கைக்குச் சாபக்கேடாக மாறியுள்ள ஒற்றையாட்சி முறை மையை நீக்க வேண்டும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கை விடுக்க வேண்டும். முஸ்லிம் தலைவர்களும் இதனைச் செய்ய வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித் துள்ளார்.

அத்துடன், முதுகெலும்பிருந்தால் ஒற்றையாட்சி நீக்கப்பட்டு, சமஷ்டி அரசமைப்பு கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பை சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் வெளி யிடட்டும் என்றும் அவர் சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக் கையில்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரிகளைத் தெரி யும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சொல்கின்றார். தாக்குதலுக்குப் பின்னரும் அவர் ஜனாதிபதிப் பதவியில் இருந்தார். எனவே, அரச இயந்திரம் மற்றும் புலனாய் வுப் பிரிவைப் பயன்படுத்தி இதற்குரிய நடவடிக்கையை ஏன் அவர் எடுக்கவில்லை?

75 ஆண்டுகளாக இந்த நாட்டை குட்டிச்சுவராக்கிக்கொண் டிருக்கும் இந்த ஒற்றையாட்சி முறைமையை மாற்றுமாறு பேராயர் கோரிக்கை முன்வைக்க வேண்டும்.

கத்தோலிக்க சமூகம் மீது கரிசனை கொண்டு உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் பற்றி பேராயர் தொடர்ச்சியாகப் பேசி வருகின் றார். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக்கக்கூடாது என்றால் இந்தக் கோரிக்கையை விடுக்குமாறு அவரிடம் மன் றாடிக் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல் முஸ்லிம் தலைவர்களும் ஒற்றையாட்சி முறை மைக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். சஜித் பிரேமதாஸ வாக இருக்கலாம், அநுரகுமார திஸாநாயக்கவாக இருக்கலாம், இவர்கள்கூட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தமாட்டார்கள்.

ஏனெனில் இவர்கள்கூட இலங்கையானது சிங்கள, பௌத்த ஒற்றையாட்சி கொண்ட நாடாகவே இருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர்.

அவர்களிடம் நேர்மை இருந்தால் ஒற்றையாட்சி முறைமையை அழித்து, சமஷ்டி முறைமை கொண்டுவரப்படும் என அறிவிக் கட்டும். முதுகெலும்பிருந்தால் அவர்கள் இதனைச் செய்யட்டும் என குறிப்பிட்டுள்ளார்.



# தமிழர்களின் குரலை மௌனிக்கச் செய்யும் உச்சபட்ட அடக்குமுறை; வலம்புலி ஆசிரியர் மீதான விசாரணைக்கு யாழ் வடமராட்சி ஊடக இல்லம் கண்டனம்!

ஏப்ரல் 28, 2024

வலம்புரி பத்திரிகையில் வெளிவந்த ஆசிரியர் தலையங்கத்தை அடிப்படையாக கொண்டு அப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மீது மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பெயரில் விசா ரணைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை தமிழர்களின் குரல் வளையை நெரித்து தமிழர்களின் குரலை மௌனிக்கச் செய்யும் உச்சபட்ச அடக்குமுறையின் வெளிப்பாடாகும்.

இது தொடர்பில் யாழ் வடமராட்சி ஊடக இல்லம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு இருப்பும் கேள்விக் குறியாக்கப்பட்டு வரும் இன்றைய சூழமைவில் தமிழர்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளையும், நெருக்கடிகளையும் வெளிக்கொணரும் ஒரே வழிமுறையாக ஊடக பரப்பு இருந்து வருகிறது. அதுமாத்திரமல்லாது நீதிகோரும் ஈழத்தமிழர்களது உரிமைக்குரலாகவும் தமிழ் ஊடகங்கள் ஓங்கி ஒலித்து வருகின்றன.

வலம்புரி பத்திரிகையில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம் தொடர்பில் பத்திரிகை பிரதம ஆசிரியர் நல்லலையா விஜய சுந்தரம் அவர்கள் மீது வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் உத்தியோகத்தர் ஒருவர் மூலமாக ஆளுநர் சார்பில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளமையும் அதனடிப்படையில் பொலிஸ் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளமையும் ஊடக சுதந் திரத்தை கேள்விக்குள்ளாக்கும் செயற்பாடாகும்.

இச் செயற்பாடானது தனியே குறித்த ஒரு பத்திரிகைக்கு எதிரான உரிமை மீறலாக கடந்து சென்றுவிட முடியாது. அத்தனை தமிழ் ஊடகங்களின் குரல்வளையை நெரித்து தமிழர்களின் குரலை மௌனிக்கச் செய்யும் உச்சபட்ச அடக்குமுறையின் வெளிப் பாடாகவே இது அமைந்துள்ளது.

பிரபல ஊடகவியலாளர் 'தராகி' சிவராம் அவர்கள் கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வைத்து இனம் தெரியாதவர்களால் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டு நாடா ளுமன்றத்துக்கு அருகில் சடலமாக வீசப்பட்டு இன்றோடு 19 ஆண்டுகள் நிறைவடையும் இந்த தருணத்தில் கூட அதற்கு காரணமானவர்கள் கண்டறியப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப் படவில்லை.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்படுதல், படுகொலை செய்யப்பட்டு சடலமாக வீசப்படுதல், நேரடியாகவே துப்பாக்கிச் சூடு நடத்தி படுகொலை செய்யப் படுதல் போன்ற வடிவங்களில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த அடக்குமுறையானது விசா ரணைகள், வழக்குகள் என்ற போர்வையில் இன்றும் தொடர்ந் தவண்ணமேயுள்ளது.

இவ்வாறு உயிர்ப்பலியெடுப்புகள், காணாமல்போகச் செய்தல்கள் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தவாறே தமிழ் ஊடகத்துறை தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்து வருகிறது. அதனையும் நசுக்கி தமிழர்களது குரலை மௌனிக்கச் செய்யும் விதமாக ஊடகத்துறை மீதான இவ்வாறான தலையீடுகளை நாம் வன்மையாக கண்டிப்பதோடு, இதுபோன்ற அடக்குமுறை செயற்பாடுகள் உடனடியாகவே தடுத்து நிறுத்தப்பட்டு ஊடக சுதந்திரத்தை உறுதிசெய்ய சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் யாழ் வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்துகின்றது.


யாழ் வடமராட்சி ஊடக இல்லம்
JAFFNA VADAMARADCHI MEDIA HOUSE
යාපන වඩමාරච්චි මාධ්‍ය මාලිගාව

பதிவு இல: DS/VOR/KVD/SS-2018-02 28.04.2024

வலம்புரி ஆசிரியர் மீதான விசாரணை தமிழர்களின் குரலை மௌனிக்கச் செய்யும் உச்சபட்ச அடக்குமுறை!



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# திருகோணமலையின் பாரதிபுரம் படுகொலைக்கு 26 வருடங்களின் பின்னர் நீதி (?)

ஏப்ரல் 29, 2024

திருகோணமலையின் பாரதிபுரம் கிராமத்தில், 8 தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதற்கு உடந்தையாக இருந்த பாரதி புரம் காவல் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி உள் ளிட்ட 5 காவல்துறையினருக்கு மேல் நீதிமன்றம் ஆயள் தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

தம்பலகாமம் - பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த வீடொன்றில் வீடு குடி புகுதல் நிகழ்வின்போது 8 தமிழர்கள் ஆயுதம் தாங்கிய இலங்கை காவல்துறை குழுவின் மேற்பார்வையில் சிங்கள கடையர்களால் 26வருடங்களிற்கு முன்னதாக சுட்டுக் கொல் லப்பட்டிருந்தனர்.

திருகோணமலை மேல் நீதிமன்றத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்ட தம்பலகாமம் - பாரதிபுரம் எனும் கிராமத்தில் 1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி கொலை சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், சம்பவத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந் ததாக குறிப்பிட்டு, குற்றவாளிகளாக இனம்காணப்பட்ட அன் றைய காலப்பகுதியில் கந்தளாய் பாரதிபுரம் காவல் நிலையத்



தின் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய காவல் பரிசோதகர்.



உப பரிசோதகர் மற்றும் 3 காவல்துறை சார்ஜன்ட்களுக்கே ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், குற்றம் சாட்டப்பட்ட இரண்டு காவல்துறை உத்தி யோகத்தர்களை மாத்திரம் குற்றமற்றவர்கள் என அறிவித்து விடுதலை செய்யுமாறும் நீதிமன்றம் பணித்துள்ளது.

# மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பட்டித்திடல் படுகொலையின் 37வது ஆண்டு நினைவு நாள்!

ஏப்ரல் 29, 2024

பட்டித்திடல் பகுதியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்ட உறவுகளுக்கு இதுவரை எவ்வித நீதியும் கிடைக் கவில்லை நிவாரணங்களும் கிடைக்கவில்லையென கொல் லப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

பட்டித்திடல் கிராமத்தில் இடம்பெற்ற படுகொலையின்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 17 பேர் படு கொலை செய்யப்பட் டிருந்தனர்.

கடந்த 26 ஆம் திகதியுடன் 37வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. எனினும் இதுவரை பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு எவ்வித நீதியும், நிவாரணங்களும் கிடைக்கபெறவில்லை என பாதிக் கப்பட்ட குடும்பங்களின் உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பட்டித்திடல் கிராமத் தில் 26.04.1987 ஆம் ஆண்டு இறைவழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த ஒரே குடும்ப உறுப்பினர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

அதில் மூன்று கைக்குழந்தைகளும் பாடசாலை மாணவ, மாணவிகளும் அடங்குவர். தாக்குதல் நடந்த வீட்டிலிருந்து கோணன் உலகநாதன் மற்றும் மேரி கணேசபிள்ளை ஆகி யோர் மட்டுமே உயிர் தப்பியிருந்தார்கள்.

குறித்த கொலைச் சம்பவம் நடைபெற்ற தினத்தன்று காலை பட்டித்திடலுக்கு அண்மித்த பகுதியின் திருகோணமலை - மட்டக்களப்பு பிரதான வீதியில் வைத்து கண்ணிவெடி தாக் குதலில் சில சிறீலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந் தனர்.

இதன் பின்னணியிலேயே இப்படுகொலைச் சம்பவம் இடம்பெற் றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் இந்த கொலைச் சம்பவத்தின்போது அவர்களது உறவினரான மேரி கணேச பிள்ளை என்ற 50 வயது பெண் ஒருவர் வீட்டில் இருந்து ஓடிச் சென்று மரங்களுக்குள் ஒழிந்து கொண்டு நடந்த சம்பவத்தை பார்த்ததாக அப்போதைய பத்திரிகைகளுக்கு அவர் இவ்வாறு வாக்குமூலம் வழங்கியிருந்தார்,

இராணுவம் உள்ளே நுழைந்தவுடன் வீட்டின் பெரியவரும் அவருடைய மகனும் பேசத் தொடங்கினார்கள். ஆனால் இராணுவத்தினர் உடனடியாக சரமாரியாக சுடத் தொடங்கி விட்டனர். பின்னர் பெண்களின் அவலச் சத்தம் கேட்டது. மறுபடியும் துப்பாக்கியால் சுடும் சத்தம் கேட்டது. பெண்கள் மட்டும் துப்பாக்கியால் சுடப்பட்ட காயங்களுடன் தள்ளாடியபடி வீட்டுக்கு வெளியே வந்தனர். ஆனால் இராணுவத்தினர்



அவர்கள்மீது பனை ஓலைகளை அடுக்கி எண்ணை ஊற்றி தீயை வைத்தனர். பின்னர் வீட்டுக்கும் தீயை வைத்துவிட்டு அவர்கள் வந்த லொறியில் ஏறிச் சென்றுவிட்டனர் என்று அப்பெண் கூறினார்.

**இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோர்:**

01. உலகநாதன் ஜெயப்பிரியா (வயது 06)
02. உலகநாதன் ஜெயரதி (வயது 01)
03. உலகநாதன் யோகேஸ்வரி (வயது 26)
04. கோணன் பத்தினியன் (வயது 42)
05. பத்தினியன் சீதையம்மா (வயது 34)
06. பத்தினியன் நேசன் (வயது 17)
07. பத்தினியன் பிரகாஸ் (வயது13)
08. பத்தினியன் சோபனா (வயது 12)
09. பத்தினியன் கிருசாந்தி (வயது 10)
10. பத்தினியன் அற்புதராசா (வயது 8)
11. கோணன் பொன்னம்மா (வயது 60)
12. கோணன் மேரி (வயது 23)
13. சின்னத்துரை யோகேஸ்வரி (வயது 29)
14. சிந்தாமணி பாலமுருகன் (வயது 11)
15. சிந்தாமணி யோகராசா (வயது 14)
16. சிந்தாமணி கோகுலேஸ்வரி (வயது 15)
17. சிந்தாமணி செந்தில்மணி (வயது 30)

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com




# கனடாவில் 40 பில்லியனைதொடும் பாதீட்டுப் பற்றாக்குறை!

ஏப்ரல் 16, 2024

கனடாவில் இந்த நிதியாண்டக்கான பாதீட்டுப் பற்றாக்குறை தொகை 39.2 பில்லியன் டொலர்கள் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் அரசாங்கம் நேற்றைய தினம் பாதீட்டுத் திட்டத்தை சமர்ப்பித்திருந்து.

நிதி அமைச்சர் கிறிஸ்டியா ப்ரீலாண்ட் சமர்ப்பித்திருந்தார்.

அதிகளவு வருமானம் ஈட்டுவோரிடம் கூடுதல் வரி அறவீடு செய்யும் யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

நாட்டின் வீடமைப்புத் திட்டங்களையும் சமூக நலன்புரித் திட்டங் களையும் முன்னெடுப்பதற்காக இவ்வாறு கூடுதல் வரி அறவீடு செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடிய இளம் தலைமுறையினரின் வாழ்க்கை செலுமை யாக்கும் திட்டங்களை அரசாங்கம் அறிமுகம் செய்துள்ளதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மக்களின் வாழ்க்கைச் செலவுகளை குறைப்பதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.



# வீட்டு வாடகைப் பிரச்சினையால் ரொரான்ரோவை விட்டு வெளியேற முயற்சிக்கும் மக்கள்!

ஏப்ரல் 17, 2024

ரொரான்ரோ மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் வசிக்கும் பலர் வேறும் இடங்களுக்கு செல்ல முயற்சிப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

வீட்டு வாடகைப் பிரச்சினையால் இந்த தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது.

ரொரான்ரோவில் இரண்டு படுக்கை அறைகளைக் கொண்ட வீடு ஒன்றின் சராசரி வாடகைத் தொகை மூவாயிரம் டொலர் களாகும்.

இவ்வாறான ஓர் பின்னணியில் நகரை விட்டு வெளியேறு வதற்கு சுமார் 60 வீதமான வாடகைக் குடியிருப்பாளர்கள் எத்தனித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2016ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் ரொரான்ரோவில் வீட்டு வாடகைத் தொகை 30 வீதத்தினால் உயர்வடைந்துள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வீட்டு மனைகளின் விலை உயர்வு மற்றும் வாடகைத் தொகை அதிகரிப்பு போன்ற காரணி களினால் ரொரான்ரோவில் குடியிருப்போர் பெரும் அசௌ கரியங்களை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




# 400 கிலோ கிராம் தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் கொள்ளை குறித்த விசாரணைகள் தொடரும்!

### பீர் பிராந்திய பொலிஸ் பிரதானி நிசான் துரையாப்பா

ஏப்ரல் 18, 2024

400 கிலோ கிராம் எடையுடைய தங்கம் மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் என்பன கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடரும் என பீல் பிராந்திய பொலிஸ் பிரதானி நிசான் துரையப்பா தெரிவித்துள்ளார்.



இந்த கொள்ளைச் சம்பவம் சமூகத்தில் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியதாக தெரிவித்துள்ளார்.

விரிவான விசாரணைகளின் மூலம் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பிலான உண்மைகளை வெளிப்படுத்த நடவடிக்கை எடுத்த விசாரணையாளர்களின் பங்களிப்பு பாராட்டுக்குரியது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை அடையாளம் காணவும் கைது செய்யவும் உதவி யவர்கள் மற்றும் ஏனைய சட்டத்துறை சார்ந்தவர்களை பாராட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்த கொள்ளைச் சம்பவம் எயார் கனடா விமான சேவை நிறுவனத்தில் பணியாற்றியவர்களின் உதவி யுடன் மேற்கோள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச துப்பாக்கி கடத்தல் கும்பலுக்கும் இந்த கொள்ளைச்



சம்பவத்திற்கும் தொடர்பு உண்டு என தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 20 மில்லியன் டொலர் பெறுமதியான தங்கமும் 2.5 மில்லியன் டொலர் பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களும் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளன.

# எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் ஒன்ராரியோ அரசாங்கம் அதிருப்தி!

ஏப்ரல் 18, 2024

எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் ஒன்ராரியோ மாகாண அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

மாகாண முதல்வர் டக் போர்ட் இந்த எதிர்ப்பை வெளியிட் டுள்ளார்.

நேற்றைய நாள் ரொரான்ரோ பெரும்பாகப் பகுதியில் பெற்றோ லின் விலை 14 சதங்களினால் உயர்த்தப்பட்டிருந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு பெற்றோ லின் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி, ஒன்ராரியோவின் பல இடங்களில் ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 179.9 சதங்கள் என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றது.

எரிபொருள் நிறுவனங்களின் செயற்பாடு ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என மாகாண முதல்வர் டக் போர்ட் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவில் விலை உயர்த்தப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்திற்கான காரணங்களையும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கனடிய கடவுச்சீட்டு உலகத் தர வரிசையில் 07ம் இடத்தில்!

ஏப்ரல் 18, 2024

சர்வதேச ரீதியில் கடவுச் சீட்டுக்கள் குறித்து தரப்படுத்தலில் கனடிய கடவுச்சீட்டு முன்னேற்றத்தை பதிவு செய்துள்ளது.

உலகின் கடவுச்சீட்டுக்கள் குறித்த தரப்பட்டியல் வெளியிடப் பட்டுள்ளது.

சர்வதேச அளவில் சிறந்த கடவுச்சீட்டுக்களைக் கொண்ட நாடுகளின் தர வரிசையில் கனடா 7ம் இடத்தை வகிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளின் கடவுச் சீட்டுக்கள் உலகத் தர வரிசையில் 7ம் இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

2024ம் ஆண்டுக்கான ஹென்லி கடவுச்சீட்டு சுட்டியின் அடிப் படையில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

கனடிய கடவுச்சீட்டு உடையவர்கள் 188 நாடுகளுக்கு வீசா இன்றி பயணம் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சில நாடுகளின் கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி பய ணங்களை மேற்கொள்ளும் போது பல்வேறு சவால்களை எதிர்நோக்க நேரிடுகின்றது.

எனினும் கனடிய கடவுச்சீட்டு உடைய ஒருவர் உலகின் அநேக நாடுகளுக்கு சுலபமாக பயணங்களை மேற்கொள்ள முடியும்




என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023ம் ஆண்டில் உலக தர வரிசையில் கனடிய கடவுச் சீட்டு 8ம் இடத்தை வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


# ஒன்ராரியோ அதிவேக நெடுஞ்சாலைகளில் அறிமுகமாகும் வேகக் கட்டுப்பாடு மாற்றம் யூலை 12 முதல்!

ஏப்ரல் 24, 2024

கனடாவின் சில அதிவேக நெடுஞ்சாலைகளின் வேகக் கட்டுப்பாடு உயர்த்தப்பட உள்ளது.

கனடாவின் ஒன்ராரியோ மாகாணத்தில் இந்த வேகக் கட்டுப் பாடு அதிகரிப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.




401 மற்றும் 403ம் இலக்க அதிவேக நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட சில நெடுஞ்சாலைகளில் இவ்வாறு வேகக் கட்டுப்பாடு அதிகரிக்கப்பட உள்ளது.

இதுவரையில் மணித்தியாலத்திற்கு 100 கிலோ மீற்றர் என்ற வேகக் கட்டுப்பாடு மணித்தியாலத்திற்கு 110 கிலோ மீற்றர் என உயர்த்தப்பட உள்ளது.

ஒன்ராரியோவின் அநேகமான அதிவேக நெடுஞ்சாலைகள் மணித்தியாலத்திற்கு 110 கிலோ மீற்றர் வேகத்தில் பாதுகாப் பான முறையில் செலுத்தக்கூடிய வகையில் நிர்மானிக் கப்பட்டுள்ளதாக மாகாண போக்குவரத்து அமைச்சர் பிராம்பீட் சர்காரியா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜுலை மாதம் 12ம் திகதி முதல் இந்த வேகக் கட்டுப்பாடு அதிகரிக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளார்.

***வேக வரம்புகளை அதிகரிக்க அமைக்கப்பட்டுள்ள பகுதிகளின் முழு பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:***

**நெடுஞ்சாலை 401**

Tilbury, தற்போதுள்ள 110 KM/H மண்டலத்தை மேலும் கிழக்கே 7 கிமீ விரிவுபடுத்துகிறது
Hwy 35/115 இலிருந்து Cobourg வரை (தோராயமாக 35 கிமீ)
Cobourg இருந்து Belleville வரை (சுமார் 44 கிமீ)
Belleville இருந்து Kingston வரை (தோராயமாக 66 கிமீ)
Hwy 16 இலிருந்து Quebec எல்லை வரை (தோராயமாக 107 கிமீ)

**நெடுஞ்சாலை 403**

Woodstock முதல் Brantford வரை (சுமார் 26 கிமீ)
Brantford இருந்து Hamilton வரை (தோராயமாக 14.5 கிமீ)
நெடுஞ்சாலை 406 Thorold இருந்து Welland வரை (தோராயமாக 13 கிமீ)
நெடுஞ்சாலை 416 Hwy 401 இலிருந்து Ottawa வரை (சுமார் 70 கிமீ)
நெடுஞ்சாலை 69 Sudbury இருருந்து French River வரை (சுமார் 60 கி.மீ)

# விலைவாசி அதிகம் என்பதற்காக கெட்டுப்போன உணவை சாப்பிடாதீர்கள்: எச்சரிக்கும் நிபுணர்!

ஏப்ரல் 26, 2024

கனேடியர்கள், Best before date முடிந்த உணவை சாப்பிடுவ துண்டா என்பதை அறிய, ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆய்வில் பங்கேற்றவர்களில் 30 வயது முதல் 45 வயது உடையவர்களில் 41 சதவிகிதம்பேர், தாங்கள் கடந்த ஆண்டு Best before date முடிந்த உணவை சாப்பிட்டதாக தெரிவித் தார்கள்.



45 வயது முதல் 65 வயது வரையுள்ளவர்களில் 24 சத விகிதத்தினரும், 60 வயது முதல் 75 வயதுவரையுள்ளவர் களில் 20 சதவிகிதத்தினரும், 1946க்கு முன் பிறந்தவர்களில் 10 சதவிகிதத்தினரும், இளைய தலைமுறையினரில் 10 சதவிகிதம் பேரும், தாங்கள் கடந்த ஆண்டு Best before date முடிந்த உணவை சாப்பிட்டதாக தெரிவித்தார்கள்.

Best before date என்பதற்கும் காலாவதி திகதி அல்லது expiry date என்பதற்கும் வித்தியாசம் உள்ளது என்பது உண்மை தான். அதாவது, காலாவதி திகதியைக் கடந்த உணவை உண் ணவே கூடாது. ஆனால், Best before dateஐக் கடந்த உணவு களைப் பொருத்தவரை, அந்த திகதிக்குப் பின் அந்த உணவு களின் தரம் குறைந்திருக்கும் என்று பொருளேயொழிய, அதை சாப்பிடக்கூடாது என்பது பொருள் அல்ல.

என்றாலும், Best before date திகதி முடிந்த சில உணவுப் பொருட்கள், குறிப்பாக, இறைச்சி, நாற்றம் ஏற்படும் அளவுக்கு மோசமாகியிருக்கும் பட்சத்தில், அல்லது, Best before date திகதி முடிந்த முட்டைக்கோஸ் பூசணம் பூத்திருப்பது தெரிந்தும், இது போன்ற உணவுப்பொருட்களை வாங்கி உட்கொள்வதால், நீங்கள் மிச்சம் பிடிக்க நினைத்த பணத்தைவிட அதிக பணத்தை மருத்துவமனையில் செலவிடவேண்டியிருக்கும் என்கிறார் உணவுத்துறை நிபுணரான பேராசிரியர் Sylvain Charlebois.

விடயம் என்னவென்றால், ஒரு காலத்தில் Best before date திகதி பார்த்துப் பார்த்து உணவுப்பொருட்களை வாங்கிவந்த மக்கள்,





கொரோனா காலகட்டம் மற்றும் உக்ரைன் போர் துவங்கியதால் ஏற்பட்ட விலைவாசி உயர்வுக்குப் பிறகு, விலை குறைவான பொருட்கள் கிடைக்குமா என்று பார்க்கத் துவங்கிவிட்டார்கள்.

ஆகவே, விலை குறைவாக கிடைக்கிறது என்பதற்காக, கெட்டுப் போன உணவை சாப்பிடாதீர்கள், அது உடல் நலத்தை பாதிக் கக்கூடும் என்கிறார் பேராசிரியர் Sylvain Charlebois.

# வெடித்தது புதிய சர்ச்சை; புலம் பெயர் தமிழர் தரப்புக்கள் போர்க்கொடி!

ஏப்ரல் 24, 2024

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவரை சித்திரவதை செய்தார் என நீதிமன்றம் குற்றம் சாட்டிய இலங்கையின் பொலிஸ்மா அதிபரை கனடாவின் மிகப்பெரிய பொலிஸ் பிரிவின் தலைவர் ஒருவர் சந்தித்துள்ளார்.






சிலோன்டுடே உட்பட இலங்கையின் ஆங்கில செய்தித்தாள்களில் வெளியான படங்கள் பீல் (Peel) பிராந்திய பொலிஸ் தலைவர் நிசான் துரையப்பா 2023 டிசம்பர் 29ம் திகதி இலங்கையின் சிரேஸ்ட அதிகாரிகளுடன் சீருடையில் காணப்படுவதை காண்பித்துள்ளன.

இந்த படத்தில் காணப்படும் இலங்கையின் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளில் ஒருவர் இலங்கையின் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஒருமாதத்திற்கு முன்னரே சந்தேகநபர் ஒருவரை ஈவிரக்கமின்றி தாக்கினார் என தெரிவித்து இவர் இழப்பீடு வழங்கவேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

களவு குற்றத்திற்காக சந்தேகநபர் ஒருவரை ஈவிரக்கமின்றி கைதுசெய்ததில் தேசபந்து தென்னக்கோனிற்கு தொடர்புள்ளது என டிசம்பர் 2023 14 ம் திகதி தெரிவித்திருந்த நீதிமன்றம் அந்த நபரை சித்திரவதை கூடத்தில் 24 மணிநேரம் தடுத்து வைத்திருந்தார் தாக்கினார் மூச்சுதிணறச்செய்தார் இன்னமும் சித்திரவதைகளில் ஈடுபட்டார் எனவும் தெரிவித்திருந்தது.

இந்த சந்திப்பை கனடாவின் கௌரவத்தின் மீது விழுந்த கறை என தமிழ் கார்டியன் ஆசியர் வைத்தியர் துசியன் நந்தகுமார் தெரிவித்துள்ளார்.

பலதுஸ்பிரயோகங்களிற்கு காரணமான தேசத்தின் அணிவகுப்பு மரியாதையை துரையப்பா போன்ற கௌரவத்திற்குரிய ஒருவர் பெற்றுக்கொள்வதை பார்க்கும்போது அது அதிர்ச்சியளிக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்

இது தொடர்பான பேட்டிக்காக நாங்கள் விடுத்த வேண்டுகோளை துரையப்பா நிராகரித்துள்ளார்.

எனினும் பீல்பிராந்திய பொலிஸ் பேச்சாளர் துரையப்பாவின் இலங்கை விஜயம் தனிப்பட்டது என தெரிவித்துள்ளதுடன் பீல் பிராந்திய காவல்துறைக்கும் இலங்கை காவல்துறையின் எந்தவொருஅமைப்பிற்கும் இடையில் எந்த தொடர்பும் ஒத்துழைபபும் இல்லை என தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான தனது விஜயத்தின்போது துரையப்பா பலமுறை தனது பீல் பொலிஸ் சீருடையில் காணப்பட்டார்.

நீங்கள் சீருடையை அணிந்தீர்கள் என்றால் நீங்கள் தலைவர் என தெரிவிக்கப்படும் அந்த அமைப்பினை நீங்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றீர்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேன் தெரிவித்துள்ளார்.

தென்னாசிய நாட்டை வம்சாவளியாக கொண்ட ஒரேயொரு பொலிஸ் தலைமை அதிகாரி துரையப்பா.

பிரம்டன் ஒன்ராரியோ போன்றவற்றிற்கான பீல் பொலிசின் தலைவர் இவர்.

பீலில் வளர்ந்த என்னை போன்றவர்களிற்கும் தங்களை தமிழர்களாக அடையாளப்படுத்தும் பீலில் வசிக்கும் அனைவருக்கும் இது பாதிப்பை ஏற்படுத்தும் விடயம் என்கின்றார் ராதிகா சிற்சபேசன்.

தான் பிறந்த நாட்டிற்கு குடும்பத்தினருடன் விடுமுறைக்காக சென்றிருந்தவேளை விடுக்கப்பட்ட அழைப்பையே துரையப்பா ஏற்றுக்கொண்டார் என பீல் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

படங்களில் காணப்படுவதற்கு அப்பால் தென்னக்கோனை துரையப்பா நேரடியாக சந்தித்தாரா என்பதை பேச்சாளர் உறுதி செய்ய மறுத்துள்ளார்.

புகைப்படங்களில் காணப்பட்டது மாத்திரம் தான் சந்திப்பா அல்லது வேறு சந்திப்புகள் இடம்பெற்றனவா என்பது தெளிவாக தெரியவில்லை.

புகைப்படத்தில் காணப்படும் தருணத்திற்கு அப்பால் துரையப்பாவும் தென்னக்கோனும் வேறு ஏதும் சந்திப்புகளில் ஈடுபட்டார்களா என்பதும் தெளிவாக தெரியவில்லை.

கொழும்பில் சந்திப்பிற்காக விடுக்கப்பட்ட வேண்டுகோள்கள் குறித்து துரையப்பா கனடாவின் வெளிவிவகாரங்களிற்கான பிரிவு மற்றும் ஆர்சிஎம்பியுடன் ஆராய்ந்தார் எனவும் பீல் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.'

இதேவேளை தென்னக்கோன் குறித்தும் நீதிமன்ற தீர்ப்பு குறித்தும் நாங்கள் துரையப்பாவிற்கு தகவல் வழங்கினோம் என ஆர்சிஎம்பி தெரிவித்துள்ளது.

கனடா அரசாங்கம் இந்த விஜயத்தினை ஏற்பாடு செய்யவில்லை. இது தனிப்பட்ட விஜயமாக கருதப்பட்டது என அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்

எனினும் பீல் பொலிசுடன் எங்களின் நெருங்கிய தொடர்புகள் காரணமாக எங்களின் இலங்கைக்கான அதிகாரியொருவர் இலங்கையின் பொலிஸ் பிரிவுகளுடன் துரையப்பாட ஈடாடுவதற்கான ஏற்பாடுகளை செய்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நிலைமையை துரையப்பா அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக துரையப்பாவிற்கு இலங்கை நீதிமன்றம் அந்த நாட்டின் பொலிஸ் அதிகாரி தொடர்பில் வழங்கிய தீர்ப்பு உட்பட பல விடயங்களை தெளிவுபடுத்தியிருந்தோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமை வரலாறினை கருத்தில் கொள்ளும் போது எச்சரிக்கையுடன் இருந்திருக்கவேண்டும் என்கின்றார் ராதிகா சிற்சபேசன்.

இடம்பெற்ற குற்றங்கள் குறித்து கனடாவிற்கு நன்கு தெரியும் இது ஒட்டாவாவிற்கு தெரியாத விடயம் இல்லை என்கின்றார் நந்தகுமார்.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிற்கு மேற்குலகின் பொலிஸ் அதிகாரிகள் விஜயம் மேற்கொள்வது ஒத்துழைப்பு வழங்குவது பயிற்சி வழங்குவது புதிய விடயமல்ல என்றபோதிலும் சில நாடுகள் தங்களை சமீபத்தில் இலங்கை அதிகாரிகளிடமிருந்து தனிமைப்படுத்தியுள்ளன.

2021 இல் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஸ்கொட்லாந்து தனது பயிற்சிகளை முடிவிற்கு கொண்டுவந்தது.

இலங்கையில் பொலிஸ் அதிகாரிகள் எவ்வாறு தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலையில் செயற்படுகின்றார்கள் என்பதை பொலிஸ் தலைவராக தென்னக்கோன் நியமிக்கப்பட்டமை வெளிப்படுத்துகின்றது என்கின்றார் நோர்த் கரோலினாவின் வேக்பொரெஸ்ட் பல்கலைகழக பேராசிரியர் நெய்ல் டெவொட்டா.

பொலிஸ் தலைமையகத்திற்கான துரையப்பாவின் விஜயம் அவரது மதிப்பீடுகள் குறித்த கேள்வியை எழுப்புகின்றது என்கின்றார் நந்தகுமார்.

கனேடிய அரசாங்கத்தின் மூத்த அதிகாரியொருவர் மோசமான குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்ட படையினரை சந்திக்கசென்றது அது மிகவும் அதிருப்தியை ஏற்படுத்துகின்றது இதற்காக அவர் மன்னிப்பு கோரவேண்டும் என்கின்றார் நந்தகுமார்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# ஒன்ராரியோ மாகாண பாடசாலை மாணவர்கள் அலைபேசிகள் பயன்படுத்த செப்டம்பர் 01 இல் இருந்து தடை!

ஏப்ரல் 28, 2024

கனடாவின் ஒன்ராரியோ மாகாண பாடசாலைகளில் அலைபேசி பயன்பாடு தடை செய்யப்பட உள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் முதல் இந்த தடை நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

பாலர் பாடசாலை முதல் தரம் 6 வரையில் கற்கும் மாணவர்கள் பாடசாலை நேரத்தில் அலைபேசி பயன்படுத்த தடை விதிக்கப்பட உள்ளது.

தரம் 7 முதல் 12 வரையிலான மாணவ மாணவியர் வகுப்பு நேரத்தில் மட்டும் அலைபேசி பயன்படுத்துவதற்கு தடை விதிக் கப்பட்டுள்ளது.

இந்த தடையை மீறும் மாணவர்கள் மீது நடவடிக்கை எடுக் கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் மீண்டும் தடை உத்தரவினை மாணவர்கள் மீறினால் பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப்படக் கூடிய சாத்தியங் களும் உண்டு என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அலைபேசிகள் மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.



எனவே இந்த விடயத்தை கருத்திற் கொண்டு புதிய தடையை அறிமுகம் செய்வதாக ஒன்றாரியோ மாகாண கல்வி அமைச்சர் ஸ்டீவன் லிச் தெரிவித்துள்ளார்.

# மா.க. ஈழவேந்தன் ஐயா ரொரான்ரோவில் சாவடைந்தார்!

ஏப்ரல் 29, 2024

ஈழவேந்தன் ஐயா கனடாவில் Toronto Western மருத்துவ மனையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு சாவடைந் துள்ளார்.

“ஈழம் வெல்லும் அதை காலம் சொல்லும்” என்ற குரல் இன்று ஓய்ந்து விட்டது.

கனகேந்திரன் என்ற தனது இயற்பெயரை தூய தமிழில் ஈழவேந்தன் என மாற்றிய தமிழ் மொழிப் பற்றாளர்.

நல்லூரைச் சேர்ந்த புகையிரத நிலைய அதிபர் மாணிக்க வாசகர் கனகசபாபதி அவர்களின் மகனான இவர், யாழ்ப் பாணம் பரி யோவான் கல்லூரியிலும், பின்னர் கொழும்பு உவெசுலி கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

தமிழீழக் கொள்கையில் மிகவும் பிடிப்புள்ளவராக சமரசமில் லாத போராளியாக இறுதி வரை இருந்தவர்.

இவரின் துணைவியார் அருளாம்பிகை அம்மா சுகயீனமுற்ற நிலையில் தமிழகத்தில் மகளோடு வாழ்கிறார்.

“நீ ஒரு போராளியின்ட மனைவி! கலங்கக் கூடாது சரியோ! தைரியமாக திமிராக இருக்க வேணும் சரியா!”

2010 களில் ஒரு நண்பரின் வீட்டிலிருந்தபோது மனைவிக்கு தொலைபேசியில் இவ்வாறு அதட்டி ஆளுமையோடு சத்தமாக ஆறுதல் சொல்லும் அழகே தனி!

இனத்திற்காக இறுதிவரை உண்மைக் குரலாகவும் உணர் வுள்ள எழுத்தாகவும் குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தார்.

இவருக்கு இரு மகள்கள் உண்டு. பிள்ளைகளைப் பிரிந்து கனடாவில் தனியாக வாழ்பவரைப் பார்த்து நாம் கவலைப் பட்டால் “என் இனப் பிள்ளைகள் இங்கும் இருக்கிறார்கள்.. எனக்கென்ன கவலை?” என்பார்.

இவர் நெருக்கமானவர்களை “குழந்தாய்” என அன்பாக அழைத்து நல்ல அறிவுரைகள் பல சொல்லிக் கொண்டே யிருப்பார்.

அவரிடம் வரலாற்றை அறிந்து கொள்வதில் மணிக்கணக்காக மெய் மறந்து கேட்டுக் கொண்டிருக்கலாம்.

தனித் தமிழ்ச் சொற்களை வானொலியில் பேசு என ஊக்கு விப்பார்.

ஆயிரம் நூல்கள் கரைத்துக் குடித்த அறிவுப் பெருக்கு ஊற்றாக அருவியாக காட்டாறாக கடலாக பெருகி ஓடம்... வீடு முட்ட நிரம்பி வழியும் நூல்கள்...

வானொலியில் ஐயாவை அழைத்துப் பேச விட்டாலும் நிறுத்த மாட்டார்... “நேரம் போகிறது ஐயா!” என கண்டிப்பாக இழுத்து நிறுத்தும் சூழ்நிலை.. ஒலிபரப்பாளர்களுக்கு.

கனடாவில் வசித்து வந்த அவர் ரொரரன்ரோ மேற்கு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவரது உடல் நிலை மிக மோசமடைந்திருந்த நிலையிலேயே தனது 92 ஆவது வயதில் சாவடைந்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியில் முக்கிய உறுப்பினராக இருந்த இவர் 1970 ஆம் ஆண்டில் வி.நவரத்தினம் தொடங்கிய தமிழர் சுயாட்சிக் கட்சியில் இணைந்தார்.

பின்னர் மீண்டும் தமிழ் அரசுக் கட்சியில் சேர்ந்தார். தமிழரசுக் கட்சி அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஓர் உறுப் புக்கட்சியாக இருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக் கிளைக்கு ஈழ வேந்தன் தலைவராக இருந்து பணியாற்றினார். 1977 வன் முறைகளில்இவர்கடுமையாகப் - பாதிக்கப்பட்டார். 1980ஆம் ஆண்டில் வேறு சிலருடன் இணைந்து தமிழ் அரசுக் கட்சியில் இருந்து விலகி, தமிழீழ விடுதலை முன்னணி என்ற கட்சியை ஆரம்பித்தார். அக்கட்சியின் செயலாளராக ஈழவேந்தன் பணி யாற்றினார். இலங்கையில் தமிழருக்கு எதிரான வன்முறைகள் கிளம்பிய காலகட்டத்தில் 1981 ஆம் ஆண்டில் இவர் தமிழ் நாட்டுக்கு சென்றார்.


தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மருந்துகள் கொள்வனவு செய்தனர் என்ற குற்றச்சாட்டில் இவரும் வேறு நால்வரும் 1997 பெப்ரவரியில் சென்னையில் கைது செய்யப்பட்டனர். 1999 ஆம் ஆண்டில் அனைவரும் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டனர். எனினும் ஈழவேந்தன் 2000 டிசெம்பர் 4 இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார்.

2004 நாடாளுமன்றத் தேர்தலில் ஈழவேந்தன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமிக்கப்பட்டு நாடாளுமன்றம் சென்றார்.

மூன்று மாதங்களுக்கு மேலாக நாடாளுமன்றத் துக்குச்செல்லாமல் விட்டதை அடுத்து இவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி 2007 நவம்பரில் பறி போனது.

பின்னர் தாயகத்தில் இருந்து கனடாவுக்குப் புலம்பெயர்ந்தார். அங்கும் அவரது அரசியல் பணி தொடர்ந்தது.

இன்று அந்த அறிஞரின் உயிரே எம்மை பிரிந்து போய்விட்டது. ஓயாமல் பேசிய வாய் ஓய்ந்து போனதே!



ஈழவேந்தன் என்ற தமிழினத்தின் விடுதலைக்காக அயராமல் சிந்தித்துக் கொண்டிருந்த அந்த அடங்காத் தமிழன் சிந்தைகள் இனி இயங்கப் போவதில்லை..

உறுதி குலையாத கொள்கையோடு முழுங்கும் சமரசம் இல்லாத சண்டைக்காரனான ஈழவேந்தன் ஐயாவின் இழப்பு தமிழினத் திற்கு கொடிய துயர்!

உறுதியான தமிழீழ வேட்கை கொண்ட ஈழவேந்தன் ஐயா நோயினால் சாவடைந்துள்ளார். இவரின் ஆத்மா சாந்தி யடையட்டும்.

## அன்னாரின் இறுதி வணக்க நிகழ்வு விபரம்:

**முகவரி:** Ajax Crematorium & Visitation Center
384 Finley Ave, Ajax, ON, L1S 2E3

**பார்வைக்கு:**
04.05.2024, சனிக்கிழமை மாலை 5:00 - 9:00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு

**இறுதி நிகழ்வு:**
05.05.2024 ஞாயிறுக்கிழமை மதியம் 12:00 - மாலை 4:00 வரை இறுதி நிகழ்வும், தகனமும் இடம் பெறும்.

# ‘போரின் சாட்சியம்’ நூல் கனடாவின் வன்கூவர் நகரில் வெளியிடப்பட்டது!

ஏப்ரல் 29, 2024





இறுதிப்போரில் பணியாற்றிய ஊடகவியலாளர் சுரேன் கார்த்திகேசு எழுதிய “போரின் சாட்சியம்” நூல் வெளியீட்டு விழா நிகழ்வு கனடாவின் வன்கூவரில் நடைபெற்றது.
துசாந்தன் சிவரூபன் தலைமையில், தமிழ்வணக்கப்பாடல் மற்றும் எம்.வி.சன்சி கடல் வணக்கப்பாடலுடன் நிகழ்வு ஆரம் பமானது.

தொடர்ந்து இன அழிப்புச் செய்யப்பட்டவர்களுக்கான நினை வேந்தல் சுடரினை கந்தையா பாலசுப்பிரமணியம் ஏற்றினார்.

முள்ளிவாய்க்கால் நினைவுக்கவிதையினை அட்சரா வரதராசா நிகழ்த்தினார். நூலுக்கான அறிமுக உரையினை ராதா நிகழ்த் தினார்.

நூலினை இறுதிப் போரின் போது மூன்று பிள்ளைகளையும் கணவரையும் பறிகொடுத்த சாந்தி வெளியிட்டு வைக்க இளைய தலைமுறையின் சார்பில் போர்க் காலத்தில் குழந்தையாக வாழ்ந்த அபி சுவேந்திரகுமார் பெற்றுக்கொண்டதுடன் சிறப் புரையினையும் வழங்கியிருந்தார்.

நூலின் ஆசிரியரான சுரேன் கார்த்திகேசு ஈழநாதம் பத்திரிகை யின் அலுவகச் செய்தியாளராகவும் பக்கவடிவமைப்பாள ராகவும் பணியாற்றியிருந்தார்.

ஏப்ரல் மாதம் முல்லைத்தீவின் வலைஞர் மடத்திற்கும் இரட்டை வாயக்காலுக்கும் இடைப்பட்ட பகுதியில் பணி நிமிர்த்தம் சென்ற போது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவம் ஒன்றில் சிக்கி படுகாயம் அடைந்திருந்தார்.

போரின் பின்னர் தாய்லாந்திலிருந்து அகதிகளை ஏற்றிச் சென்ற சன் சீ கப்பல் மூலம் அகதியாக கனடாவைச் சென்றடைந் திருந்தார்.

கடல் பயணத்தின் போது, ஏற்கனவே அடைந்திருந்த காயத்தின் பாதிப்புக்களாலும் கப்பலில் போதிய மருத்துவ வசதிகள் இன் மையாலும் உயிராபத்தினையும் எதிர்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை “போரின் சாட்சியம்” நூலின் முதற்பிரதியினை கனடாவின் முடியரசு - பழங்குடிகள் உறவுகள் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியிடம் நூல் ஆசிரியர் கடந்தவாரம் கையளித் திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழக செய்திகள்



## “ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென உலக நாடுகளை இந்திய அரசு வற்புறுத்தவேண்டும்”

## அனைத்துக் கட்சித் தலைவர்களை தேர்தல் பரப்புரையில் குறிப்பிடுமாறு வேண்டுகோள்!

உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர் பழ. நெடுமாறன்

ஏப்ரல் 16, 2024

அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் வேண்டுகோள்,

வணக்கம்.

நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையில் தாங்களும், தங்கள் கட்சியும் ஈடுபட்டிருக்கும் இந்த வேளையில், தங்களின் மேலான கவனத்திற்கு “ஈழத் தமிழ் மக்களின் சுதந்திரத்திற்கான பொது வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென உலக நாடுகளை இந்திய அரசு வற்புறுத்தவேண்டும்” என்பதை தங்களின் தேர்தல் பரப்புரையில் குறிப்பிடுமாறு தங்களை வேண்டிக் கொள்ளவே இக்கடிதத்தை உங்களுக்கு அனுப்புகிறோம்.

கடந்த 03.02.2024 அன்று மாலையில் சென்னை பி.டி. தியாகராயர் அரங்கில் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் தமிழ்நாட்டு மக்களின் கூட்டுப் பிரகடனம் வெளியிடப் பட்டது. இக்கூட்டத்தில் பல்வேறு கட்சித் தலைவர்களும் பங் கேற்றனர். அந்தப் பிரகடனத்தின் நகலைத் தங்களின் பார் வைக்காக இத்துடன் இணைத்துள்ளோம்.

பேரழிவின் விளிம்பில் நின்று கதறும் நமது ஈழத் தமிழ் சகோதர, சகோதரிகளின் துயரத்தைப் போக்குவதற்கான நட வடிக்கையை நாம் ஒன்றுபட்டு எடுக்கவேண்டியுள்ளது. அதற்கு முதற்படியாக “தமிழ்நாட்டு மக்களின் கூட்டுப் பிரகடனம்” அமைந்துள்ளது. எனவே, தாங்கள் தங்கள் கட்சியின் சார்பில் இக்கூட்டுப் பிரகடனத்திற்கு ஆதரவான நிலை எடுப்பதோடு, இந்திய அரசையும் வலியுறுத்தவேண்டும் என வேண்டிக் கொள்கிறோம்., உலகத் தமிழர் பேரமைப்பு தலைவர்



வேண்டுகோள்.

# அரசியல் சட்டம் குறித்து எங்கள் மீது வீண் பழி! திரு. மோடி, ஆர். எஸ்.எஸ். கூறுவது என்ன?

ஏப்ரல் 08, 2024

“பா.ச.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அரசியலமைப்புச் சட் டத்தை மாற்றிவிடும் என எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டி வரு கின்றன. என்மீது பழிசுமத்த வேண்டும் என்பதற்காக அரச மைப்புச் சட்டம் பற்றியும், பொய்யான புகார்களை காங்கிரசு உள்பட எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. பா.ச.க. அரசு அரசமைப் புச் சட்டத்தை மிகவும் மதிக்கிறது. அதனை இயற்றிய அம் பேத்கர் இப்போது வந்தால்கூட அரசமைப்புச் சட்டத்தை மாற்ற முடியாது” என தலைமையமைச்சர் மோடி பீகாரில் நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் பேசியுள்ளார்.

முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதற்கு ஒப்பான முயற் சியில் மோடி அவர்கள் ஈடுபட்டுள்ளார். இப்போதும் சில பா.ச.க. தலைவர்கள் அரசியல் சட்டத்தை மாற்றுவோம் என்று அவ்வப் போது கூறி வருகிறார்கள். ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் கட்சியே பா.ச.க. என்பதை யாரும் மறைக்க முடியாது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் இந்துக்களுக்கு எதிரானது என்ற குற்றச்சாட்டுடன் வெள்ளை அறிக்கை ஒன்றை ஆர்.எஸ். எஸ். 1993ஆம் ஆண்டு சனவரி முதல் தேதி அன்று வெளி யிட்டது. இந்த வெள்ளை அறிக்கையை தயாரித்த சுவாமி ஹீரானந்த் “நாட்டின் கலாச்சாரம் குணநலன்கள் சூழ்நிலைகள் ஆகியவற்றுக்கு எதிரான முறையில் தற்போதை அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அது அந்நிய கண் ணோட்டத்தின் அடிப்படையில் அமைந்தது. இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை செயலிழக்கச் செய்த பிறகுதான் நம் முடைய பொருளாதார கொள்கை, நீதித்துறை மற்றும் நிர்வாக அமைப்புகள் மற்ற தேசிய நிறுவனங்கள் ஆகியவை பற்றிய மறு சிந்தனையில் ஈடுபடவேண்டும். இந்த அரசியல் சட்டத்தை முழுமையாக ஒதுக்கித் தள்ளுவதற்கு முன்னுரிமை அளிக்கப் படவேண்டும். இந்த அரசியலமைப்புச் சட்டம் விளைவித்துள்ள தீங்குகளுடன் ஒப்பிடும்போது 200 ஆண்டு ஆங்கிலேய ஆட்சி நாட்டுக்கு ஏற்படுத்திய சேதாரங்கள் மிகவும் குறைவானதே. பாரதத்தை இந்தியாவாக மாற்றுவதற்கான சதி தொடர்கிறது” எனக் கூறினார். இதுதான் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அதிகாரப்பூர்வமான கொள்கையாகும்.

“மொழிவழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டிருப்பதை ஆர்.எஸ். எஸ். அமைப்பு ஏற்கவில்லை. பாரதம் ஒரே நாடாக மட்டுமே இருக்கவேண்டும். மொழிவழி மாநிலங்களோ, மாநில அரசு களோ ஒருபோதும் கூடாது. இந்தியாவை நூறு சனபாதங் களாகப் பிரிக்கவேண்டும். இந்திய அரசு மட்டுமே இதை ஆள வேண்டும்” என ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த கோல் வால்கர் பகிரங்கமாக அறிவித்தார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு கலாச்சாரம், மதம், அரசியல் ஆகிய வற்றை ஒன்றாகக் கலந்த குறிக்கோளினை கொண்டதாகும். மத அடிப்படையில் இந்து தர்மம், கலாச்சார அடிப்படையில் இந்து சமற்கிருதம், தேசத்தின் அடிப்படையில் இந்து ராஷ்ட்ரம் ஆகிய மூன்று அடிப்படை கொள்கைகளைக் கொண்டது.

**ஆர்.எஸ்.எஸ். தலைவராக இருந்த சுதர்சன் பின்வருமாறு அறிவித்தார்.**

***1. இந்து ராஷ்டிராவைப் பிரகடனப்படுத்துதல்***

இந்தியாவின் பெயர் பாரதம் என மாற்றப்படும். இந்துமதம் அரசு மதமாகவும், இந்த நாடு இந்துக்களின் நாடு என்றும் அறிவிக்கப் படும். தற்போதைய அரசியல் சட்டம் தூக்கியெறியப்படும். மனு தர்ம சாத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியல் சட்டம் வகுக்கப்படவேண்டும்.

***2. கலாச்சார அடித்தளமாக வேத பார்ப்பனியம்***

பல்வேறு மொழிவழித் தேசிய இனங்களின் கலாச்சாரங்கள் ஒழிக்கப்பட்டு வேத பார்ப்பனிய கலாச்சாரம் திணிக்கப்படும்.

***3. சமற்கிருத மொழி மேலாண்மை***

இந்தியாவில் உள்ள அனைத்து மொழிகளும் தேவநாகரி எழுத் திலேயே எழுத வற்புறுத்தப்படும். நாளடைவில் சமற்கிருத மொழியை அனைவரும் கட்டாயமாக கற்கவேண்டிய நிலை உருவாக்கப்படும். சமற்கிருதம் ஆட்சிபீடம் ஏறும்வரை இடைக் கால ஏற்பாடாக இந்தி இருக்கும். சமற்கிருதமே ஒரே ஆட்சி மொழியாக ஆக்கப்படும்.



***4. சமூகநீதி ஒழிக்கப்படும்***

பிற்பட்ட - ஒடுக்கப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு வழங்கப்பட்ட இடஒதுக்கீடு திட்டம் கைவிடப்படும்

மேலே கண்டவை போன்ற பிற்போக்கான கொள்கைகளை நடைமுறைக்குக் கொண்டுவர ஆர்.எஸ்.எஸ். அமைப்பு உறுதி பூண்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்திற்கும், மொழிவழி மாநில உணர்வு களுக்கும் எதிராகச் செயல்படும் பா.ச.க. அரசு குறித்து அம்பேத் கர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய தனது இறுதி சொற்பொழிவில் பின்வருமாறு குறிப்பிட்டார்- “இந்த அரசியல் சட்டத்தை யாரா லும் தகர்க்க முடியாது. ஆனால், இந்திய அரசின் தவறான கொள்கைகளின் மூலம் இச்சட்டத்தை உள்ளிருந்தே செயலற் றதாக ஆக்க முடியும்” என எச்சரித்தார். அவரது தொலை நோக்குப் பார்வையுடன் கூடிய எச்சரிக்கை இப்போது செயல் படத் தொடங்கிவிட்டது.

# இந்திய குடியுரிமை பெற்று வாக்களித்த முதல் இலங்கைத் தமிழ் பெண்!

மார்ச் 20, 2024

திருச்சி பகுதியில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள நளினி கிருபாகரன் என்ற பெண்ணுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அன்னை ஆசிரமம் எம்.எம் நடுநிலைப்பள்ளியில் அவர் தனது முதல் வாக்கினைச் செலுத்தினார்.



அது பற்றி நளினி கூறியதாவது,

இலங்கையில் எங்களுக்கான பிறப்புச் சான்றிதழில் இந்தியத் தமிழர் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். இலங்கையில் வழங்கப் படும் அடையாள அட்டையில், இந்தியர் என்பதற்காக எக்ஸ் என்றும் குறிப்பிட்டிருப்பார்கள்.

அதனால் அங்கு வாக்குரிமை இல்லாத நிலையில், இங்கு வந்து 40 ஆண்டுகள் ஆகியும் அந்த உரிமை இல்லாமல் முடங்கி கிடந்தோம். அதில் எனக்கு மட்டும் வாக்குரிமை கிடைத் துள்ளது. முகாமில் உள்ள அனைவருக்கும் இந்திய குடியுரிமை கிடைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் தான் இருக்கிறோம். மத்திய அரசும், மாநில அரசும் எங்கள் எதிர்பார்ப்பை கவனத் தில் கொண்டு குடியுரிமை வழங்க வேண்டும்.

எனது தாத்தா, பாட்டி இந்தியாவில் பிறந்தவர்கள். எனது அப்பா, அம்மா இலங்கையில் பிறந்த இந்திய வம்சாவளியினர். ஆனால் நான் இந்தியாவில் இராமநாதபுரத்தில் தான் பிறந்தேன்.

இதன் அடிப்படையில், நான் இந்திய பிரஜை என்பதற்கான



ஆவணங்கள் வேண்டும் என நீதிமன்றத்தை நாடி சென்னை உயர் நீதிமன்ற மதுரைக்கிளையில் விண்ணப்பித்து போரா டினேன். இறுதியாக, எனக்கு இந்திய குடியுரிமைக்காக கடவுச் சீட்டு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில், நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் போராடி வாக்குரிமையைப் பெற்றேன்” என்றார்.

# மூன்று ஈழ அகதிகள் தனுஷ்கோடியில் தஞ்சம்!

ஏப்ரல் 22, 2024

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இந்தியாவின் தனுஷ்கோடியில் நாட்டு மக்கள் அகதிகளாக தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

இந்த நிலையில் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவர் உட்பட 3 நபர்கள் தனுஷ்கோடி அடுத்த ஐந்தாம் மணல் தீடையில் திங்கட்கிழமை (22) காலை தஞ்சம் அடைந்துள்ளனர்.

அப்பகுதிக்கு மீன் பிடிக்க சென்ற மீனவர்கள், இவர்கள் தொடர்பில், பொலிசாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

இதை அடுத்து சுட்டெரிக்கும் வெயிலில் வெப்பத்தில் சூடு தாங்க முடியாமல் ஐந்தாம் மணல் தீடையில் தஞ்சம் அடைந்த இலங்கை அகதிகளை மரைன் பொலிசார் அதிரடியாக நடவடிக்கை எடுத்து கடலுக்குள் சென்று பாதுகாப்பாக மீட்டு கரைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

இதனால் சூடு தாங்க முடியாமல் தவித்த தங்களை மீட்ட மரைன் பொலிசாருக்கு மூவரும் நன்றி தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# ஒரே வருடத்தில் 1.12 கோடி மரக்கன்றுகள் உலக சாதனை படைத்த காவேரி கூக்குரல் இயக்கம்!

ஏப்ரல் 23, 2024

காவேரி கூக்குரல் இயக்கத்தின் விடாமுயற்சியால் கடந்த நிதியாண்டில் 48,748 விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் சுமார் 28,000 ஏக்கர் பரப்பளவில் ஒரு கோடியே 12 லட்சத்து 47 ஆயிரத்து 630 மரக்கன்றுகளை தங்கள் நிலங்களில் நட்டுள்ளனர். இவ்வியக்கத்தின் மூலம் இதுவரை நடப்பட்ட மரக்கன்றுகளின் மொத்த எண்ணிக்கை 10.9 கோடியாக உயர்ந்துள்ளது.

உலக பூமி தினமான இன்று (ஏப்ரல் 22) இது தொடர்பான பத்திரிக்கையாளர் சந்திப்பு சென்னை பிரஸ் கிளப்பில் நடைபெற்றது. இதில் இவ்வியக்கத்தின் மாநில கள ஒருங்கிணைப்பாளர் தமிழ்மாறன் கூறியதாவது:

காவேரி கூக்குரல் இயக்கம் சத்குருவால் 26 ஆண்டுகளுக்கு முன்பு விதைக்கப்பட்ட விதையாகும். 1998-ம் ஆண்டுமுதல் ஈஷா பல்வேறு சுற்றுச்சூழல் பணிகளை வெவ்வேறு பெயர்களில் செய்து வருகிறது. அதில் ஓர் அங்கமாக, தமிழகத்தின் பசுமைப் பரப்பை அதிகரித்தல், நதிகளுக்குப் புத்துயிர் அளித்தல், விவசாயிகளின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் போன்ற நோக்கங்களுக்காக காவேரி கூக்குரல் இயக்கம், மரம் சார்ந்த விவசாய முறையை விவசாயிகளிடம் ஊக்குவித்து வருகிறது.

கடலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் ஈஷா நர்சரிகள் செயல்படுகின்றன. இதுதவிர 39 இடங்களில் விநியோக நர்சரிகளை நடத்தி வருகிறோம். இங்குதேக்கு, செம்மரம், சந்தனம், ரோஸ்வுட் உட்பட 29 வகையான விலை உயர்ந்த மரக்கன்றுகளை ரூ.3 என்ற மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். மேலும், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் அளிக்கும் விதமாக, அவர்களே மரக்கன்றுகளை உற்பத்தி செய்துவிநியோகிப்பதற்கான வாய்ப்பையும் வழங்கி வருகிறோம்.

காவேரி கூக்குரல் இயக்கத்தில் மொத்தம் 130 களப் பணியாளர்கள் பணிபுரிகின்றனர். இவர்கள் விவசாய நிலங்களுக்கு நேரில் சென்று ஆய்வு செய்து மண் மற்றும் நீரின் தன்மையை ஆராய்ந்து அதற்கேற்ப மர விவசாயம் செய்வதற்கு இலவச ஆலோசனைகளை வழங்குகின்றனர். இதுதவிர, கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் 3 மிகப்பெரிய கருத்தரங்குகளையும், 12 மண்டல அளவிலான கருத்தரங்குகளை நடத்தினோம்.

இந்த மாதம் தொடங்கியுள்ள நடப்பு நிதியாண்டில் (2024-25)



காவேரி கூக்குரல் இயக்கம் சார்பில் தமிழ்நாட்டில் 1.21 கோடி மரக்கன்றுகள் நட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# குடிநீர் தொட்டியில் சாணம் கலக்கப்பட்ட நிகழ்வு: தமிழக அரசுக்கு இராமதாஸ் கண்டனம்!

ஏப்ரல் 14, 2024

“புதுக்கோட்டை மாவட்டம் சங்கம் விடுதி ஊராட்சி குடிநீர்த் தொட்டியில் மாட்டுச்சாணம் கலந்தது கண்டிக்கத்தக்கது. பட்டியலினத்தோருக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுப்பதில் தமிழக அரசு தொடர்ந்து படுதோல்வி அடைந்து வருகிறது” என்று பாமக நிறுவனர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இராமதாஸ் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், “புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக் கோட்டை ஒன்றியம் சங்கம் விடுதி ஊராட்சிக்குட்பட்ட குருவண்டான் தெருவில் பட்டியலின மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மாட்டுச் சாணம் கலக்கப்பட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன. பொதுமக்கள் குடிப்பதற்கான குடிநீர்த் தொட்டியில் மாட்டுச்சாணம் கலக்கப்பட்டது மனிதநேயமற்றது மட்டுமின்றி மனிதத் தன்மையற்ற செயலாகும். இது கடுமையாக கண்டிக்கத்தக்கது.



குருவண்டான் தெரு குடிநீர்த் தொட்டியில் சில நாட்களுக்கு முன்பாகவே மாட்டுச்சாணம் கலக்கப்பட்டிருக்கக் கூடும் என்று தெரியவந்துள்ளது. அத்தொட்டியிலிருந்து விநியோகிக்கப்பட்ட குடிநீரை குடித்த குழந்தைகள் உள்ளிட்ட பலருக்கு உடல்நலம் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை ஆய்வு செய்த போது தான் இந்த உண்மை வெளிவந்திருக்கிறது.

மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கான குடிநீர்த் தொட்டியில் இது போன்ற மிருகத்தனமான செயல்கள் நடப்பதைக் கண்காணிக்க வேண்டியதும், ஒவ்வொரு நாளும் குடிநீர் மக்கள் பயன்படுத்தத் தக்க வகையில் பாதுகாப்பாக இருக்கிறதா? என்பதை ஆய்வு செய்ய வேண்டியதும் அரசின் பணி. ஆனால், இந்த இரு கடமைகளிலும் திராவிட மாடல் அரசு தோல்வியடைந்து விட்டது.

தமிழகத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக குடிநீர் தொட்டிகளில் மலம், மாட்டுச்சாணம் போன்றவற்றை கலக்கும் நிகழ்வுகள் அதிகரித்து விட்டன. அதிலும் குறிப்பாக பள்ளிகளிலும், பட்டியலின மக்கள் வாழும் பகுதிகளிலும் இத்தகைய நிகழ்வுகள் தொடர்வது மிகுந்த கவலையும், வேதனையும் அளிக்கிறது. பட்டியலின மக்களுக்கு எதிராக இத்தகைய கொடுமைகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் அவற்றைத் தடுக்க தமிழக அரசு தவறி விட்டது.

வேங்கைவயல் குடிநீர்த் தொட்டியில் மலம் கலக்கப்பட்ட கொடூரம் நிகழ்ந்து இன்றுடன் 17 மாதங்களாகி விட்டன. ஆனால், அதில் தொடர்புடைய குற்றவாளிகள் மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாதது தான் இத்தகையக் கொடுமைகள் மீண்டும், மீண்டும் நிகழ்வதற்கு காரணம் ஆகும். வேங்கைவயல் விவகாரத்தில் தமிழக அரசு இனியும் உறங்கிக் கொண்டிருக்காமல் குற்றவாளிகளை அடையாளம் கண்டு, கடுமையான தண்டனை பெற்றுத்தர வேண்டும்.

குருவண்டான் தெரு குடிநீர் தொட்டியில் சாணம் கலக்கப்பட்ட நிகழ்வும் வேங்கைவயல் நிகழ்வு எந்த அளவுக்கு கொடூரமானதோ, அதே அளவுக்கு கொடூரமானது. அனைவரும் மனிதர்கள் தான். பிடிக்காதவர்களை பழிவாங்குவதற்காக இத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் மன்னிக்கப்படுவதற்கு தகுதியற்றவர்கள். இந்த நிகழ்வின் பின்னணியில் இருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை பெற்றுத்தர தமிழக அரசும், காவல்துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.

# உலக செய்திகள்

## 75 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மழை பெள்ளத்தில் மூழ்கிய வளைகுடா நாடுகள்

ஏப்ரல் 17, 2024

75 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிக மழைப் பொழிவை வளைகுடா நாடு கண்ட பிறகு, சில பகுதிகளில் 24 மணி நேரத்திற்கும் குறைவான நேரத்தில் 250 மிமீ (சுமார் 10 அங்குலம்) மழைப்பொழிவு பதிவாகியுள்ளது என்று மாநில ஊடக அலுவலகம் புதன்கிழமை ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.




டுபாய், ஓமான், அமீரகம் ஆகிய வளைகுடா நாடுகளில் கனமழை பெய்து வருகிறது. இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

உலகின் இரண்டாவது பரபரப்பான டுபாய் விமான நிலையத்தில் விமான சேவைகள் தடைப்பட்டன. ஓடுபாதைகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. சாலைகள் வெள்ளத்தில் மூழ்கியது. வாகனப் போக்குவரத்துகளும் முடங்கின.

டுபாய் விமான நிலையத்திற்கு தரையிறங்க வந்த பல விமானங்கள் வேறு இடங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டன. பல விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டன. விமான ஓடுபாதைகள் தண்ணீரில் மூழ்கின. சாலைகளில் மகிழுந்துகளும் தண்ணீரில் மூழ்கின.

இதேபோன்று, துபாயில் உள்ள துபாய் மால், அமீரக மால் உள்ளிட்ட வணிக வளாகங்கள் மற்றும் பிற முக்கிய கட்டிடங்களில் வெள்ளம் சூழ்ந்து காணப்பட்டது. துபாயின் மெட்ரோ ரெயில் நிலையம் ஒன்றில் வெள்ள நீர் புகந்திருந்தது. சாலைகள், குடியிருப்பு பகுதிகள் நீரில் மூழ்கின. பல்வேறு வீடுகளின் மேற்கூரைகள், கதவுகள் மற்றும் ஜன்னல்கள் வழியே நீர் உள்ளே புகுந்தது.

ஐக்கிய அரபு அமீரகம் முழுவதும் வெள்ள பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. அமீரகத்தில் உள்ள பள்ளிகள் முழுவதும் மூடப்பட்டன. இன்றும் புயல் வீசக்கூடும் என முன்னறிவிப்பு வெளிவந்துள்ளது. இதனால், அரசு ஊழியர்கள் வீட்டில் இருந்து பணிபுரிவதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் மேற்கொண்டனர். பஹ்ரைன் மற்றும் ஓமனிலும் புயலால் வெள்ளம் ஏற்பட்டது. ஓமன் நாட்டில் கனமழை மற்றும் பெருவெள்ளத்திற்கு 19 பேர் பலியாகி உள்ளனர்.

மேலும் இடியுடன் கூடிய மழை, பலத்த மழை மற்றும் பலத்த காற்று வீசக்கூடும் என்றும், பல தாழ்வான பகுதிகள் இன்னும் நீரில் மூழ்கும் என்றும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

1,400க்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

ஷர்கியா மாகாணத்தின் அல்-முதைபி பகுதியில் உள்ள வாடி வழியாக செல்ல முயன்ற பேருந்து வெள்ளத்தில்



மூழ்கியதில் 10 முதல் 15 வயதுக்குட்பட்ட 10 பள்ளி மாணவர்களும் ஒரு பெரியவரும் கொல்லப்பட்டனர். மேலும் 3 குழந்தைகள் மற்றும் பேருந்து ஓட்டுநரும் மீட்கப்பட்டனர்.

ஓமானின் இரண்டு வடக்குப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை முதல் 180 மிமீ மழை பெய்துள்ளது, அதே நேரத்தில் மற்ற எட்டு பகுதிகளில் 120 மிமீக்கும் அதிகமான மழை பெய்துள்ளது என்று தேசிய அவசரகால மேலாண்மைக் குழு தெரிவித்துள்ளது. ஓமானில் மழைப்பொழிவு குறைவாக உள்ளது. ஆண்டு சராசரி மழைப்பொழிவு வடக்கில் 150 முதல் 300 மிமீ வரை இருக்கும்.

ஓமனின் வடக்கு அண்டை நாடான ஐக்கிய அரபு எமிரேட்ஸ், 75 ஆண்டுகளுக்கு முன்பு பதிவுகள் தொடங்கியதிலிருந்து செவ்வாய்கிழமை மிகப்பெரிய மழைப்பொழிவை சந்தித்தது. 4 மணி நேரத்திற்குள் அல்-ஐன் எமிரேட்டில் உள்ள காட்ம் அல்-ஷக்லாவில் 254.8 மிமீ மழை பெய்ததாக தேசிய வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.

## இந்தோனேசியாவின் மவுண்ட் ருவாங் எரிமலை வெடிப்பு; சுனாமி அச்சத்தால் மக்கள் வெளியேற்றம்!

ஏப்ரல் 04, 2024

இந்தோனேசியாவின் சுலாவேசி தீவின் வடக்குப் பகுதியில் மவுண்ட் ருவாங் எரிமலை வெடித்து சிதறியதை அடுத்து, புதன்கிழமை சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுனாமி எச்சரிக்கையை அடுத்து 11,000 க்கும் மேற்பட்ட மக்களை வெளியேறுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் இந்த எரிமலை ஐந்து முறை வெடித்து சிதறியுள்ளதாக இந்தோனேசியாவின் எரிமலை மற்றும் புவியியல் பேரிடர் தணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

எரிமலை குழம்பின் வெளியேற்றம் அதிகரித்துள்ளதை தொடர்ந்து அதிகாரிகள் சிவப்பு அபாய எச்சரிக்கை விடுத்த நிலையில் குறைந்தது 800 பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தோனேசியா பசிபிக் நெருப்பு வளையம் என்று அழைக்கப்படும் எரிமலைகள் நிரம்பிய பகுதியில் உள்ளது. இங்கு சிறியதும் பெரியதுமான 120க்கும் மேற்பட்ட எரிமலைகள் உயிர்ப்புடன் உள்ளன. 2,378 அடி உயரத்திலுள்ள ருவாங் எரிமலை உள்ள பகுதியிலிருந்து குறைந்து 6 கிலோமீட்டர் (3.7 மைல்) தொலைவில் இருக்குமாறு சுற்றுலாப் பயணிகளையும் பொதுமக்களையும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

அதேவேளை சமீப காலங்களில் ஏற்பட்ட நிலநடுக்கங்களை தொடர்ந்து ருவாங் எரிமலையில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இந் நிலையில், 1871 ஆம் ஆண்டு வெடித்து சிதறியதைப் போல எரிமலையின் ஒரு பகுதி கடலில் சரிந்து சுனாமியை ஏற்படுத்தக் கூடும் என்று அதிகாரிகள் கவலை அடைந்துள்ளார்கள்.

அதேசமயம் எரிமலையின் வடகிழக்கில் உள்ள டகுலாண்டாங் தீவு மீண்டும் ஆபத்தில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இந்தோனேசியாவின் அனக் க்ரகடாவ் எரிமலை 2018 ஆம் ஆண்டடில் வெடித்து சில பகுதிகள் கடலில் விழுந்து சுமத்ரா மற்றும் ஜாவா கடற்கரையில் சுனாமியை ஏற்படுத்திய நிலையில், 430 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் பரவிவரும் பறவைக்காய்ச்சல் எச்சரிக்கை விடுக்கும் உலக சுகாதார நிறுவனம்!

ஏப்ரல் 19, 2024

H5N1 வைரஸ் பாதிக்கப்பட்ட கால்நடைகளிலிருந்து பெறப்படும் பாலில் H5N1 வைரஸ் அதிகமாக இருப்பதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஜெனீவாவில் இடம்பெற்ற ஒரு ஊடக சந்திப்பிலேயே குறித்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதன்போது, உலக சுகாதார நிறுவனத்தின் உலகளாவிய காய்ச்சல் திட்டத்தின் தலைவர் வென்கிங் ஜாங் பேசுகையில், "H5N1 என்ற பறவைக்காய்ச்சலானது பறவைகளிடமிருந்து, தற்பொழுது ஆடு மாடு போன்ற கால்நடைகளுக்கு பரவியுள்ளது.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளிலிருந்து பெறப்படும் பாலில் இந்தவகை வைரஸ் அதிக அளவு இருக்கிறது" என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வைரஸ் தொற்றானது அமெரிக்காவில் அதிகமாக பரவி வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பழுப்பு நிற ஸ்குவாக்கள் உயிரிழப்பு இதற்கு முன்னதாக தெற்கு அட்லாண்டிக் கடற்கரையின் ஜார்ஜியா தீவில் பல பழுப்பு நிற ஸ்குவாக்கள் (Brown Skuas) இறந்ததை அடுத்து, அதனை பரிசோதனை செய்த மருத்துவர்கள் H5N1 என்ற பறவைக்காய்ச்சலால் அவை இறந்ததாக உறுதிசெய்தனர்.




கொவிட் தொற்றை விட 100 மடங்கு மோசமானது H5N1 வைரஸ் என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இதனால் பாதிப்புக்கு உள்ளானோர் பலியாகும் அபாயம் இருப்பதாகவும் சுகாதார நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# நைஜரிலிருந்து அமெரிக்காப் படைகளை திரும்பப் பெறும் அமெரிக்கா!

ஏப்ரல் 20, 2024

மேற்று ஆபிக்க நாடான நைஜரிலிருந்து அமெரிக்கா தனது படைகளைத் திருப்பப் பெற ஒப்புக் கொண்டதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

அமெரிக்கா நைஜரில் 1,000 க்கும் மேற்பட்ட துருப்புக்களைக் கொண்டுள்ளது மற்றும் அங்கு ஒரு பெரிய ட்ரோன் தளத்தையும் இயக்குகிறது.



நைஜரின் இராணுவ ஆட்சிக்குழுவின் தலைவரான அலி மஹாமன் லாமைன் சைனின் துருப்புக்களை அகற்றுவதற்கான அழைப்பை அமெரிக்க துணை வெளியுறவு அமைச்சர் கர்ட் காம்ப்பெல் ஏற்றுக்கொண்டதாக அமெரிக்க அதிகாரிகள் ஏபிஎவ் செய்தி நிறுவனத்திடம் பெயர் குறிப்பிடாத அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்கப் பிரதிநிதிகள் குழுவொன்று எதிர்வரும் நாட்களில் நாட்டின் தலைநகரான நியாமிக்கு சென்று திரும்பப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பயணம் அடுத்த வாரம் நடக்கும் என நைஜரின் அரசு தொலைக்காட்சி அறிவித்தது. ஆனால் அமெரிக்க வெளியுறவுத் துறை எந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை.

மேற்கு ஆபிரிக்காவில் ஜிஹாதிகளுக்கு எதிரான போரில் அமெரிக்கா மற்றும் பிரான்சுக்கு நைஜர் ஒரு முக்கிய தளமாக இருந்தது. மத்திய நகரமான அகாடெஸ்ூக்கு அருகில் ஏர் பேஸ் 201 என அழைக்கப்படும் 100 மில்லியன் டாலர் ட்ரோன் தளத்தையும் அமெரிக்கா உருவாக்கியது.

இந்த தளம் 2018 ஆம் ஆண்டு முதல் சஹேல் பிராந்தியத்தில் இஸ்லாமிய அரசு போராளிகள் மற்றும் ஜமாத் நுஸ்ரத் அல்-இஸ்லாம் வால் முஸ்லிமீன், அல்-கொய்தாவின் துணை அமைப்பான ஜமாத் நுஸ்ரத் அல்-இஸ்லாம் வால் முஸ்லிமீன் ஆகியோரை குறிவைக்க பயன்படுத்தப்படுகிறது.

இருப்பினும், சமீப காலங்களில் இது அமெரிக்க துருப்புக்களைப் பாதுகாப்பதற்காக கண்காணிப்புக்குப் பயன்படுத்தப்பட்டது.

நைஜரின் இராணுவம் கடந்த ஆண்டு சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி


மொஹமட் பாஸூமை பதவி நீக்கம் செய்தது. அப்போதிருந்து, நைஜரின் மேற்கத்திய நட்பு நாடுகளுடனான உறவுகள் பாதிக்கப்பட்டன.

இராணுவ ஆட்சிக்குழு ஏற்கனவே முன்னாள் காலனித்துவ பிரான்சுடனான ஒத்துழைப்பை முடித்துக் கொண்டது மற்றும் பிரெஞ்சு துருப்புக்களை வெளியேற கட்டாயப்படுத்தியுள்ளது.

இராணுவ ஆட்சிக் குழு ஆரம்பத்தில் அமெரிக்காவுடன் உறவுகளைப் பேண விரும்புவதாகத் தோன்றினாலும், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் சிவிலியன் ஆட்சியையும், இராணுவம் கையகப்படுத்தியதில் இருந்து சிறையில் இருக்கும் பாஸூமின் விடுதலையையும் வலியுறுத்தியதைத் தொடர்ந்து உறவுகள் மோசமடைந்தன.

கடந்த வாரம், நைஜரில் நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் நாட்டில் அமெரிக்க துருப்புக்கள் இருப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அமெரிக்க இராணுவம் திரும்பப் பெறுவது சில காலமாக எதிர்பார்க்கப்படுகிறது.




ஆப்பிரிக்காவில், குறிப்பாக நைஜர், மாலி மற்றும் புர்கினா பாசோவில் தனது இருப்பை வளர்க்க உழைத்து வருகிறது. ரஷ்யாவிற்கு ஆதரவாக செயல்படுகிறது.

ரஷ்ய இராணுவ பயிற்றுனர்கள் வான் பாதுகாப்பு அமைப்பு மற்றும் பிற உபகரணங்களுடன் இந்த மாதம் நைஜருக்கு வந்தனர்.

குறிப்பாக அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகள் பங்கரவாதத்திற்கு எதிராகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு ஆபிரிக்க நாடுகளில் அங்கிருக்கும் பணம் செழிக்கும் வளங்களைத் திருடிக்கொண்டிருந்தார்கள். இதேபோன்று அமெரிக்கா அரசு நாடுகளிலும் பயங்கரவாதத்தை ஒழிப்பதாகக் கூறிக்கொண்டு எண்ணெய் திருடிக்கொண்டிருப்பது அனைவரும் அறிந்ததே.

# காசா மீதான இசுரவேல் போர்: அமெரிக்க மாணவர்கள் காசாவுடன் உறுதியாக நிற்கின்றனர்!

ஏப்ரல் 26, 2024

அமெரிக்க தலைநகரின் மையப்பகுதியில் உள்ள ஜோர்ஜ் வாஷிங்டன் பல்கலைக்கழக வளாகத்தில் இசுரவேலுக்கு எதிராகவும் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாகவும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"சுதந்திர பாலஸ்தீனம்" என்ற கோஷங்களுடன் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாஷிங்டன், டி.சி., பகுதி முழுவதிலும் இருந்து மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஒன்று கூடி பாலஸ்தீனியர்களுடன் காசா மீதான போருக்கு மத்தியில் ஒற்றுமையைக் காட்ட இப்போராட்டத்தை நடத்தினர்.

இசுரவேலின் மனித உரிமை மீறல்களுக்கு தங்கள் கல்லூரிகள் உடந்தையாக இருப்பதாகவும் அதை நிறுத்துமாறு அவர்கள் அழைப்பு விடுத்தனர்.

மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் எதிர்ப்பு முகாமை அமைத்து, நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளில் பாலஸ்தீனிய ஆதரவு ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டனர்.

ஜோர்ஜ் வாஷிங்டனில் உள்ள மாணவர்களுக்கு ஆதரவைக் காட்டவும், ஜோர்ஜ் வாஷிங்டனில் உள்ள அனைத்து மாணவர்களின் கோரிக்கைகளை எழுப்பவும் நாங்கள் இங்கு வந்துள்ளோம்.

பாலஸ்தீனத்தில் இசுரவேலிய இனப்படுகொலைக்கு உடந்தையாக இருக்கும் ஆயுத உற்பத்தி மற்றும் இஸ்ரேலிய நிறவெறியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களில் இருந்து விலகி, இசுரவேலிய பல்கலைக்கழகங்களுடனான உறவுகளை துண்டிக்க வேண்டும் என வலிறுத்தினர்.

ஜனாதிபதி ஜோ பிடன் சில நாட்களுக்கு முன்பு இசுரவேலுக்கு $26 Billion உதவிக்கு ஒப்புதல் அளித்ததை அடுத்து அமெரிக்க பல்கலைக்கழங்களில் போராட்டங்கள் வலுத்து வருகின்றன. மாணவர்களை காவல்துறை கைது செய்துவருகிறது.




பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல்கலைக்கழங்களுக்குள் நுழைய தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

# தெற்கு காசா பகுதியின் ர:.பா நகரின் மீது இசுரவேல் வான் வழி தாக்குதல்; குழந்தைகள் உள்பட 22 பாலஸ்தீனியர் பலி!

ஏப்ரல் 29, 2024

தெற்கு காசா பகுதியின் ரஃபா நகரில் இஸ்ரேல் நடத்திய வான் வழி தாக்குதலில் 22 பேர் கொல்லப்பட்டதாக பாலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இதில் ஆறு பெண்களும் ஐந்து குழந்தைகளும் அடங்குவர்.

பிறந்த ஐந்து நாட்களில் ஒரு குழந்தை இறந்தது.

எகிப்து எல்லையில் உள்ள ரஃபா ஹமாஸின் கோட்டை என்று இசுரவேல் கூறுகிறது. இதனையடுத்து ரஃபா மீது தரைவழி தாக்குதல் நடத்த ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

ரஃபாவில் 10 மில்லியனுக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் வாழ்கின்றனர். காஸா பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள் ரஃபாவிற்கு இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்து வருகின் றனர்.

மனிதாபிமான உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் ரஃபா மீது தரைவழித் தாக்குதலை நடத்த வேண்டாம் என அமெரிக்கா வலியுறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



# தெற்கு காசாவின் ரபா நகரின் மீது இசுரவேலியப் படை கடும் தாக்குதல்!

ஏப்ரல் 27, 2024

தெற்கு காசாவின் ரபா மீதான படையெடுப்புக்கான திட்டத்தை இசுரவேல் விரைவுபடுத்தி வரும் நிலையில் அந்த நகர் மீது தொடர்ச்சியாக செல் மற்றும் வான் தாக்குதல்களை நடத்தி வருகிறது.



தனது நாட்டு எல்லையில் அமைந்திருக்கும் ரபா மீதான படை நடவடிக்கை பேரழிவை ஏற்படுத்தும் என்று அஞ்சும் எகிப்து புதிய போர் நிறுத்த முயற்சியாக உயர் பட்ட தூதுக்குழு ஒன்றை இசுரவேலுக்கு அனுப்பியுள்ளது.

காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக கலம் பெற்றிருக்கும் ரபா மீதான படையெடுப்புக்கு சர்வதேச அளவில் எதிர்ப்புகள் வலுத்திருந்தபோதும் அங்கு தரைவழி நடவடிக்கைக்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இசுரவேல் இராணுவம் கூறியுள்ளது.

இதற்கான சமிக்ஞையாகவே அங்கு தாக்குதல்களும் அதிகரித்துள்ளன. ரபா நகர கடற்கரையில் வேலை செய்துகொண்டிருந்த மீனவர் ஒருவர், இசுரவேல் நேற்று நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் ஒருவர் காயமடைந்ததாக பாலத்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டது.

காசா கடற்பகுதியில் கடுமையான கட்டுப்பாடுகளை செயற்படுத்தி வரும் இசுரவேலினால் அங்குள்ள மீனவர்கள் தொடர்ந்து தொந்தரவுக்கு முகம்கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ‘நட்சரிட் இடைவழியில்’ செயற்படும் இசுரவேலிய படைகளை இலக்கு வைத்து பாலத்தீன போராளிகள் கடந்த வியாழனன்று (25) மோட்டார் மற்றும் மேம்படுத்தப்பட்ட வெடிபொருட்களை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியதாக போர் கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். ரபா மீதான படை நடவடிக்கைக்கு இசுரவேலிய படையினர் வெளிப்படையாக தயாராகி வரும் நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ரபா படையெடுப்பு தொடர்பில் சந்தேகங்கள் வலுத்து வரும் நிலையில் இசுரவேல் இரு மேலதிக படைப்பிரிவுகளை அழைத திருப்பதோடு, ரபாவுக்கு அருகில் கான் யூனிஸ் நகரில் பாரிய அளவில் வரிசையாக கூடாரங்கள் அமைக்கப்பட்டிருப்பது செய்மதி படங்கள் காட்டுகின்றன.

ஹமாஸ் அமைப்பை ஒழிப்பதற்கும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 133 பணயக்கைதிகளை விடுவிப்பதற்கும் ரபா மீதான படை நடவடிக்கை அவசியம் என்று இசுரவேல் கூறி வருகிறது.

எனினும் காசா விளிம்பில் உள்ள ரபா நகர் இடம்பெயர்ந்த மக்களின் கடைசி அடைக்கலமாக இருப்பதோடு அங்கிருந்து அவர்கள் எங்கும் செல்ல முடியாத நிலையில் உள்ளனர். அவர்களை வெளியேற்றவதற்கு இசுரவேல் திட்டமிட்டபோதும் அது நடைமுறை சாத்தியமற்றது என்று ஐ.நா. அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

காசாவின் ஏனைய பகுதிகளிலும் இசுரவேலின் தாக்குதல்கள் தொடரும் நிலையில் வடக்கில் காசா நகரில் உள்ள அல் ஷபா குடும்பத்திற்கு சொந்தமான வீட்டின் மீது இசுரவேலிய போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலை அடுத்து ஒரு குழந்தை மற்றும் பெண் ஒருவர் உட்பட மூவரின் உடல்கள் மீட்கப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதில் பாதிக்கப்பட்டவர்கள் காசா நகரில் இயங்கும் கடைசி மருத்துவமனையான அல் அஹ்லி அரபு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். கடந்த மாதம் இசுரவேல் இராணுவம் நடத்திய பாரிய சுற்றிவளைப்பில் அங்குள்ள மிகப் பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துவமனை அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ரபா மீதான இசுரவேலின் படை நடவடிக்கை பேரழிவையும் பிராந்தியத்தில் ஸ்திரமற்ற நிலையையும் ஏற்படுத்தும் என்று எச்சரித்திருக்கும் எகிப்து, உயர்மட்ட தூதுக்குழு ஒன்றை இசுரவேலுக்கு அனுப்பியுள்ளது.

இழுபறி நீடிக்கும் காசா போர் நிறுத்த பேச்சுவார்த்தையில் புதிய முயற்சியாக எகிப்து உளவுப் பிரிவு தலைவர் அப்பாஸ் கமால் தலைமையிலான குழு ஒன்றே இசுரவேல் விரைந்துள்ளது.

இதில் ஹமாஸ் பிடியில் இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் வடக்கு காசாவில் இருந்து வெளியேறிய கணிசமான எண்ணிக்கையான பாலத்தீனர்கள் தமது வீடுகளுக்கு திரும்ப அனுமதிப்பது தொடர்பிலேயே பேச்சுவார்த்தை முன்னெடுக்கப்படவிருப்பதாக எகிப்து அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.


எனினும் முழுமையான போர் நிறுத்தம் மற்றும் இசுரவேலிய படை வாபஸ் பெறும் தமது நிபந்தனையில் இருந்து பின்வாங்கப் போதில்லை என்று ஹமாஸ் கூறி வருவதோடு அந்த நிபந்தனைகளை இசுரவேல் மறுத்து வருகிறது. ஹமாஸ் முழுமையாக தோற்கடிக்கப்படுவது மற்றும் அதன்பின் காசாவில் பாதுகாப்பு நிலைப்படுத்தப்படும் வரை போர் தொடரும் என்று இசுரவேல் கூறுகிறது.



ரபாவையொட்டி இசுரவேலிய டாங்கிகள் மற்றும் கவச வாகனங்கள் குவிக்கப்பட்டிருக்கும் நிலையில், எகிப்துடனான காசா எல்லையில் இசுரவேலிய துருப்புகள் குவிக்கப்படுவதற்கு அதிருப்தியை வெளியிடவும் இசுரவேல் சென்றிருக்கு எகிப்து தூதுக் குழுவினர் திட்டமிட்டிருப்பதாக நெருங்கிய வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

ரபாவில் உள்ள பாலத்தீனர்கள் எல்லை கடந்து எகிப்துக்குள் வர அனுமதிக்கப்போதில்லை என்று எகிப்து ஏற்கனவே உறுதியாக குறிப்பிட்டுள்ளது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கு எகிப்துடன் கட்டார் மற்றும் அமெரிக்கா மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. எனினும் ரபா மீதான படையெடுப்பு இந்த பேச்சு



ஆதாரம்: பாலத்தீன புள்ளியியல் பணியகம் (2022 மதிப்பீடுகள்), ONS BBC

வார்த்தையை முறிக்கும் என்று ஹமாஸ் அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

‘ரபாவில் இசுரவேல் எதிர்பார்த்ததை அடையாது’ என்று மூத்த ஹமாஸ் அதிகாரியான காசி ஹமாத் தெரிவித்தார். ஏழு மாத போரில் ஹமாஸை ஒழிப்பது அல்லது பணயக்கைதிகளை விடுவிப்பது ஆகிய எந்த இலக்கையும் இசுரவேல் அடையவில்லை என்று அவர் சுட்டிக்காட்டினார்.

காசா போர் இசுரவேல் மற்றும் ஈரான் ஆதரவு குழுக்களுக்கு இடையில் மோதலை தூண்டி இருக்கும் சூழலில் அது பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்புக்கும் இசுரவேலுக்கும் இடையில் தொடர்ந்து மோதல் இடம்பெற்று வரும் நிலையில் ஹிஸ்புல்லா அமைப்பு நேற்று நடத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவன் கொல்லப்பட்டதாக இசுரவேல் கூறியது.

கபர் சுபா மலைப் பகுதியில் ஏவுகணைகள் மற்றும் பீரங்கிகளை பயன்படுத்தி மேற்கொண்ட சிக்கலான அதிரடி தாக்குதலில் இரு இசுரவேலிய வாகனங்களை அழித்ததாக ஹிஸ்புல்லா குறிப்பிட்டது.

இது தொடர்பில் இசுரவேல் நேரடியாக பதில் அளிக்கவில்லை.

தெற்கு லெபனானில் ஷெபா கிராமத்தைச் சூழ ஹிஸ்புல்லா இலக்குகளை இசுரவேலிய போர் விமானங்கள் தாக்கியதாக அது குறிப்பிட்டது. இதில் பல வீடுகளும் சேதமடைந்திருப்பதாக லெபனான் தேசிய செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

காசாவில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் இசுரவேல் மற்றும் ஹிஸ்புல்லா மோதல்களில் லெபனானில் குறைந்தது 380 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு இதில் 252 ஹிஸ்புல்லா போராளிகளும் அடங்குவதாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்தின் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

இந்தக் காலப்பகுதியில் 11 இசுரவேலிய படையினர் மற்றும் ஒன்பது பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். இசுரவேல் மற்றும் லெபனான் எல்லைகளில் வசிக்கும் ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனித குலத்திற்கு எதிரான போர்க்குற்றங்களுக்கு இசுரவேலின் பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி மீது சாத்தியமான ஐ.சி.சி கைது உத்தரவு குறித்து; கவலையில் இசுரவேல்!

ஏப்ரல் 30, 2024

மனித குலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்து இசுரவேலின் பிரதமர் நெதன்யாகு, பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் மற்றும் இராணுவத் தளபதி ஹெர்சி ஹலேவி ஆகியோர் மீது சர்வதேச குற்றவியல் நீதி மன்றம் சர்வதேச ரீதியிலான கைது உத்தரவைப் பிறப்பிக்கலாம் என்ற அச்சத்தால் இசுரவேலிய அதிகாரிகள் கவலையடைந்துள்ளர்.

இதேபோல் ஹமாஸ் தலைவர்களுக்கு எதிராக கைது வாரண்டு பிறப்பிக்கவும் சர்வதேச கோர்ட்டு ஆராயந்து வருவதாக கூறப்படுகிறது.

இதேநேரம் நெதன்யாகுவுக்கு எதிராக கைது உத்தரவைப் பிறப்பிக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தும் பணியில்



அமெரிக்கா ஈடுபட்டிருப்பதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. அத்துடன் இசுரவேலிய அதிகாரிகளும் இது குறித்து அமெரிக்காவுடன் பேசி வருகின்றனர்.

# MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

305 Milner Ave, Unit 301
Toronto ON M1B 3v4
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4




RE/MAX HALLMARK FIRST GROUP REALTY | RAISING THE BAR

1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# “எந்தச் சவாலையும் ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியைத் தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை”

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



இன்று நாம் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில் எதிரியின் எந்தச் சவாலுக்கும் நாம் முகங்கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். எமது மன உறுதிக்கு எதிரி சவால் விடுகின்றான். இந்தச் சவாலை ஏற்பதற்கு எமக்கு ஆன்ம உறுதியைத்தவிர வேறு ஆயுதங்கள் தேவையில்லை. சிங்கள அரசானது ஒருபுறம் போர்க்கொடியை உயர்த்திக்கொண்டு மறுபுறம் சமாதானச் சமிக்ஞைகளைக் காட்டுகிறது. நாம் சமாதானத்துக்கும் தயார்; போருக்கும் தயார். நாம் சமாதானத்தின் வழியைத் திறப்பதா? அல்லது யுத்தத்தின் பாதையிற் செல்வதா? என்பதை எதிரிதான் தீர்மானிக்கவேண்டும். நாம் சமாதானத்தின் கதவுகளைத் திறந்துவிட்டிருக்கின்றோம். சமாதான வழிமுறையில் சமரசப் பேச்சுக்களை நடாத்த நாம் தயார். எந்தவித அழுத்தங் களுமின்றி, எந்தவித ஆதிக்கமுமின்றி, சமத்துவத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் நிபந்தனையின்றிப் பேச்சுக்களில் பங்குகொள்ள நாம் என்றும் தயார்.

எமது கொள்கையை, எமது நிலைப்பாட்டை, எமது தேசியப் போராட்டத்துக்கு ஆதாரமான அடிப்படைகளைச் சிங்கள அரசுக்கும், உலகுக்கும் எடுத்து விளக்கப் பேச்சுவார்த்தைகள் வாய்ப்பளிக்கும்.

நாம் இனத்துவேசிகளல்ல. போர்வெறிகொண்ட வன்முறையாளர்களும் அல்ல. நாம் சிங்கள மக்களை எதிரிகளாகவோ, விரோதிகளாகவோ கருதவில்லை. நாம் சிங்கள தேசத்தை அங்கீகரிக்கின்றோம். சிங்களப் பண்பாட்டைக் கௌரவிக்கின்றோம். சிங்கள மக்களின் தேசிய வாழ்வில் அவர்களது சுதந்திரத்தில் நாம் எவ்விதமும் தலையிட விரும்பவில்லை.

நாம் எமது வரலாற்றுத் தாயகத்தில் ஒரு தேசிய மக்கள் இனம் என்ற அந்தஸ்துடன் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவத்துடன் வாழ் விரும்புகின்றோம். ‘எம்மை நிம்மதியாக வாழவிடுங்கள்’ எனபதுதான் எமது மக்களின் எளிமையான அரசியல் அபிலாஷை. இந்த நியாயமான, நீதியான, நாகரிகமான எமது மக்களின் வேண்டுகோளைச் சிங்கள அரசு எப்போது அங்கீகரிக்கின்றதோ அப்பொழுதுதான் ஒரு நிரந்தர சமாதானமும் தீர்வும் ஏற்பட வாய்ப்புண்டு.

*1991 ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து.*


மரகதம்
வைரம்
முத்து
புஷ்பராகம்
மாணிக்கம்
பவளம்
வைடூரியம்
நீலம்
கோமேதகம்
உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்
லஷ்சுமி
பொற்சாலை
Inside of Majestic City Plaza
அழையுங்கள்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


PSP
PSP MOTORS
QUALITY USED CARS
Dealers in all kinds of used Motor Vehicles
பல வருடம் அனுபவம் கொண்ட நம்பிக்கையான ஸ்தாபனம்
தரமான பாவித்த ஜப்பானிய வாகனங்கள்
நியாயமான விலையில் கிடைக்கும்
WE'LL BUY YOUR USED VEHICLE EVEN IF YOU DON'T WANT TO BUY OURS!
T. Udayakumar
PSP MOTORS 416.871.0450
30 Old Kennedy Road Unit B Markham ON. L3R 0L6
www.pspmotors.com I info@pspmotors.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD NAVIEN
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


நான் பெரிது நீ பெரிது என்று
வாழாமல்
நாடு பெரிது என்று
வாழவேண்டும்
தமிழீழத் தேசியத் தலைவர்
தமிழீழம்
விடியலை நோக்கி



# புலிகள் சேனை கொடிகள் ஏற்றும் தலைவன் பாதை விடியல் காட்டும்!

எம் ஊரெங்கும் உயர்ந்துள்ள கற்பக விருட்சங்களே!
கண் திறவுங்கள்.
வீசும் காற்றுக்கெல்லாம் தலையசைத்து
தாளம் போடுவதை நிறுத்தி “சக்தி“ பெறுக.
உரம் பெற்ற வைர உடல்வாகும்,
குனியோமெனும் வரலாறும்
உமக்குண்டு.
பகைவனுக்கிதனை உணரச்செய்வீர்.
கோடி பனைகள் நிமிர்ந்த தேசமிது.
குலையாதெம் மனவுறுதியென
வடலிகளும் வரிசை கொள்க.
புயலுக்கு அசையாத என் பனைகளே!
தமிழர் தேசத்துத் தருக்களே!
“கருக்குவாளேந்திக்“ களத்திலிறங்குக.
ஊர் புகுந்த பகையே!
உனக்கொன்றுப்போம் கேள்.
வேட்டை நாயென விரட்டி,
சுடுகுழல் வேலியாய்ச் சுற்றி வளைத்து
கூட்டுக்குள்ளே இழுத்துச் சென்றாய்.
ஒப்புதலின்றி உள்ளே கொண்டு சென்றாயே!
இவர்கள் அப்பாவிகளல்லர்...
அமுக்க வெடிகள்.
கோரப்பற்களின் குரூரம் அறியாது
உன் பாதத்தில் வந்து பணிந்தனராம் சிலர்.
இவர்களுன் விசுவாசிகளல்லர்....
அடிவருடிகள்.
சாகும் வரை சிம்மாசனம் தனக்கென்றிருப்போர்.
ஆங்கிலேயர் காலத்திலிருந்தே அடங்கிப்போகும்
பயிற்சியெடுத்த பரம்பரையினர்.
நீ நச்சு விளக்கு கென்பது
அந்த விட்டில்களுக்கு விளங்கவில்லை.
வெண்தாமரை மலர்கள்
ஆரிய குளத்திலும் பூத்துளதாமே.
நீளக் கயிற்றில் கால்களைக் கட்டி
ஆட விட்டுள்ளாய்.
பெருவாழ்வு கைவரப் பெற்றதாய்
எம்மிற் சிலர் பொச்சடிக்கின்றனர்.
உன்னை
நச்சுக் பற்கள் கழற்றிய நாகபாம்பென நம்பி,
எம்மிற் சிலர்
தொட்டு விளையாடவும் தொடங்கி விட்டனராம்.
“ஆமிக்காரன் நல்லவன்“
“இப்படி இருப்பானெனத் தெரிந்தால்
எப்போதோ வந்திருக்கலாம்“,
“அன்பாக பழகினால்
அவனும் மனிதன் தானே“
காற்றோடு காற்றாகக் கலந்து
இந்தக் கதைகளும் எழுந்து வருகின்றன.
விடுதலையின் விலாசமறியாது
இன்னும் சிலர் எம்முள்ளே இருக்கலாம்.
வீட்டுக்குத் திரும்புவதே விடுதலையென்று
வந்துன் வாசலில் வரிசையில் நிற்கலாம்.
புரதான வாழ்வின் பெருமை அறியாது,
நிவாரண வரிசையில் நிற்பதே தொழிலென,
எட்டியுதைக்கும் கால்களுக்கு முத்தமிட்டபடி,
“புத்திஜீவிகள்“ சிலர் உன்னைப்பார்த்து புன்னகைக்கலாம்.
சிங்கக் கொடியை நீயேற்றும் போது
நந்திக் கொடியேற்றவும் நாலுபேர் இல்லாமலா போய்விடும்
“கும்பிட்டு வாழமாட்டோம்” எழுதிய கவிஞன்
உள்ளே வந்துள்ளான்.
கூப்பிட்டழைத்துக் கொடியை ஏற்றுக.
“வானம் எம் வச”மென்று வாழ்த்துப் பாடிய சிலரை
இங்கே காணவில்லை.
சந்தக் கவிஞர்களல்லவா!
உனக்கு வந்தனம் பாட வந்திருப்பார்கள்.
வாசலில் நிற்க வைக்கவும்.
சாமரம் வீச இவர்களே தகுதியானவர்கள்.
“குவேனி“யின் பிள்ளைகளுக்குத் குற்றவேல் செய்ய
“காட்டாற்று“ வேகக் கதைகாரன்
வீட்டுக்கு வந்துள்ளார்.
பதவியுயர்வுக்காக உனக்குப் பாதபூசை செய்வார்.
பழைய பேப்பர் வழங்குக.
அவர்கள் பாடநூல் அச்சிடட்டும்.
“தங்கதேவன் எங்கே?
வந்திருப்பார் உங்கே.
புனரமைப:புக்குப் பொருத்தமானவர்.
வரைபடம் கீற வைத்திருக்கவும்.
புத்தக வெளியீட்டு விழாவில் பேசுவதற்கு...
ஆட்களில்லையென்ற கவலையுனக்கழிந்தது.
பட்டிமன்றம்
கவியரங்கு,
சொற்பொழிவு,
அரங்கேற்றம்,
திருவிழா காலத்துத் திருவூஞ்சற் பாட்டு.
எல்லாவற்றுக்கும் பொருத்தமானவர்கள் உள்ளே வந்துளர்.
ரோச நரம்பை அறுத்தெறிந்துவிட்டு
பேசவரக் கூடியவர்கள்.
உத்திரியச் சால்வை ஒன்று கொடுத்தால் போதும்
பத்துத் தலைப்பில் பட்டிமன்றம் நடத்துவர்.
பகையுடன் இனி உறவில்லையென்று பாடியவர்களே!
உமக்கு என்ன நடந்தது?
உள்ளி கண்ட இடத்தில் பிள்ளைபெறும் வித்தையை
உமக்குச் சொல்லித்தந்தது யார்?
பொழுதெல்லாம் பொய்யாக இருந்துவிட்டா
வலிகாமம் புகுந்தீர்?
உள்ளே செல்ல வரிசையில் நின்ற சிலர்
வெளியே வந்தவரைப் பார்த்து விசிலடித்தார்களாம்.
“பாட்டுக் கேட்கலாம்,
படம் பார்க்கலாம்.
தடுப்பாரின்றித் தண்ணியடிக்கலாம்...”
என்றபடி சிலர் சென்றாராம்.
வெட்கம் கெட்டதுகளுக்கு எப்படி விடுதலை விளங்கும்.
பற்றியெரிந்த நெருப்பிற் குளித்து,
சுற்றி வளைப்பில் சிக்குண்டு,
வன்னிக்கு வரும் வழிகள் அடையுண்டு,
விழிசிந்தி அழுதபடி
உள்ளே சென்றவரே அதிகம்.
வடமராட்சியிலிருந்து ஓடிவந்து,
கொடிகாமத்தில் வரிசையில் நின்று
உள்ளே போனதுகளும் உண்டு.
புலிகளின் கதை முடிந்து போனதென்றா
பகைவனோடு வலிகாமம் போனீர்?
எனக்கும்,
என் பிள்ளைக்கும்,

முடியுமானால் உறவுக்கும்,
என்பது வயது வரை எதுவும் நடக்காமல்
காலம் கழிந்தால் அதுவே போதும்.
விடுதலையென்ன விடுதலை.
யாருக்கது வேண்டும்?
பாலும், பழஞ்சோறும், பாணும் பருப்புமிவை
நாலும் கிடைக்குமெனில் நமக்கதுவே போதும்.
என்றெணிப் போனவருக்கு
ஒன்றுரைப்போம்.
அடிமைத்தனத்தை அற்புதமென்று
பதிகம் பாடிப் பல்லக்கில் சுமக்கவா
அதிகம் விரும்பினீர்?
அடிக்கடி நாக்கு வழித்துக் கொள்ளுங்கள்.
உங்களில் உப்பு உறைக்கட்டும்.
விரைவில் எம் ஊருள் வருவோம்.
இரவு, இரவாக நீள்வதில்லையே.
காலைப்பொழுதைக் கைகளில் தந்துவிட்டு
இரவு கரைந்து கொள்ளும்.

**தமிழர் தேசம் பணிந்திடாது.**
**தலைவன் இருக்கத் தளர்ந்திடாது.**
**என நினைத்து எழுக துணிந்து.**
**எதிரி சேனை கொடிகளேற்றும்.**
**தலைவன் பாதை விடியல் காட்டும்.**

— வைகாசி 1996 — உலைக்களம் - வியாசன்




# குடாரப்புத் தரையிறக்க சமர்க்களம்; 2 நாள் தொடக்கம் 4 நாட்கள் வரை!

'தரையிறங்கிய போராளிகளோடும் தன் மெய்க்காவலர்களோடும் விரக்களியாற்றின் சதுப்பு நிலத்தினூடாக விடியப்புறம்போல் இத்தாவில் சமர்க்களம் நோக்கி நகரும் கட்டளையாளர் கேணல் பால்ராஜ் அவர்கள். இப்படிமமானது ஈழத்தமிழரின் வரலாற்றுப் புகழ்மிக்க படிமமாகும்.'





**குடாரப்புத் தரையிறக்கம்: இரண்டாம் நாள் காலை**

இரத்தப் பெருக்கினை கட்டுப்படுத்துவத்தும் வேலைகளை மருத்துவப் போராளிகளைப் போலவே பெரும்பாலும் எமது எல்லா போராளிகளும் கச்சிதமாகச் செய்வார்கள்.

களத்தில் நிற்கும் எல்லா போராளிகளிடமும் எப்போதுமே இரண்டு அல்லது மூன்று குருதிதடுப்பு பஞ்சணைகள் (Field compressor) வைத்திருப்பார்கள்.

ஒரு காயத்திற்கு எப்படி கட்டுப்போட வேண்டும் எந்தெந்த காயங்களை எப்படியெல்லாம் நகர்த்த வேண்டும் என்பதெல்லாம் அவர்களுக்கும் தெரியும்.

எங்களிடம் காயமடைந்தவர்கள் கொண்டு வரப்ப்பட்ட போது அந்தக் கட்டுக்களை அவிழ்த்து மணலும் சேறும் சகதியுமாய் இருந்த காயங்களை சேலைன் மூலம் கழுவித் துப்பரவு செய்தோம்.

இப்போது காயங்களில் கிருமித் தொற்றுக்கள் (Infection) ஏற்படாது தடுப்பதற்காக நோயுயிர் முறிகள் (Antibiotics) போடப்பட வேண்டும்.

நோயுயிர்முறிகளில் பொதுவாக பென்சிலின் (Penicillin) வகை மருந்துகள் சிறந்தவை.

இரண்டாம் உலகப்போர் காலத்திலிருந்து இன்று வரை பக்ரீரியாக்களுடன் அல்லது நுண்ணுயிர்களுடன் போரிட்டு மாந்தரின் உயிர்காக்கும் அந்த மருந்துகளை ஊசி மூலம் நாளத்தினூடக (Intravenous) ஏற்றவேண்டும்.

இரவு முழுவதும் அதிகரித்த தாக்குதல் காரணமாகவும் மின் சூழ் வெளிச்சம் கூட பாவிக்க முடியாத காரணத்தால் பென்சிலின் போடுவதற்கான சோதனை ஊசி (Penicillin sensitive test) போடுவது சாத்தியமற்று இருந்தது.

எதிரியின் சண்டை உலங்கு வானூர்தி வட்டமிட்டு வட்டமிட்டு தாக்கிய வண்ணம் இருக்க அநேகமான பெரிய காயக்காரருக்கு அம்பிசிலின் ஊசி மருந்துகளையே (Ampicillin Injection) ஏறினோம்.

இன்று காலையும் காயமடைந்தவர்களை வன்னிப் பெருநிலப் பரப்புக்கு அனுப்ப முடியாதிருப்பதை புரிந்திருந்தாலும் நாங்கள் மீண்டும் மீண்டும் கட்டளையாளர்கள் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டிருந்தோம்.

யாழ் மாவட்ட முன்னாள் கட்டளையாளர் திருமிகு செல்வராசா அவர்கள் தளமிட்டிருந்ததால் அவரின் மூலம் கடலில் எங்கள் படகுகள் வரக்கூடியதாக உள்ளதா என்பதை அறிந்து கொண்டோம்.

பெனிசிலினிற்கான சோதனை ஊசிகளை பெண் மருத்துவர் வித்தகி ஏற்றி பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

செறிவான குண்டுத் தாக்குதல்கள் நடைபெறும் ஒரு கொலை வலயத்தில் காயமடைந்தவர்களை ஒரே இடத்தில் வைத்திருந்தால் ஒரு எறிகணையிலேயே நிறைய பேரை இழக்க வேண்டி வரும் என்ற போரியல் பட்டறிவு எம்மிடம் இருந்தது.

ஜெயசிக்குறுய் எதிர்ச்சமரின் போது தமிழீழத்தின் பரவலறி பாடகர் சிட்டு விழுப்புண் அடைந்து பண்டுவம் அளிக்கப்பட்ட பின்னர் தற்காலிக மருத்துவநிலையின் மீது வீழ்ந்த குண்டினால் மீளவும் பாரிய காயமடைந்தே வீரச்சாவு அடைந்தார்.

அந்தச் சம்பவம் போல இங்கேயும் ஏதும் நடந்துவிடக்கூடாது என்பதால் அதிக முன்னெச்சரிக்கையுடன் செயல்பட்டோம்.

வெவ்வேறு மரங்களின் கீழும் வெவ்வேறு இடங்களிலும் உள்ள பதுங்ககழிகளில் பாதுகாத்தோம். வெம்மை கூடிய அந்த மணல் பிரதேசத்தில் பென்னம்பெரிய மரம் ஒன்று கூட இருக்கவில்லை. பரட்டையான மரங்களும் நாவல் மரங்களும் அதிகம் இருந்தன.

சிறுபராயத்தில் வல்லிபுர ஆழ்வார் கோவிலுக்குப் போனால் கடற்கரைக்கும் செல்வோம். எழில் மிகு மணல் திட்டிகள் தாண்டிச் செல்வது கனி பறிக்க, ஆம் நாவல் கனி பறித்துச் சுவைத்து உண்பதற்கு!

இன்றும் அதே கடற்கரையின் சற்றுத் தெற்கே வெற்றிக்கனி பறிப்பதற்காய் தரையிறங்கி நிற்கின்றோம் என்பதை மனம் எண்ணிக் கொண்டது!

அந்த அருங்கனிக்காக நண்பர்களின் இன்னுயிர்களையும் அங்கங்களையும் கொடுக்கவேண்டி இருக்கின்றதே என நினைத்த போது நெஞ்சு கனத்தது.

குண்டுகளால் நிலம் அதிர்ந்து கொண்டிருந்தாலும், நம்பிக்கைகளுடன் காலை விடிந்தது.

தங்கை அருள்நங்கை ஈரத்துணியால் காயமடைந்த பொது மக்கள் போராளிகளின் முகங்களை தாயன்புடன் துடைத்துக் கொண்டிருந்தாள்.

"உண்ண எதாவது கொடுக்கலாமா?" என்று அருள்நங்கை கேட்டாள்.

ஆம் எனச் சொல்லிவிட்டு சாப்பிடு வதற்கு என்ன கொடுக்கப் போகிறீர்கள் என்று கேட்டார் பொறுப்பு வைத்தியர்.

அப்போதுதான் எங்களின் உலர் உணவுப் பொதிகளும் தீர்ந்துவிட்டமை அவளிற்கு நினைவில் வந்தது.

மூன்று நாட்களுக்குத் தேவையான உலர் உணவு தந்து அனுப்பப்படிருந்தாலும் சண்டையில் நின்ற போராளிகளும் தங்களது ஆயுதங்களையே அதிகம் கவனம் கொண்டிருந்ததால், மீதமிருந்த கொஞ்ச உணவுகளையும் தவறவிட்டுவிட்டார்கள்.

நாங்களும் உயிர் காக்கும் உன்னத பணியினை மிகச்சரியாக செய்ய வேண்டும் எனும் உந்துதலே மேலிட்டு நின்றதால் மருந்துப் பொருட்களையும் மருத்துவ தளபாடங்களையும் காவி வந்தோமே ஒழிய உலர் உணவுகளை கொண்டு வருவதில் ஆர்வம் காட்டியிருக்கவில்லை.

இப்போது நோயாளருக்கு உணவு இல்லையே என்ற போது அனைத்து களமருத்துவ போராளிகளின் முகமும் வாடிவிட்டது.

**குடாரப்புத் தரையிறக்கம்: இரண்டாம் நாள் மாலை**

குடாரப்பு தரையிறக்கத்தில் பல நூறு போராளிகளை சில மணி நேரத்தில் தரையிறக்கிய பணியில் பங்கு கொண்டு சிறப்பான பணிதனை ஆற்றியவர்களை கடந்து ஆனையிறவு வெற்றியை பற்றி கதைக்க முடியாது.

அந்த வகையில் அலைகடலை தாண்டி தரைப்புலிகளை பக்குவமாய் தரையிறக்கிவிட்ட கடற்புலி லெப்.கேணல் எழில்கண்ணன் முதன்மை பங்கினை வகித்தார்.

பல்வேறு படையணிகளை வெற்றிகரமாக தரையிறக்கம் செய்துவிட்டு தொடர்ச்சியாக வந்த நடைகளில் ஆயுத உணவு வழங்கல் செய்திட தன்னால் இயன்றளவு முயற்சிகளை எடுத்தவர்.

வெற்றிகரமாக தரையிறக்கம் நடைபெற்ற இரண்டாவது நாள் எதிரி எமது நடவடிக்கையினால் அதியுச்ச விழிப்பு நிலையினை அடைந்துவிட்டதால் சிறீலங்கா கடற்படையினர் முழுமையான தமது பலத்தையும் மாங்கனித்தீவின் வடகிழக்கு திசையில் திருப்பிவிட்டிருந்தார்கள்.

நூறு கடல்மைல்களை துல்லியமாக அவதானிக்க கூடிய அதிநவீன இசுரவேல் தயாரிப்பான "மிதக்கும் கோட்டை"கள் போன்ற கப்பல்கள் உட்பட பல சுப்ப டோரா படகுகள் வடமராட்சி கிழக்கின் கடல் முழுவதையும் ஆக்கிரமித்தன.

காங்கேயன்துறை, திருகோணமலை கடற்படை தளங்களில் இருந்து விரைந்து வந்த எதிரியின் சுப்பர் டோறாக்கள் ஆர்ப்பரிக்கும் கடல் அலையின் பயங்கரத்தையும் விஞ்சியே நின்றன.

அத்தனை கடல் படைவகுப்புகளையும் உடைத்துக் கொண்டு லெப்.கேணல் எழில்கண்ணன் தலைமையிலான கலத்தொகுதி சுண்டிக்குளம் கடலோரம் இருந்து தன் பயணத்தை தொடர்ந்தது.

தாழையடியை அண்டிய கடலோரம் வரை வெற்றிகரமாக பெருமளவு உடன் சமைத்த உணவு, உலர் உணவு மற்றும் தகரி எதிர்ப்பு ஆயுதமான எஸ்.பி.ஜி-9 (LPG - 9) உட்பட சில கனவகை ஆயுதம் உட்பட நடைபேசி (வோக்கி)களுக்கான மின்கலம் உட்பட அந்த களத்துக்கான இன்றியமையா பொருள்களுடன் அந்த கலத்தொகுதி வந்து கொண்டிருந்தது.

வளர்ச்சியடைந்த நாடுகளின் உயர் கடற்படை பயிற்சி மற்றும் அதிநவீன கண்காணிப்பு வசதிகளுடன் கடலில் நின்று கொண்டிருந்த எதிரியின் தாக்குதல் படைவகுப்பினுள் ஈற்றில் அந்தப் படகு அகப்பட்டுக்கொண்டது.

"கடற்சூரியன்" என புகழப்படும் இந்த வீரன் அந்த நிலையிலும்



தன்னையும் கலத்தொகுதியையும் சம நிலைப்படுத்தி தனது படகினை விடுதலைப் புலிகளினால் தரையிறக்கத்தின் மூலம் புதிதாக தமது ஆளுகையின் கீழ் கொண்டு வந்த செம்பியன் பற்று கடற்கரையினை நோக்கி செலுத்திவிட்டிருந்தார்.

படகு தரைதட்டிய சில விநாடிகளில் மயக்க நிலையினை அடைந்தார். தலையில் ஏற்பட்ட பலமான காயமே இந்த வீரனை கோமா நிலைக்கு இட்டுச் சென்றது.

கலத்தொகுதிக் கட்டளையாளரான லெப்.கேணல் எழில் கண்ணன் விழுப்புண் அடைந்த நிலையில் செம்பியன்பற்றில் அன்றிருந்த களமுனை வைத்தியசாலையில் எங்களால் சிகிச்சை அளிக்கப்பட்டார்.

அங்கேயே பராமரிக்கப்பட்ட எழிற்கண்ணன் தரைப்பாதை பிடிக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து கட்டைக்காட்டில் அமைக்கப் பட்டிருந்த மருத்துவர் தூயவன் அவர்களின் கடமையிலிருந்த வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

உடல் தேறிய பின்னரும் பல களங்களை கண்ட இந்த வீரன் ஒரு ஊர்தி நேர்ச்சியில் சிக்கி 2006 ஆண்டு புரட்டாதி மாதம் சாவடைந்தார்.

குடாரப்புத் தரையிறக்கம்: மூன்றாம் நாள்




இவர் எழுதியது கிடைக்கப்பெறவில்லை!

**குடாரப்புத் தரையிறக்கம்: நான்காம் நாள் – வழி திறக்கப் பட்டது...**

குடாரப்பில் கடல்வழி தரையிறங்கிய அணிகளுக்கான தரைப் பாதை திறக்கப்பட்டமை ஆனையிறவு முற்றுகை போருக்கான முதல் கட்ட வெற்றி ஆகும்.

இந்த தரைவழிப்பாதை திறக்கப்பட்ட அந்த கணங்களின் உற்சாகத்தையும் மகிழ்வினையும் சொற்களில் வடிக்க முடியாது.

களத்திலும் தளத்திலும் நின்ற போராளிகளுக்கும் களநிலவரங்களை நன்கு அறிந்த பொதுமக்களுக்கும் கால்கள் தரையில் முட்டவில்லை.

வன்னிப் பெருநிலப்பரப்பிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையே அமைந்துள்ள எல்லை ஊரில் தொடங்கி கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி ஆழியவளை, உடுத்துறை, தாழையடி ஊடாக அந்த தரைப்பாதையை ஏற்படுத்தியவர் பிரிகேடியர் தீபன் ஆவார்.

பிரிகேடியர் தீபன் அவர்களின் கட்டளையை ஏற்று சமராடிய படையணிகளாவன,

புலனாய்வுத்துறை தாக்குதலணி, கடற்புலிகளின் தரைத்தாக்குதல் அணி, ஜெயந்தன் படையணி, ராதா வான்காப்புப் படையணி, ஆகிய படையணிகளுடன் வேறு சில அணிகளும் களமாடி அந்தச் சண்டையை வென்றனர்.

நீண்ட கடற்கரையோரமாக அமைக்கப்பட்டிருந்த சிறிலங்காப் படைத்துறையினரின் பதின்மூன்று (13) கிலோமீற்றர்கள் நீளமான படைத்துறை வேலிகளையும் தளங்களையும் தங்ககங்களையும் கைப்பற்றி தகர்த்தழித்து தரைப்பாதையை தமிழினத்தின் விறலோன்கள் திறந்தனர்.

விழுப்புண் அடைந்த வீரர்களையும் படுகாயமடைந்த சில பொதுமக்களையும் வன்னியில் உள்ள வைத்திய சாலைகளுக்கு அனுப்பக் கிடைத்தமை ஆறுதல் தந்தது.

அஃதே,

முற்று முழுதாக தீர்ந்துவிட்ட மருந்துவ பொருட்களையும் உடனடியாகவே வன்னியிலிருந்து எடுத்துக் கொள்ளவும் முடிந்தது.

நான்காவது நாளாகிய இந்த நாளில் தாழையடி பெருந்தளம் மீட்கப்பட்டு கண்ணிவெடி, பொறிவெடிகள் ஆகியன முழுமையாக அகற்றிடாத அந்த நேரத்தில் எங்களைப் பார்க்க ஜவான் அண்ணர் விரைந்து வந்தார்.

ஆம், இருபத்தொரு (21) ஆண்டுகளுக்கு முன்னர் இதே மார்ச் மாதம் "புலிகளின்குரல்" வானொலிப் பணிப்பாளர் திருமிகு தமிழன்பன் (ஜவான்) அவர்கள் இத்தாவில், நாகர்கோவில் களமுனைகளில் போராளிகளைச் சந்தித்து வாழ்த்துக் கூறி உற்சாகம் ஊட்டினார்.

ஒரிரு தடவைகள் அல்ல பல தடவைகள் பெட்டிச்சமர் நடைபெற்ற பகுதிக்கு வந்தார்.

சமர்களநாயகன் தொடக்கம் சாதாரண போராளிகள், சிறப்பு எல்லைப்படை வீரர்கள் வரை ஒவ்வொரு வரையும் அவர்களின் காவலரண்களுக்கு சென்று சந்தித்து கைலாகு கொடுத்து வாழ்த்தினார்.

"ஊரிலும் புலம் பெயர் நாடுகளிலும் எங்கடை சனம் வெற்றிச் செய்திக்காக பிரார்த்தித்த வண்ணம் இருக்கின்றனர்" என திரு.தமிழன்பன் (ஜவான்) அவர்கள் சொன்ன போது பல போராளிகள் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

அஃதே,

களமுனை வீரர்களின் உள்ளத்துச் சிந்தனைகளையும் மக்களுக்குச் சொல்ல வேண்டிய சேதிகளையும் பேட்டிகளாக எடுத்துச் சுடச்சுட பகல் நேர தமிழீழ வானொலியிலும் இரவு நேர புலிகளின் குரல் வானொலியிலும் (VoT) ஒலிபரப்புச் செய்தார்.

திருமிகு தமிழன்பன் (ஜவான்) அவர்களை போலவே விடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்த உறுப்பினர் திருமிகு காக்கா (சங்கர்) அவர்களும் தொடர்ந்து வந்த நாட்களில் களத்திற்கு வருகை தந்தார்.

இருவருமே நல்லூக்கம் நல்கியதுடன் நின்றுவிடாது அந்த வியன்களத்தை வரலாறாகவும் பதிவு செய்தார்கள்.

காக்கா அண்ணனால் எழுதப்பட்ட அந்த வரலாற்று ஆவணமானது "மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள்" எனும் பெயரில் நூல் வடிவில் வெளியீடு செய்யப்பட்டது.




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# வல்வைப் படுகொலை 13 மே 1997

யாழ்மாவட்டத்தில் பருத்தித்துறைப் பகுதியில் வல்வைக்கிராமம் உள்ளது. 10.05.1985 அன்று சிறீலங்கா இராணுவம் வல்வைக் கிராமத்தைச் சுற்றி வளைத்தது 24 இளம் ஆண்களை கைது செய்தது. அங்குள்ள ஒரு பொதுமண்டபத்தில் இவர்கள் அனைவரும் அடைக்கப்பட்டனர். பின்னர் இம்மண டபத்தின் மேல் குண்டு வீசப்பட்டு அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த 24 ஆண்களும் கொல்லப்பட்டனர். அதே சமயத்தில் அவ்வூர் கோவில் கேணியருகே மேலும் 12 பொது மக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டனர். இதைவிட மேலும் 34 பொதுமக்கள் அன்று கொல்லப்பட்டனர். அவ்வூரில் அன் றைய தினம் 70 பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# முள்ளிவாய்க்கால் படுகொலை – 13 மே 1997

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறை பற்றுக் பிரதேச செயலர் பிரிவில் முல்லைத்தீவு நகரத்திலிருந்து பரந்தன் வீதியில் சுமார் ஐந்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமமே முள்ளிவாய்க்கால் மேற்குப் பிரதேசமாகும். இக்கிராமத்தின் பொருளாதாரம் மீன்பிடி, விவ சாயம் என்பனவற்றிலேயே தங்கியுள்ளது.

1997ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்கால் கிரா மத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மீன வக் குடும்பங்கள் இங்குள்ள கடற்கரை யோரங்களில் செறிவாகக் குடியேறி கடற் றொழிலில் ஈடுபட்டுவந்தார்கள்.

13.05.1997ஆம் ஆண்டு முற்பகல் விமானப் படையின் “கிபிஉ” விமானங்கள் இப்பகுதியில் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வர்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக்கொண் டிருந்த ஒன்பது மீனவர்கள் உயிரிழந்ததுடன், வீதி புனரமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூவர் உட்பட பத்துப் பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. ஆறுமுகம் சிவாஸ்மகேந்திரம் - கடற் றொழில் 38
02. நாகராசா தவரத்தினராசா - விவசாயம் 24
03. சின்னையா ஆறுமுகம் - கடற்றொழில் 68
04. பொன்னம்பலம் பாக்கியராசா - கடற் றொழில் 60
05. சுப்பிரமணியம் அஜந்தன் - கடற்றொழில் 15
06. சிவகுரு மகேந்திரன் - கடற்றொழில் 39
07. சிவகரன் துதிகரன் - கடற்றொழில் 18
08. மல்லி - 42
09. இராமசிங்கம் இராசையா - கடற்றொழில் 73

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக் கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ரவீந்திரன் 28
02. செ.கோணேஸ்வரன் 33
03. ஆ.சுதன் 20
04. கதிர்காமு சிங்கம் 25
05. கணபதிப்பிள்ளை நாகலிங்கம் 48
06. செல்வநாதன் சிறீபத்மநாதன் 31
07. க.கணேசலிங்கம் -
08. ஜெ.ரவிக்குமார் 15

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# உதயன் பணிமனை படுகொலை – 02 மே 2006






ஊடகங்கள் ஒரு நாட்டிற்கும் சமூகத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படு கின்றன. இவ் ஊடகங்கள் சுதந்திரமான முறையில் செயற்படும் போதே அவற்றால் சிறப் பாகவும் நடு நிலைமைத் தன்மை யாகவும் செயற்படமுடியும். இலங்கையின் ஊடகங் களின் சுதந்திரம் பல வருடங்களாகப் பறிக்கப் பட்டு வருகின்றது. அந்தவகையில் யாழ்ப் பாணம் உதயன் பத்திரிகை நிறுவனம் மீதான தாக்குதலும் ஊடக சுதந்திரத்திற்கு சாவு மணியடிக்கும் சம்பவமாகவே அமைகின்றது.

02-05-2006 அன்று மாலை உதயன் பணி மனை தனது வழமையான பணிகளுடன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் பத்திரிகைக்கான தயார்ப் படுத்தலில் பணியாளர்கள் ஈடுபட்டுக்கொண்டி ருந்தனர். இவ்வேளையில் இரவு 7.30 மணியளவில் உதயன் பணி மனையினுள் புகுந்த சிறீலங்கா இராணு வத்தினரும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் அங்கு பணிபுரிந்து கொண் டிருந்த பணியாளர்கள் மீது கண் மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டனர். இதில் இரண்டு பணியாளர் உயிரிழந்தனர் மூன்று பேர் படுகாயமடைந் தனர். மேலும் அங்கு பல இலட்சம் ரூபா பெறு மதியான சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன. இத்தாக்குதலானது தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவ துடன் மிகவும் காட்டு மிராண்டித்தனமானது என இலங்கை பத்திரிகையாளர் சங்கம், இலங்கை ஊடக வியலாளர் ஒன்றியம், ஊடகத்துறை அமைப் புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பஸ்ரியன் ஜோர்ச் சகாயதாஸ் (சுரேஸ்), 30
02. இராசரத்தினம் ரஞ்சித்குமார், 28

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)





# உதயன் பணிமனை படுகொலை 02 மே 2006








# நெல்லியடிப் படுகொலை – 04 மே 2006

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் முச் சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது இலங்கை இராணு வத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஏழு இளைஞஉகள் உயிரிழந்தனர்.

இச்சம்பவமானது 04-05-2006 அன்று பிற்பகல் 2.15 மணியளவில் யாழ் வடமராட்சி நெல்லியடிச்சந்திக்கு 300 மீற்றர் தொலைவில் நவின்டிலில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் புலனாய்வுத்துறை முகாமிற்கு அண்மையாக இடம்பெற்றது. இவர்கள் சகநண்பர் ஒருவரின் விருந்து உபசாரத்தில் கலந்து கொள்வதற்காக முச் சக்கரவண்டிகளில் சென்றுகொண்டிருக்கும் போது இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்திற்கு சற்று முன்னதாக இப்பகுதி இராணுவமுகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதில் மூன்று இராணுவப் புலனாய்வாளர்கள் காயமடைந்தனர். அதன் பின்னரே இப்படு கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. செல்வராசா சுமன், 22
02. வேலுப்பிள்ளை நிமலன், 21
03. நாகரத்தினம் நகுலேஸ்வரன், 18
04. பாலச்சந்திரன் கிரிசாந்தன், 18
05. தாமோதரம்பிள்ளை சர்மிலன், 17
06. நவரட்ணராஜா நாசண்ணா, 19
07. சுப்பிரமணியம் சுபாஸ், 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மந்துவில் படுகொலை – 06 மே 2006

யாழ். மந்துவில் கோலத்தம்மன் ஆலய கும் பாபிஷேக முன் ஏற்பாடுகளைச் செய்வதற்காக 06.05.2006 அன்று இரவு எட்டு இளை ஞர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது இரவு 7.00 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இலங்கை இராணுவத்தினர் அங்கிருந் தவர்களை விசாரித்துவிட்டுச்சென்றனர். பின்னர் இரவு 11.00 மணியளவில் மீண்டும் வேறு ஒரு இராணுவ அணி அப்பகுதிக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணியளவில் ஜீப் வாகனம் ஒன்று அங்கே வந்ததைத் தொடர்ந்து பின்னிரவு 1.00 மணியளவில் துப்பாக்கி வேட்டுச்சத ்தங்கள் கேட்டன. அதனைத் தொடர்ந்து அவலக் குரல்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித் தனர். இராணுவ அச்சம் காரணமாக வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்த மக்கள் காலை வேளையில் தமது உறவுகளைத் தேட ஆரம் பித்தனர். அப்போது ஆலயத்தின் தேர்முட்டி சுவர்ப்பகுதியிலும் வீதி ஓரங்களிலும ் மண் ணால் மறைக்கப்படட் இரத்தத் தடயங்கள் காணப்பட்டன.

பின்னர் இவர்களது உயிரற்ற உடல்கள் வட மராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடை யிலுள்ள கப்பூது கண்டல் காட்டுப்பகுதியில் இருப்பதாகக் கூறப்பட்ட போதும் பின்னர் அப்பகுதியில் சடலங்கள் எதுவும் இல்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தகவல் தெரிவித்தனர். இப்பகுதிக்கு மக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. காணமற்போன எட்டுப் பேரும் இலங்கை அரசபடைகளினாலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என அப்பகுதிமக்கள் கூறுகின்றனர். இது தொடஉபாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என படு கொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி பரிமேலழகன், 22
02. இரத்தினம் தயாளுபன், 21
03. பொன்னம்பலம் பார்த்தீபன், 22
04. வைகுந்தவாசன் வைகுந்தகுமார், 22
05. இராமச்சந்திரன் இராசகுமார், 24
06. செல்வரட்ணம் சிவானந்தன், 24
07. மார்க்கண்டு புஸ்பகாந்தன், 26
08. இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி, 35

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# அல்லைப்பிட்டி படுகொலை – 13 மே 2006








இலங்கையின் வடபுலத்தில் உள்ள யாழ் மாவட்டத்தின் தீவகப்பகுதியானது யாழ்நகரில் இருந்து தென்மேற்காக 15 கிலோ மீற்றர் துராத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் இலங்கை கடற்படையினரது பூரண கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் உள்ளது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் நாள் சிறீ லங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் மக்கள் அடையாள அட்டை, உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின் னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டு வந் தனர். இப்பிரதேசத்தில் கடற்படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் செயற் பட்டு வருகின்றனர். இலங்கையின் புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்னர் தமிழ்மக்கள் மீதான வன் முறைச் சம்பவங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன் ஒரு அங்கமாக அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் 13-05-2006அன்று இடம்பெற்ற படு கொலைச்சம்பவமானது அமைகின்றது.

யாழ் தீவகம் அல்லைப்பிட்டியில் 13-05-2006 அன்று இரவு அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் தேவாலயத்திற்கு அண்மையிலுள்ள செல்லத் துரை அமலதாஸ் என்பவரது வீட்டில், அயலி லுள்ள மக்களும் இராணுவ அச்சம் காரண மாக இரவில் தங்குவது வழக்கமாக இருந்தது. அன்றும் அப்படியே அங்கு கூடியிருந்தனர். அவ்வேளை அப்பகுதிக்கு வாகனங்களில் வந்த கடற்படையினர் அப்பகுதி வீடுகளிற்குள் சென்று மின் விளக்குகளை அணைத்து விடுமாறு ஒட்டுக்குழுக்கள் மூலம் மிரட்டினர். பின்னர் அமலதாஸ் என்பவரது வீட்டிற்குச் சென்று அங்கு உறங்கிக் கொண்டிருந்த பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் அவ்வீட்டில் தங்கியிருந்த 11 பேரில் 08பேர் உயிரிழந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் உள்ளடங்குவர். இதில் தமது பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருநத் 04 மாதச்சிறுவனும் 04 வயதுச் சிறுவனும் பரிதாபகரமாக உயிரிழந்தார்கள். காயமடைந்த ஏனையோரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல அனுமதிக்கப்படாததால் காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.

இதே வேளை சில கடற்படையினர் புளியங் கூடலிலுள்ள சண்முகலிங்கம் என்பவரது வீட்டுக்குள் புகுந்து அக்குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரைச் சுட்டுக்கொன்றனர். அடுத்தாக வங்களாவடி என்ற இடத்தில் தேனீர்ச் சாலை உரிமையாளரான செந்தூரன் என்பவரது வீட்டிற்குள் புகுந்து செந்தூரன் என்பவரைச் சுட்டுக்கொன்றனர். இவ்வாறாக அன்றிரவு 13 பொதுமக்கள் உயிரிழந்தனர். பல பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர். பல கடைகள், பல இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பாலசாமி கேதீஸ்வரன், 25
02. கேதீஸ்வரன் அனெக்ஸஸ்தர், 25
03. கேதீஸ்வரன் தனுஷ்காந், 04
04. கேதீஸ்வரன் யதுசன், 04 மாதம்
05. ஆபிரகாம் றொபின்சன், 28
06. செல்லத்துரை அமலதாஸ், 28
07. கணேஸ் நவரட்ணம், 50
08. யோசப் அந்தோனிமுத்து, 64
09. சின்னத்துரை சிவநேசன், 46
10. எம்.சண்முகலிங்கம், 60

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலையப்படுகொலை 10 மே 2009

முல்லைத்தீவில் 10.05.2009 ஒரே இரவில் 2,000 பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். சனிக்கிழமை 10 மே 2009 இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை “பாதுகாப்பு வலயத்தில்” சிறீலங்கா இராணுவம் கண்மூடித்தனமாக எறிகணை வீச்சு நடத்தியது, எராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 2,000 க்கும் மேற்பட்ட பொதுமக்களை படுகொலை செய்ததாக வன்னியில் உள்ள மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. தற்காலிக மருத்துவமனையில் இறந்த உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக் கிடந்தன. சர்வதேச அளவில் தடைசெய்யப் பட்ட இராசயன (கிளஸ்டர்) குண்டுகள் மற்றும் மல்ரி ராக்கெட் மற்றும் பீரங்கிகளிலிருந்து சுடப்பட்ட குண்டுகள் போன்ற ஒவ்வொரு வகையான ஆபத்தான ஆயுதங்களாலும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்பட்ட பகுதி ஒரு கொலைக் களமாக மாற்றப்பட்டு இருந்தது. இறந்த உடல்கள் பதுங்கு குழிகளிலும், தார்ச்சாலைக் கூடாரங்களுக் குள்ளும் காணப்பட்டன.





# சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களினாலும் மற்றும் பட்டினியாலும் முள்ளிவாய்க்காலில் பொதுமக்கள் படுகொலை - 01.05.2009

சிறீலங்கா இராணுவம் முள்ளிவாய்க்கால் மீது பீரங்கி, மோட்டார் மற்றும் மல்டி-பேரல் ராக்கெட் லாஞ்சர் (MBRL) துப்பாக்கிச் சூட்டை முடுக்கிவிட்டது, இது முள்ளிவாய்க்கால் கிராமத்தில் வெள்ளிக்கிழமை 09 முதல் பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது. வெள்ளிக்கிழமை காலை 30 மணி. மாலை முழுவதும் பல மணிநேரம் ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தற்காலிக மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் காயங்களால் இறந்தவர்களின் இறப்புகளை மட்டுமே தெரிவிக்க முடிந்தது. 110 காயமடைந்த பொதுமக்கள் மாலை 4:30 மணி வரை அனுமதிக்கப்பட்டனர். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் தாக்குதலுக்கு உள்ளான முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில். காயமடைந்தவர்களில் 27 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலினால் பலர் கொல்லப்பட்டனர், அவர்களது உறவினர்களால் புதைக்கப்பட்டனர் அல்லது எரிக்கப்பட்டனர்.

வியாழக்கிழமை சுமார் 200 பொதுமக்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் 39 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

முள்ளிவாய்க்காலுக்கு வடக்கே கடுமையான துப்பாக்கிச் சூடு மற்றும் கடுமையான துப்பாக்கி சூட்டுப் பரிமாற்றம் இடம் பெற்றது பதிவாகியுள்ளது, அங்கு பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதற்குள் கிராமத்தின் நெரிசலான தெற்குப் பகுதிகளை நோக்கி பொதுமக்கள் தப்பி ஓடினர்.

கடந்த 24 மணி நேரத்தில் பொதுமக்கள் இரவும் பகலும் பதுங்கு குழிக்குள் இருக்க வேண்டியிருந்தது. பலர் உறங்கிக் கொண் டிருந்த போது கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், சிறீலங்கா அரசாங்கம் வேண்டுமென்றே மனிதாபிமான பொருட்களை வாரக்கணக்கில் மட்டுப்படுத்தியதால் முல்லை மண்ணில் பட்டினி நிலவியது.



ஏப்ரல் 30 2009 ஆம் திகதி இரவு தூக்கத்தில் தந்தையும் அவரது குழந்தையும் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் பலி

















# சிறீலங்கா இராணுவம் நோயாளிகளை குறிவைத்து எறிகணை வீசியதில் 64 பேர் மருத்துவமனையில் படுகொலை – 02.05.2009

சிறீலங்கா இராணுவம் சனிக்கிழமையன்று எஞ்சியிருந்த ஒரே ஒரு தற்காலிக மருத்துவமனையை இரண்டு முறை தாக்கியது, 64 நோயாளிகள் மற்றும் உறவினர்களைக் படுகொலை செய்தது, 87 பேர் காயம் அடைந்தனர். சுமார் 9 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தினால் எவப்பட்ட இரண்டு பீரங்கி குண்டுகள் முள்ளிவாய்க்காலில் உள்ள மருத்துவமனையை தாக்கப்பட்டது: காலை 09:00 மணிக்கு 23 பேரைக் கொன்று, 34 பேரைக் காயப்படுத்தியது, பின்னர் காலை 10:30 மணியளவில் பல குண்டுகள் வீசப்பட்டன, 41 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 53 பேர் படு காயப்படுத்தினர். மூன்று நாட்களுக்கு முன்பு மருத்துவமனை வளாகத்தின் துல்லியமான ஆயங்களை வரைபடமாக சிறீலங்கா இராணுவத்திற்கு வழங்கியதை அடுத்து, தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ICRC மற்றும் இலங்கை விமானப்படையின் ஆளில்லா வான்வழி விமானங்கள் (UAV) ஆகியன மருத்துவமனை பகுதியை கண்காணித்து வந்தன. எனினும் பொதுமக்களை நிர்ப்பந்திப்பதற்காகவே இந்த படுகொலை கணக்கிடப்பட்டுள்ளது என மீட்பு பணியாளர் ஒருவர் கூறியது, மகிந்த ராஜபக்சவின் செய்தியுடன் வெள்ளியன்று வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்களை மேற்கோள் காட்டி பொதுமக்களை சிறீலங்கா இராணுவத்தின் பக்கம் வருமாறு கேட்டுக் கொண்டார்.




இதில் பெண் தொண்டர் மருத்துவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மூன்று மருத்துவ ஊழியர்கள் காயம் அடைந்தனர், அவர்களில் ஒருவர் செயலிழந்தார்.

தற்காலிக மருத்துவமனையின் பிரதான OPD காலை 9:00 மணியளவில் மருத்துவமனை வெளிநோயாளிகளால் மிகவும் பரபரப்பாக இருந்தபோது தாக்கப்பட்டது. 400க்கும் மேற்பட்ட காயமடைந்த நோயாளிகள் கட்டிடத்திலும் அதைச் சுற்றியும் தங்க வைக்கப்பட்டனர்.

மருத்துவமனையின் தாக்குதலுக்கு உள்ளான பகுதியை மருத்துவ ஊழியர்களும் தன்னார்வலர்களும் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோது இரண்டாவது தாக்குதல் நடந்தது.

ICRC உடன் ஒருங்கிணைக்கும் மருத்துவ ஊழியர் ஒருவர், கடந்த முறை மருத்துவமனை தாக்கப்பட்டபோது, மூன்று நாட்களுக்கு முன்பு மருத்துவமனையின் ஆயங்களை வரைபடமாக்கி இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்திற்கு வழங்கியதை உறுதி செய்தார்.
அரசு பொதுமக்களை இடமாற்றம் செய்ய விரும்பும் ஒவ்வொரு முறையும் மருத்துவமனை மீது இலக்கு தாக்குதல்கள் நிகழ்கின்றன, மீட்புப் பணியாளர் மேலும் கூறினார்.









# முள்ளிவாய்க்கால் பகுதியில் சிறீலங்கா படையின் தாக்குதல்களில் 15 குழந்தைகள் உட்பட 45 பொதுமக்கள் படுகொலை – 08.05.2009

சிறீலங்கா இராணுவம் வியாழன் மற்றும் வெள்ளி முழுவதும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதற்குள் உள்ள முள்ளிவாய்க்காலில் உள்ள பொதுமக்களின் இலக்குகள் மீது கொத்துக் குண்டுகளுடன் கடுமையான ஷெல் தாக்குதல்களை தொடர்ந்தது மேற்கொண்டது.



சிறீலங்கா விமானப்படையின் கண்காணிப்பு விமானம், பொது மக்களை குறிவைக்கப்பட்டு, மக்கள் செறிவான இடங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதலை சிறீலங்கா இராணுவம் வழங்கியதால், பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை மட்டும் குறைந்தது 242 பொதுமக்கள் காய மடைந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். காயமடைந்தவர் களில் 15 குழந்தைகள் உட்பட 45 பேர் பலியாகியுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளிக்கிழமை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் முள்ளிவாய்க்கால் கிழக்கில் கூழ் உணவு எடுக்கக் காத்திருந்தபோது காயமடைந் தவர்கள் என அறியப்படுகின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட மனிதாபிமான பொருட்களைப் பெறுவதற் காக வரிசையில் நின்ற மக்கள் மீது வியாழக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது. ஐசிஆர்சி வாகனங்களும் தாக்கப்பட்டன. இருப் பினும், வியாழக்கிழமை 400 காயமடைந்தவர்களை ICRC கொண்டு செல்ல முடிந்தது. ஆனால், வெள்ளிக்கிழமை ICRC கப்பல் கடுமையான ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களை கொண்டு செல்ல ஐசிஆர்சியால் முடிக்க முடியவில்லை.














# முல்லைத்தீவில் இருந்து ICRC கப்பல் புறப்பட்டபோது சிறீலங்கா இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல் 'பாதுகாப்பு வலயத்தின்' மீது மேற்கொண்ட தாக்குதலின் போது பெரும் பொதுமக்கள் உயிரிழப்பு. 09.05.2009

சிறீலங்கா இராணுவம் சனிக்கிழமை காலை 7:00 மணியளவில் பாதுகாப்பு வலயத்தின் மீது கடுமையான எறிகணைத் தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது. ஒரு மணி நேரத்திற்குள், 50 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் முள்ளிவாய்க்காலில் உள்ள ஒரு சிறுவர் பாடசாலையில் இயங்கும் தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவமனை வட்டாரத் தகவல் சனிக்கிழமை இரவு தெரிவிக்கப்பட்டது. 120,000 முதல் 165,000 வரையிலான பொதுமக்கள் நெரிசலுக்கு மத்தியில் போதிய மனிதாபிமான பொருட்கள் இல்லாமல் பட்டினி கிடக்கும் 8 சதுர கிலோமீட்டர் பகுதியில் சிறீலங்கா இராணுவம் ஆனது பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களை சரமாரிகளை முடுக்கிவிட்டுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு சிறீலங்கா உறுதியளித்த போதிலும், கனரக ஆயுதங்கள் இன்னும் பாதுகாப்பு வலயத்தை நோக்கி இலக்கு வைக்கப்பட்டது.

ICRC கப்பல் ஊடாக 30MT பொருட்கள் மட்டுமே சனிக்கிழமை வன்னியை அடைந்தது . தாக்குதல்கள் காரணமாக பாதுகாப்பு வலயத்தின் கரையை அடையத்தவறிய ICRC கப்பல், பின்பு பாதுகாப்பு வலயத்தை அடைந்து 450 காயமடைந்தவர்களையும் அவர்களது பாதுகாவலர்களையும் புல்மோட்டைக்கு கொண்டு செல்ல முடிந்ததும்.

சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலால் பெருமளவு பொதுமக்கள் உயிரிழப்புகள் ஏற்பட்டது, இறந்தவர்கள் அவர்கள் கொல்லப்படும் இடத்தில் புதைக்கப்படுகிறார்கள் அல்லது எரிக்கப்படுகிறார்கள்.

மருத்துவமனையில் உடனடி முதலுதவி வழங்க முடியவில்லை, மேலும் கடுமையான மருந்துப் பற்றாக்குறையால் பல தீவிர நோய்வாய்ப்பட்ட மற்றும் காயமடைந்த பொதுமக்களைக் காப்பாற்ற மருத்துவர்களால் முடியவில்லை.

















# முள்ளிவாய்க்கால் பகுதியில் 120,000 தொடக்கம் 165,000 தமிழ் மக்கள் மீது உணவுத் தடை - 09.05.2009














# முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரே இரவில் 2,000 பொதுமக்கள் படுகொலை – 10.05.2009

சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை "பாதுகாப்பு வலயம்" மீது சிறீலங்கா இராணுவம் நடத்திய கண்மூடித்தனமான சரமாரியான ஷெல் தாக்குதல்களில் ஏராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 2,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக வன்னியில் உள்ள மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்காலிக மருத்துவ மனை. இறந்த உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக்கிடக் கிடந்தனர்.

மேலும் 814 காயமடைந்தவர்கள் காலை 9:25 மணி வரை தற்காலிக மருத்துவமனைக்குச் சென்றடைந்தனர் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட கொத்து குண்டுகள் மற்றும் மல்டி பீப்பாய் ராக்கெட் லாஞ்சர்கள் மற்றும் பீரங்கிகளில் இருந்து வீசப்படும் குண்டுகள் போன்ற அனைத்து வகையான கொடிய ஆயுதங்களும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதை கொலைக்களமாக மாற்ற பயன்படுத்தப்பட்டன.






முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட மீட்புப் பணியாளர்கள் கொத்துக் குண்டுகள், பல்குழல் ரொக்கட் ஏவுகணைகள் மற்றும் பீரங்கிகளைப் பயன்படுத்தி சிறீலங்கா இராணுவத்தால் சனிக்கிழமை இரவு மற்றும் ஞாயிற்றுககிழமை காலை பாரிய அளவில் படுகொலை செய்யப்பட்ட பின்னர் 1200 க்கும் மேற்பட்ட சடலங்களை எண்ணியுள்ளனர் என்று வன்னி வட்டாரங்கள் தெரிவித்தன. இன்னும் கூடுதலான உடல்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கலாம் என்றும், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை உயரக்கூடும் என்றும் தொழிலாளர்கள் அஞ்சுகின்றனர். பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளதாகவும், முள்ளிவாய்க்காலில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் மருந்துப் பற்றாக்குறை இன்னும் பல உயிரிழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை, முள்ளிவாய்க்கால் வைத்தியசாலை ஊழியர்கள், பிற்பகல் 3.00 மணி வரை தெரிவித்துள்ளனர். மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட உடல்களின் எண்ணிக்கை 378, காயமடைந்தவர்கள் மொத்தம் 1122. இறந்தவர்களில் 106 பேர், காயமடைந்தவர்களில் 251 பேர் குழந்தைகள் என்றும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

கிரேசியன் தர்மராசா என்ற அர்ப்பணிப்புள்ள தாதியர் உத்தியோகத்தரின் ஒட்டுமொத்த குடும்பமும் ஷெல் தாக்குதலில் அழிந்துவிட்டது.

பதுங்கு குழிகளிலும் தார்ப்பாய் கூடாரங்களுக்குள்ளும் இறந்த உடல்கள் காணப்படுகின்றன.

கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் சரியான எண்ணிக்கை இன்னும் கண்டறியப்படவில்லை.

67 குழந்தைகள் உட்பட 257 உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

காயமடைந்தவர்களில் 112 பேர் குழந்தைகள்.

இறுதியாக முள்ளிவாய்க்காலில் உள்ள கனிஷ்ட பாடசாலையில் இயங்கி வரும் தற்காலிக வைத்தியசாலையானது நிலைமையை சமாளிக்க வார்த்தைகளால் கூறமுடியாதவாறு போராடி வந்தாக மருத்துவ வட்டாரங்கள் இருந்த தகவல்களில் தெரிய வந்தது.

"சர்வதேச சமூகமும் ஐ.நாவும் ஒரு அரசாங்கத்திற்கு கிட்டத்தட்ட பகிரங்கமான ஒப்புதல் அளித்ததன் மூலம் ஒரே நாளில் இவ்வளவு பாரிய பொது மக்களை அரசியல் ரீதியாகப் பரிசோதித்தது வரலாற்றில் இதுவே முதல் முறை" என்று கொழும்பில் உள்ள மனித உரிமை நிபுணர் ஒருவர் செய்தியைக் கேட்டதும் விவரித்தார்.

ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் போரை முடிக்க இந்தியா கொழும்பை தூண்டியதன் விளைவாகவே இந்த பாரிய படுகொலைகள் நடந்துள்ளதாக நம்பப்படுகிறது, கொழும்பில் உள்ள அரசியல் வட்டாரங்கள் மேலும் கூறுகையில், "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" "பொதுமக்கள் மீதான போர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒபாமா நிர்வாகத்தின் காலம்.



ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வரை தணிந்த குண்டுவெடிப்பு நண்பகல் 12:00 க்குப் பிறகு அதிகரித்தது, சிறீலங்கா விமானப் படை போர் விமானங்கள் 12:45 மணிக்கு இரண்டு குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. ஞாயிற்றுக்கிழமை, பாதுகாப்பு மண்டலத்திற்குள் இருந்து வட்டாரங்கள் தெரிவித்தன.

இறந்தவர்களின் எண்ணிக்கை தொடர்வதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கை அரசால் இதுவரை இல்லாத அளவுக்கு மோசமான மனிதப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கை சில நாட்களுக்குத் தெரியவில்லை.

# முல்லைத்தீவு
# பாதுகாப்பு வலையப் படுகொலை
# 10 மே 2009














# முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதியில் சிறீலங்கா படையினரின் தாக்குதல்களில் 3,200 பொதுமக்கள் படுகொலை – 11.05.2009



1,30,000க்கும் அதிகமான பொதுமக்கள் வசிக்கும் முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதிகளில் பாதுகாப்பு வலயம் (யுத்தமில்லாத வலயம்) என்று அழைக்கப்படும் பகுதிகள் மீது அனைத்து விதமான கனரக ஆயுதங்களையும் பயன்படுத்தி இடைவிடாத சரமாரியான ஷெல் தாக்குதல்களை சிறீலங்கா இராணுவம் முடுக்கிவிட்டது.

போதிய பதுங்கு குழிகள் மற்றும் தங்குமிடங்கள் இல்லாமல் தஞ்சம் அடைந்தனர். 7 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் மட்டுப்படுத்தப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட பொருட்கள் காரணமாக மருந்து மற்றும் உணவு பற்றாக்குறைக்கு மத்தியில் பொதுமக்கள் உயிரிழப்புகள் அதிகரித்து தொடங்கியது. திங்களன்று தமிழர்கள் புனர்வாழ்வு அமைப்பின் (TRO) கள அலுவலகத்தின் தலைவர் லாரன்ஸ் கிறிஸ்டி, திங்களன்று பொதுமக்களின் இறப்பு எண்ணிக்கை ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் திங்கள் காலை வரை 3,200 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாகக் கூறினார். இனப்படுகொலையை நிறுத்துவதற்கு பாதுகாப்பதற்கான பொறுப்பை (R2P) உடனடியாக அழைக்குமாறு அவர் IC க்கு அழைப்பு விடுத்துள்ளார்.

திங்கட்கிழமை அதிகாலையில் பல பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக ஆரம்ப தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கையில் பீரங்கிகள், 50 கலிபர் இயந்திர துப்பாக்கிகள், பீரங்கிகள், மோட்டார் மற்றும் மல்டி-பேரல் ராக்கெட் லாஞ்சர் (MBRL) துப்பாக்கிகளைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தின.

தற்காலிக மருத்துவமனையில் 50% க்கும் அதிகமான ஊழியர்கள் தங்கள் குடிசைகள் மற்றும் குடியிருப்புகள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதால், அவர்கள் பணிக்கு வரவில்லை என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய நாடுகள் சபையும், இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற வல்லரசுகளும் கடந்த 5 மாதங்களில் செயல்படத் தவறிவிட்டன, அந்த நேரத்தில் 10,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 20,000 பேர் காயமடைந்தனர், திரு. கிறிஸ்டி முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து விடுக்கப்பட்ட அவசர முறையீட்டில் கூறினார்.

# சிறீலங்கா அரச படைகளின் தாக்குதலில் முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையில் 47 பொதுமக்கள் படுகொலை – 12.05.2009



செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் சிறீலங்கா இராணுவம் பீரங்கி குண்டுகளை வீசியதில் குறைந்தது 47 பொதுமக்கள், நோயாளிகள் மற்றும் நிர்வாக அதிகாரி கே.தர்ம குலசிங்கம் கொல்லப்பட்டனர். முள்ளிவாக்காலில் இயங்கி வந்த தற்காலிக மருத்துவமனை மீதான தாக்குதலில் குறைந்தது 55 நோயாளிகள் படுகாயமடைந்தனர். முள்ளிவாய்க்கால் சிறுவர் பள்ளியில். கடந்த 3 நாட்களுக்குள் சுமார் 2,000 காயமடைந்த நோயாளிகள் கப்பலில் ICRC கொண்டு செல்லப்படுவதற்காகக் காத்திருந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டது. வன்னியில் கடந்த 3 நாட்களில் 2,600க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிறீலங்காப் படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையில் பொதுமக்கள் படுகொலை - 12.05.2009















# சிறீலங்கா அரச படைகளின் தாக்குதல்களினால் தற்காலிக மருத்துவமனையில் பேரழிவு – 13.05.2009

“மருத்துவமனையைப் பார்த்து, பொதுமக்கள் அழுவதைக் கேட்கும்போது, நீங்கள் பேரழிவை மட்டுமே உணர்கிறீர்கள்” என்று முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையின் முக்கிய மருத்துவ ஊழியர்கள் புதன்கிழமை ஊடகங்களுக்குத் தெரிவித்தார். பல குழந்தைகள், நோயாளிகள், மருத்துவ ஊழியர்கள், தன்னார்வ மருத்துவர் மற்றும் ஐசிஆர்சி ஊழியர் உட்பட 100 க்கும் மேற்பட்ட பொதுமக்கள், மருத்துவமனை வளாகம் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தை குறிவைத்து சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கி தாக்குதலில் கொல்லப்பட்டனர். தார்பாய் குடிசைகள். 5 நாட்களுக்குள் மூன்றாவது முறையாக குறிவைத்த சிறீலங்கா இராணுவப் படைகளுக்கு மருத்துவ மனைப்பகுதி முக்கிய இலக்காக மாறியுள்ளதால் மருத்துவமனை சில மருத்துவ ஊழியர்களுடன் போராடி வருகிறது. ஜெனீவா உடன்படிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்த சிறீலங்கா இராணுவம் ஆல் கொலைக்களமாக மாற்றப்பட்ட இரண்டு கரையோர முனைகளில் இருந்து சிறீலங்காப் படையினால் துப்பாக்கி சூடுகள் No Fire Zone என்று அழைக்கப்படுபவை முழுவதும் மேற்கொண்டனர். பொதுமக்கள் பட்டினியால் போராடி பதுங்கு குழிகளுக்கு கீழ் வாழ்கின்றனர்.

பலியானவர்களில் பலர் குழந்தைகள் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். புதன்கிழமை படுகாயமடைந்தவர்களில் 40 பேர் குழந்தைகள்.

அவர்களின் தலைக்கு மேல் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியில் தெற்கு நோக்கிச் செல்லும் வாகனங்களால் சாலையில் நெரிசல் ஏற்பட்டதால் மருத்துவமனை வளாகத்திற்கு வெளியே ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை. கடந்த 24 மணி நேரத்தில் 200 முதல் 500 பேர் கொல்லப்பட்டதாக ஆரம்ப மதிப்பீடுகள் வேறுபடுகின்றன.

பாதுகாப்பு வலயத்திற்குள் 2,000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் சுமார் 1,000 நோயாளிகள் அவசரமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற இருந்த நிலையில், ஆனால் மருந்துகள் இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். படுகாயமடைந்த 250 பேருக்கு புதன்கிழமை சிகிச்சை அளிக்கப்பட்டது. சிறீலங்கா இராணுவம் சரமாரி தாக்குதல்களின் மருத்துவமனையை சீர்குலைத்ததால் சிலருக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்பட்டது, மருத்துவ ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் பதுங்கு குழிகளுக்கு கீழ் தங்குமிடம் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஐ.சி.ஆர்.சி கப்பல் அவர்களை வெளியேற்றும் முன் காயங்களில் பலர் இறக்க வேண்டும். கடும் சண்டையால் காயமடைந்தவர்களை வெளியேற்ற முடியாமல் ஐசிஆர்சி கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கு தொடர்ந்து இரண்டாவது நாளாக காலியாகத் திரும்பியது. கப்பலால் சுமார் 25 மெட்ரிக் டன் உணவு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை இறக்க முடியவில்லை.

100 இறந்த உடல்களில் 30 உடல்கள் அடையாளம் காணப்



பட்டு உறவினர்களால் கைப்பற்றப்பட்டன.

கொல்லப்பட்ட தன்னார்வ மருத்துவர் செந்தில்குமரன் என அடையாளம் காணப்பட்டது. மருத்துவமனை ஊழியர் கோபால கிருஷ்ணனும் உயிரிழந்தார். கொல்லப்பட்ட ICRC ஊழியர் மயூரன் சிவகுருநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது தாயும் சிறீலங்கா இராணுவத்தினன் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

தற்காலிக மருத்துவமனையின் அருகாமையில் இன்னும் 75 சடலங்கள் அடையாளம் காணப்பட்ட மற்றும் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளன. தற்போதுள்ள சூழ்நிலையில் இறந்தவர்களின் உடல்களை எடுக்க முடியாது என உறவினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.
















JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சிணை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE
BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Broken Glass...?
We will fix it within 24 hour.
Free Estimate!
Call today
$50 OFF
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com



# தொல்லியல் சுவடுகள்...

# எல்லாள மன்னன் அநுராதபுர இராசதானி காலத்தில் வெளியிட்ட தமிழ் நாணயம்!

பேராசிரியர் ப. புஸ்பரட்ணம்


இலங்கையின் பூர்வீக மக்கள், அவர்களது பண்பாடு தொடர்பாக கூறப்பட்டு வந்த நீண்ட பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகள் சமீபகாலத் தொல்லியல் ஆய்வுகளால் மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம்.




விஜயன் வருகைக்கு முன்னரே இலங்கையில் நாகரிகயுகம் தோன்றிவிட்டதாகக் கூறும் இலங்கையின் மூத்த தொல்லியல் அறிஞர்களில் ஒருவரான பேராசிரியர் சேனகபண்டாரநாயக இலங்கை மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் விஜயன் வருகைக்கு முந்திய பண்பாடுகளில் இருந்து ஆராய்ந்து பார்க்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றார். இதற்கு விஜயன் தலைமையில் வடஇந்தியக் குடியேற்றம் நடந்தாகக் கூறப்படும் கி.மு. 6 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே இலங்கையில் நாடோடிகளாக வாழ்ந்த கற்காலப் பண்பாட்டு மக்களும், நாகரிக உருவாக்கத்திற்கு காரணமான பெருங்கற்கால மக்களும் வாழ்ந்து வந்ததை நம்பகரமான தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்தி உள்ளதே காரணமாகும்.


இந்நிலையில் இலங்கையில் புழக்கத்தில் இருந்த தொன்மையான மொழிகளை அடையாளப்படுத்தும் முக்கிய சான்றான எழுத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஆராய்ந்த பேராசிரியர் சத்தமங்கல கருணாரட்னா (1962), பெர்ணாந்தோ (1969), ஆரியஅபயசிங்க (1975) போன்ற அறிஞர்கள் வடஇந்தியாவிருந்து பௌத்த மதத்துடன் வடஇந்தியப் பிராமி என்ற எழுத்து வடிவம் இலங்கையில் அறிமுகமாவதற்கு முன்னரே தமிழ் மொழிக்குரிய தமிழ்ப் பிராமி என்ற எழுத்து வடிவம் புழக்கத்தில் இருந்ததாகக் கூறுகின்றனர். . இத்தமிழ்ப் பிராமி எழுத்தின் பயன்பாடு இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இலங்கையில் பயன்பாட்டிலிருந்து வந்ததைப் பெருங்கற்காலப் பண்பாட்டு மையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட மட பாண்டச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன.

இவ்வாதாரங்கள் இலங்கைத் தமிழரின் பூர்வீக வரலாற்றை மட்டுமன்றி அவர்களிடையே தோன்றியிருக்கக் கூடிய அரச மரபு பற்றிய பாரம்பரிய நம்பிக்கைகளையும் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதைக் கோடிட்டுக்காட்டுகின்றன. இதற்கு இலங்கையில் புழக்கத்தில் இருந்த தொன்மையான தமிழ் நாணயங்களை முக்கிய சான்றாகக் காட்டலாம்.



சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயம்

நாணயங்கள் இலக்கியங்கள், கல்வெட்டுக்களைப் போல் விரிவான வரலாற்றுத் தகவல்களைத் தரக்கூடியவை அல்ல. ஆயினும் ஆட்சில் இருந்த ஒரு அரச வம்சத்தால் அல்லது ஒரு மன்னனால் வெளியிடப்படும் நாணயங்கள் அவர்களின் சமகாலத்திற்குரியதால் அவை நம்பகரமான சான்றுகளாகப் பார்க்கப்படுகின்றது. இதற்குப் பண்டைய இந்திய இலக்கியங்களில், கல்வெட்டுக்களில் சொல்லப்படாத சில அரச வம்சங்களை, மன்னர்களை, மற்றும் சிற்றரசர்களை நாணயங்களால் வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டதை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்தநோக்கில் இலங்கையில் புழக்கத்தில் இருந்த பண்டைய தமிழ் நாணயங்கள் இதுவரை ஆராய்ந்து பார்க்கப்பட்டதாகத் தெரியவில்லை.



எல்லாளன் வெளியிட்ட நாணயம்

**எல்லாளன் வெளியிட்ட நாணயம்?**

வரலாற்றுத் தொடக்ககாலத்தில் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட நாணயங்கள் தமிழகத்தில் சங்ககால மூவேந்தர் வெளியிட்ட சதுரவடிவ நாணய மரபை ஒத்ததாகக் காணப்படுகின்றது. சதுரவடிவில் நாணயங்களை வெளியிடும் மரபு சங்ககாலத்திற்குரிய தனிச் சிறப்பம்சமாகக் கூறப்படுகின்றது. இதனால் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட சதுர வடிவிலமைந்த நாணயங்கள் தமிழக மரபைப் பின்பற்றி வெளியிடப்பட்டவை எனக் கூறலாம்.

இலங்கையில் பயன்படுத்தப்பட்ட இந்நாணயத்தின் முன் பக்கத்தில் கோட்டுருவில் அமைந்த சதுரமான பெட்டிக்குள் நிற்கும் நிலையில் காளை உருவமும், அதன் தலைப்பகுதிக்கு கீழே பலிபீடம் போன்ற உருவமும் காணப்படுகின்றது. நாணயத்தின் பின்பக்கத்தில் சதுரமான கோட்டுக்குள் வட்டமும், அவ்வட்டத்திற்குள் சிலவற்றில் மூன்றும், வேறு சில நாணயங்களில் நான்கு புள்ளிகளும் காணப்படுகின்றன. இந்நாணயங்கள் பற்றி ஆராந்த அறிஞர்கள் பலரும் நாணயத்தின் வடிவமைப்பு சமகாலத்தில் சங்ககால மூவேந்தர்கள் வெளியிட்ட நாணய வடிவமைப்பை ஒத்திருப்பதால் இவை தமிழகத்துடன் கொண்டிருந்த அரசியல், வாணிபத் தொடர்பால் இலங்கைக்கு வந்ததாகக் கூறுகின்றனர்.

அவ்வாறு கூறியமைக்கு யாழ்ப்பாண அரசு தோன்றுவதற்கு முன்னர் இலங்கைத் தமிழரிடையே அரச உருவாக்கம் தோன்றவில்லை என்ற நம்பிக்கையும் முக்கிய காரணமாகும்.

ஆயினும் இவ்விடத்தில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய அம்சம் தமிழகத்தில் சங்ககால மூவேந்தர் வெளியிட்ட நாணயங்களின் பின்பக்கத்தில் பாண்டியருக்கு மீனும், சோழருக்குப் புலியும், சேரருக்கு அம்பும் வில்லும், அதியமான் போன்ற குறுநில அரசுக்கு ஆற்றுச் சின்னமும் அரச இலட்சனைகளாகப் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இலங்கையில் பயன்பாட்டிலிருந்த சதுர நாணயங்களின் பின்பக்கத்தில் இச்சின்னங்களைக் காணமுடியவில்லை. மாறாக நாணயத்தின் பின்பக்கத்தில் சதுரமான கோட்டுக்குள் வட்டமும், அவ்வட்டத்திற்குள் நான்கும் சில நாணயங்களில் மூன்று புள்ளிகளும் காணப்படுகின்றன.

தமிழகத்தில் சங்க காலம் தொட்டு வெளியிடப்பட்ட நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையில் உபயோகத்தில் இருந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. ஆனால் இலங்கையில் பயன்படுத்தப்பட்ட மேற்குறித்த நாணயம் ஒன்றுதானும் தமிழகத்தில் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. உண்மையில் இந்நாணயம் சங்ககால மன்னர்களால் வெளியிடப்பட்டிருந்தால் இலங்கையைக் காட்டிலும் தமிழகத்திலேயே அதிக எண்ணிக்கையில் கிடைத்திருக்க வேண்டும்.

இந்நாணயத்தில் காணக்கூடிய இன்னொரு அம்சம் பிற்பட்ட காலத்தில் அநுராதபுர ஆட்சியாளராக இருந்த சில சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் முன்பக்கத்தில் சிங்கமும், இந்நாணயத்தின் பின்பக்கத்தில் காளை உருவம் பொறித்த நாணயத்தின் பின்பக்கத்தில் காணப்படுவதை ஒத்த சின்னங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இருந்து அநுராதபுரத்தில் ஆட்சி செய்த தமிழ் மன்னர்கள் காளை உருவத்தையும், சிங்கள மன்னர் சிங்க உருவத்தையும் தமது குலச் சின்னமாக அல்லது அரச சின்னமாக பயன்படுத்தியுள்ளனர் எனக் கூறலாம்.

நாணயங்களின் பின்பக்கத்தில் இரு மன்னர்களும் ஒரேவகையான சின்னங்களைப் பயன்படுத்தியமைக்கு இவை அநுராதபுர அரசை அல்லது நாட்டைக் குறிப்பதற்காக இருக்கலாம்.

சிங்கள மன்னர்கள் சிங்கத்தை தமது குலமரபாகவும், அரச சின்னமாகவும் கருதும் மரபு விஜயன் வருகை பற்றிய கதையுடன் இணைந்த ஒன்று. இச்சின்னத்தைப் பிற்கால சிங்கள மன்னர்களும் நாணயங்களில் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் அவர்கள் வெளியிட்ட நாணயங்களில் காளையை அரச



அக்குறுகொட என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்ட நாணயம்

சின்னமாகவோ, புனித சின்னமாகவோ பயன்படுத்தியமைக்கு ஆதாரங்கள் காணப்படவில்லை. மாறாக அச்சின்னத்தை பௌத்த சிங்களப் பண்பாட்டில் ஒரு கலைவடிவாகவே பயன் படுத்தியுள்ளனர். இதற்கு உதாரணமாக பௌத்த ஆலயங் களில் வாசல் பகுதியில் காணப்படும் சந்திரவட்டக்கல்லில் மலர்கள், பறவைகள், மிகங்கள் முதலான சின்னங்களுடன் காளையும் ஒரு சின்னமாகச் செதுக்கப்பட்டுள்ளதைக் குறிப் பிடலாம் ஆனால் தமிழர் பண்பாட்டில் காளைப் புனிதச் சின்ன மாகக் கருதும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகின்றது.


இதற்கு யாழ்ப்பாண அரசு காலத்தில் வெளியிடப்பட்ட நாண யங்களில் காளை (நந்தி) ஒரு புனித சின்னமாகவும், அரச இலட்சனையாகவும் பயன்படுத்தி உள்ளதை உதாரணமாகக் குறிப்பிடலாம். இந்நிலையில் அநுராதபுர அரசில் ஆட்சிபுரிந்த தமிழ்கள் வெளியிட்ட நாணயங்களில் காளை உருவம் பொறிக் கப்பட்டிருப்பது யாழ்ப்பாண இராசதானிக்கு முன்னரே அம்மரபு இலங்கையில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னர்களால் பயன்படுத்தி வந்துள்ளதைக் கோடிட்டுக்காட்டுவதாக உள்ளது.

அநுராதபுர இராசதானியில் முதல் 200 ஆண்டு காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த பத்து தமிழ் மன்னர்கள் எண்பது ஆண்டு களுக்கு மேல் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்களுள் எல்லாள மன்னன் 44 ஆண்டுகள் (கி.மு 161---105) நீதி தவறாது ஆட்சி புரிந்தவன் எனப் பாளி இலக்கியங்கள் கூறுகின்றன. இவனே இலங்கையில் நீண்ட காலம் ஆட்சிபுரிந்த முதல் மன்ன னாவான். ஆயினும் .தேரவாத பௌத்த மதத்தை முதன்மைப் படுத்திக் கூறும் பாளி இலக்கியங்கள் அம்மதத்திற்குப் பணி செய்த மன்னர்களின் வரலாற்றையே முதன்மைப்படுத்திக் கூறுகின்றன. உதாரணமாக 26 ஆண்டுகள் மட்டும் ஆட்சி செய்த துட்டகாமினி மன்னனின் வரலாற்றை 821 செய்யுளில் கூறும் மகாவம்வம் 44 ஆண்டுகள் ஆட்சி செய்த எல்லாள மன்னனின் வரலாற்றை வெறும் 21 செய்யுளில் மட்டுமே கூறுகின்றது.

இதனால் பாளி இலக்கியங்களில் இருந்து எல்லாளனின் வர லாற்றையும், அவனது வரலாற்றுப் பணிகளையும் குறைந் தளவுதானும் அறியமுடியவில்லை. ஆயினும் அவனது நீண் டகால ஆட்சிக்கு பலதரப்பட்ட மக்களின் ஆதரவு கிடைத் தமைக்கு அவன் மக்களுக்கு ஆற்றியபணிகளே காரணமாக இருந்துள்ளது எனக் கூறலாம். இதனால்தான் எல்லாளனை வெற்றி கொண்ட துட்டகாமினி அவன் இறந்த இடத்தில் சமாதி எழுப்பி அச்சமாதியை மக்கள் வழிபடவேண்டும் என ஆணை பிறப்பிக்க காரணமாகும்.

அண்மையில் தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ப் பிராமியில் எழுதப்பட்ட சில நாணயங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

அவற்றுள் ஒரு நாணயத்தில் திஸபுரம் என்ற இடத்தில் ஆட்சி செய்த சடநாகராசன் என்ற வாசகம் காணப்படுகின்றது. இவற் றில் இருந்து தென்னிலங்கையில் தமிழ்ச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்தமையும், அவர்கள் நாணயங்கள் வெளியிட்டமையும். தெரியவந்துள்ளன. மகாவம்சத்தில் கூட எல்லாளன் ஆட்சிக்கு சார்பாக தென்னிலங்கையில் 32 தமிழச் சிற்றரசர்களின் ஆட்சி இருந்தது பற்றிக் கூறுகின்றது. தென்னிலங்கையில் சிற்றரசர் களாக இருந்த சிலரே பின்னர் அநுராதபுர மன்னர்களாக ஆட்சியைக் கைப்பற்றியதற்கு மகாவம்சத்தில் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.




இங்கே எல்லாள மன்னன் அநுராதபுரத்தில் ஆட்சியிலிருந்த காலமும் காளை உருவம் பொறித்த நாணயம் பயன்பாட்டி லிருந்த காலமும் ஏறத்தாழ ஒரே காலமாகக் காணப்படு கின்றது. இதனால் இந்நாணயத்தை எல்லாள மன்னன் அநுராதபுர மன்னனாக இருந்து வெளியிட்ட நாணயமாகக் கொள்வதே பொருத்தமாகும்.

நன்றி: பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.
இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு
437.345.4203


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
Save
80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca




# தமிழின அழிப்பின் நினைவாக மே 18 அன்று ‘முள்ளிவாய்க்கால் கஞ்சி’ உண்போம்!






நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு லட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை “முள்ளிவாய்க்கால் கஞ்சி“ என்ற பெயருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

- அன்றைய நாளில் எமது வீடுகளில் “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவோம்!

- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து “முள்ளிவாய்க்கால் கஞ்சியை“ அனைவருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

# மாமனிதர் சிவராம்




தமிழ் அரசியலில் குறிப்பாக ஊடகப்பரப்பில் சிவராமுக்கு மூன்று முக்கியத்துவங்கள் உண்டு. முதலாவது அவர் கிழக்கில் தோன்றி உலகப் பரப்பெல்லாம் தெரியவந்த ஒரு முறைசாரா அறிவுஜீவி என்பது. இரண்டாவது அவர் தமிழ் மக்களின் அபிலாசைகளை கொழும்பில் இருந்தபடி ஆங்கிலத்தில் பேசியவர், எழுதியவர் என்பது. மூன்றாவது அவருக்கு கிடைத்த அங்கீகாரம் எனப்படுவது தமிழ் ஆயுதப் போராட்ட அரசியலில் ஏற்பட்டு வந்த பண்புரு மாற்றத்தை -Transformation- பிரதிபலிப்பது என்பது. இவை ஒவ்வொன்றையும் விரிவாகப் பார்க்கலாம்.

முதலாவது சிவராம் ஒரு கிழக்கு மைய அறிவுஜீவி என்பது. சுவாமி விபுலானந்தரைப் போலவே சிவராமம் தன்னை உலக அளவில் ஸ்தாபித்தவர். விபுலானந்தர் கலை, விஞ்ஞானம், மொழி, அழகியல், ஆன்மீகம் என்பவைகளின் மிக அபூர்வமான சேர்க்கைகளில் ஒன்று. அவரிடம் இருந்த பல்துறை ஒழுக்கம்தான் அவரை முத்தமிழ் வித்தகர் என்று அழைக்கக் காரணம். விபுலானந்தர் ஒரு முறைசார் அறிவுஜீவி. சிவராமம் ஒரு முறைசார் அறிவுஜீவி அல்ல. எனினும் விபுலானந்தரைப் போல கிழக்கில் தோன்றி உலகப் பரப்பொங்கும் விகசித்தார்.

இரண்டாவது அவர் கொழும்பில் இருந்தபடி வடக்கு-கிழக்கு அரசியலை ஆங்கிலத்தில் வெளிப்படுத்தினார். அவர் கொல்லப்பட அதுவும் ஒரு காரணம். குமார் பொன்னம்பலத்தை போல ரவிராஜ்ஜைப் போல சிவராமும் தமிழ் மக்களின் அபிலாசைகளை ஆங்கிலத்தில் வெளிப்படுத்தினார். எனவே அவர் அரங்கில் இருந்து அகற்றப்பட்டார். கொழும்பில் இருந்தபடி தமிழ் மக்களை ஆங்கிலத்தில் பிரதிபலிப்பதில் இருக்கக்கூடிய வரையறைகளை உணர்த்துவது சிவராமை கொன்றவர்களின் நீண்ட கால நோக்கங்களில் ஒன்று. சிவராம் கொல்லப்பட்டதால் ஏற்பட்ட வெற்றிடத்தை இன்றுவரை தமிழ் மக்கள் முழுமையாக நிரப்பவில்லை.

மூன்றாவது சிவராமுக்கு கிடைத்த அங்கீகாரம் எனப்படுவது தமிழ் அரசியலில் நிகழ்ந்த பண்புருமாற்றத்தை பிரதிபலிக்கின்றது என்பது.

நோர்வேயின் அனுசரணையுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் ஒருநாள் சிவராம் கிளிநொச்சியில், கண்டி வீதியில் ஒரு லேடிஸ் சைக்கிளில் மெதுவாக வந்து கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் மறித்துப் பலதையும் கதைத்தார். உரையாடலின் போக்கில் ஓரிடத்தில் அவர் ஒரு சம்பவத்தை சுட்டிக்காட்டினார். இந்திய இலங்கை உடன்படிக்கை எழுதப்பட்ட பின் கிழக்கில் நடந்த ஒரு தாக்குதல் அது. அதில் புளொட் இயக்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான வாசுதேவா கொல்லப்பட்டார். தாக்குதல் முடிந்தபின் தாக்குதலை நடத்தியவர்கள் கொல்லப்பட்டவர்களை அடையாளம் காண முற்பட்ட பொழுது அவர்களில் ஒருவர் "சிவராம் தப்பிவிட்டார்" என்று சொன்னதாக அத்தாக்குதலில் காயங்களோடு தப்பிய ஒருவர் பின்னாளில் சிவராமுக்குச் சொல்லியிருக்கிறார். இதை எனக்குச் சுட்டிக்காட்டிய சிவராம் "எண்பதுகளின் பிற்பகுதியில் என்னை கொல்லத் திரிந்தவர்கள் இப்பொழுது என்னை ஏற்றுக்கொள்கிறார்கள்" என்று கூறிச் சிரித்தார்.

அவருடைய இறுதி நிகழ்வில் உரை நிகழ்த்திய சரிநிகர் ஆசிரியர் சிவகுமாரும் அதே தொனிப்பட கருத்துக்களை தெரிவித்திருந்தார். 80களின் இறுதியில் அத்தாக்குதலில் கொல்லப்பட்டு இருந்திருந்தால் சிவராம் ஒரு துரோகியாக முத்திரை குத்தப்பட்டிருப்பார். ஆனால் 2000 ஆவது ஆண்டின் பின் அவர் கொழும்பில் கொல்லப்படுகையில் அவருக்கு மாமனிதர் விருது வழங்கப்பட்டது. என்பது அந்த உரையின் சாரம்.

இது சிவராமுக்கு மட்டுமல்ல, கவிஞர் சேரன், சரிநிகர் சிவகுமார், ஊடகவியலாளர் நடராசா, குருபரன், ஜோதிலிங்கம் போன்ற பலருக்கும் பொருந்தும்.

ஜோதிலிங்கம், இப்பொழுது தமிழ்த் தேசிய அரசியலில் அரசியல் விமர்சகராக இருப்பவர். முன்பு ஈபிஆர்எல்.எஃப் இயக்கத்தில் இருந்தவர். 1986க்குப் பின் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தை புலிகள் இயக்கம் தடை செய்த பொழுது ஜோதிலிங்கமும் அவரைப் போன்றவர்களும் வடக்கு கிழக்கில் இருந்து நீங்கி கொழும்பைத் தஞ்சமடைய வேண்டி வந்தது. இது தொடர்பாக ஜோதிலிங்கத்தின் மூத்த சகோதரர் சிவமகாலிங்கம் ஒரு முறை என்னுடன் கதைத்தார். ஜோதிலிங்கத்தின் நூல் ஒன்று வெளியிட்டு வைக்கப்பட்ட மேடையில் நானும் அவரும் அருகருகே இருந்தோம். அப்பொழுது அவர் என்னிடம் பின்வருமாறு சொன்னார்..."எண்பதுகளின் இறுதியில் இவனை-ஜோதிலிங்கத்தை - யாழ்ப்பாணத்தில் வைத்து பாதுகாப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டோம்? எத்தனை இடர்களைத் தாண்டி இவன் கொழும்புக்கு போனான்? ஆனால் கொழும்பில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டதும், இவன் தன்னை யார் வடக்கில் இருந்து துரத்தினார்களோ அவர்களின் அரசியலை நியாயப்படுத்த தொடங்கி விட்டான். இவனை எவ்வளவோ ஆபத்துக்களைக் கடந்து கொழும்புக்குக் கொண்டு போன எனக்குப் பைத்தியமா? அல்லது இவனுக்கு பைத்தியமா?" அவருக்கு நான் சொன்னேன் "இரண்டு பேருக்கும் பைத்தியம் இல்லை. ஓராயுதப் போராட்டத்தில் நிகழும் பண்புருமாற்றம் இது" என்று. எந்த இயக்கம் அவரை வடக்குக் கிழக்கில் இருந்து துரத்தியதோ, அதே இயக்கம் அவரை ஓர் அரசியல் விமர்சகராக ஏற்றுக் கொண்டமைதான் அந்தப் பண்புருமாற்றம்.

இது ஆயுதப் போராட்ட மரபில் வராத சிவசிதம்பரத்துக்கும் பொருந்தும். 1980களின் இறுதிப் பகுதியில் கொழும்பில் அமிர்தலிங்கமும், யோகேஸ்வரனும் கொல்லப்படுகையில் சிவசிதம்பரம் காயத்துடன் தப்பினார். அவர் பின்னர் நோர்வேயின் அனுசரணையுடனான சமாதான முயற்சிகளின் போது உயிர் நீத்தார். அப்பொழுது கிளிநொச்சியில் அவருக்கு மரியாதையும் மாமனிதர் விருதும் வழங்கப்பட்டது.

ஜோதிலிங்கம், சிவராம், சிவக்குமார், குருபரன் போன்ற பலருக்கும் 80களின் இறுதிப்பகுதியில் வடக்குக்கிழக்கு பாதுகாப்பானதாக இருக்கவில்லை. அப்பொழுது கொழும்புதான் அவர்களுக்கு ஒப்பீட்டளவில் பாதுகாப்பாக இருந்தது. ஆனால் தங்களைத் தமது வாழ்விடங்களில் இருந்து துரத்தக் காரணமாக இருந்த அரசியலைக் குறித்து அவர்கள் எப்படிப்பட்ட ஒரு நிலைப்பாட்டை எடுத்தார்கள்? தங்களுக்கு ஏற்பட்ட காயங்கள், உயிராபத்துக்கள், அவமதிப்புகள், இழிநிலை போன்ற எல்லாவற்றிற்காகவும் அவர்கள் தமிழ்மக்களின் போராட்டத்தை கொச்சைப்படுத்தவில்லை. தமது சொந்த மக்களைக் காட்டிக் கொடுக்கவில்லை. தமது சொந்த மக்களுக்கு எதிராகத் திரும்பவும் இல்லை. மாறாகத் தமது மக்களின் நியாயமான கோரிக்கைகளின் பக்கமே எப்பொழுதும் நின்றார்கள்.

கொழும்பிலிருந்து வெளியிடப்பட்ட "சரிநிகர்" பத்திரிகைக்கு இந்த விடயத்தில் ஒரு முக்கிய வகிபாகம் உண்டு. இவ்வாறு இயக்க மோதல்கள் காரணமாக கொழும்பை நோக்கிச் சென்ற ஒரு தொகுதியினர் சிங்கள பௌத்தத்தின் குகைக்குள் நின்ற படியே தமிழ் மக்களின் கோரிக்கைகளை தொடர்ந்து எதிரொலித்தார்கள் என்பதுதான் அவர்களுடைய மகத்துவம். தமிழ்த் தேசிய அரசியலில் குறிப்பாக ஆயுதப் போராட்டத்தில் ஏற்பட்ட பண்புருமாற்றம் அவர்களுக்கு உரிய கௌரவத்தை வழங்கியது. தடை செய்தவர்களே அவர்களை அங்கீகரிக்குமளவுக்கு அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள்.

அது மட்டுமல்ல, 1990களின் இறுதிக் கூறில் கருக்கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அப்படிப்பட்டதுதான். அது தமிழ் ஆயுதப் போராட்ட அரசியலில் ஏற்பட்ட பண்புருமாற்றத்தின் ஒரு கட்ட உச்சம் எனலாம்.

இப்பொழுது ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான கடந்த 13 ஆண்டுகளையும் தொகுத்துப் பார்த்தால், தமிழ் அரசியலில் பண்புருமாற்றத்தை அடுத்த கட்டத்திற்கு வளர்த்துச் செல்ல வேண்டிய ஒரு தேவையை உணரலாம். அவ்வாறான ஒரு பண்புருமாற்றத்தை நோக்கி எழுதக் கூடிய முதிர்ச்சியும், அனுபவமும், வாழ்க்கையும் கொண்டவர்கள் தமிழ்ப் பரப்பில் மிகச் சிலரே உண்டு. சிவராம் அவர்களின் ஒருவராக இருந்தார்.

ஒரு ஆயுதப் போராட்டத்தில் இருந்து அடுத்த கட்டத்திற்கு போகும் பொழுது பண்புருமாற்றம் அவசியம். ஓர் ஆயுதப் போராட்ட களத்தில் எல்லாருடைய கைகளிலும் ரத்தம் இருக் கும். எல்லாருக்கும் குற்றங்களில் கூட்டுப் பொறுப்பு இருக்கும். இதில் என்னுடைய ரத்தம் சுத்தம் உன்னுடைய ரத்தம் அசுத் தம் என்று சிந்திக்க முடியாது. தமிழ் மக்கள் இறந்த காலத்தைக் கிண்டி கொண்டிருப்பார்களாக இருந்தால், காயங்களும் எலும்புகளும் அழுகிய பிணங்களும்தான் திரும்பத் திரும்ப வெளியே வரும். எல்லா வண்ணாத்துப் பூச்சிகளும் ஒரு காலகட்டத்தில் மசுக்குட்டிகளாக இருந்தவைதான். எல்லாப் புனிதர்களுக்கும் ஒரு இறந்த காலம் இருக்கும். இதை தமிழ் அரசியல் ஏற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாக ஆயுதப் போராட்டம் ஒன்றுக்கு பின்னரான மிதவாத அரசியலில் ஒரு புதிய காலத்தை நோக்கிய பண்புரு மாற்றத்துக்கு தலைமை தாங்கவல்ல கருத்துருவாக்கிகளும் தலைவர்களும் அவசியம்.

சிவராமுக்கு அஞ்சலி செலுத்துவது என்பதை, ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கடந்த 13ஆண்டுகால அனுபவத்தின் அடிப்படையில் சொன்னால், பண்புருமாற்றத்துக்கு தயாராக இருப்பதுதான். ஒரு பண்புரு மாற்றத்தை நோக்கி தமிழ் மக்கள் மத்தியில் கருத்துருவாக்கம் செய்வதுதான்.

யாழ்ப்பாணம்,2022 மார்கழி

நன்றி: நிலாந்தன்



தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers of Tamil Eelam

தலைமைச் செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம்.
30/04/2005.

தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் ஆழமாக நேசித்த ஒரு உயர்ந்த மனிதரை தமிழர் தேசம் இன்று இழந்துவிட்டது. தமிழீழ மண்ணின் விடிவிற்காகவும் தமிழீழ மக்களின் விடுதலைக்காகவும் ஓங்கிஒலித்த ஒரு உரிமைக் குரல் இன்று ஓய்ந்துவிட்டது. எதிரியின் கோழைத்தனமான தாக்குதலுக்கு ஒரு தலைசிறந்த தமிழ்ப் பத்திரிகையாளர் பலியாகிவிட்டார்.

திரு. தர்மரட்ணம் சிவராம் அவர்கள் எளிமையும் நேர்மையும் பொருந்திய ஒரு தனித்துவமான மனிதர். நிறைந்த அறிவு படைத்தவர். எழுத்துத்துறையில் மிகுந்த விற்பனர். உலக அரங்கில் மிகவும் பிரபலமான பத்திரிகையாளர். இவருக்கு அறிமுகமே தேவையில்லை.

இவர் தனது எழுத்துக்களால் தமிழரின் தேசியப் பிரச்சினையை உலக அரங்கிலே மிகவும் நேர்த்தியான முறையில் தெளிவாக எடுத்துக்கூறினார். சிங்கள அரசு மேற்கொண்டுவருகின்ற அப்பட்டமான பொய்ப்பரப்புரைகளை சர்வதேச சமூகத்திற்கும் இராஜதந்திர சமூகத்திற்கும் மிகச் சாதுரியமாகவும் சாமர்த்தியமாகவும் அம்பலப்படுத்தினார். சிங்களப் பேரினவாதத்தின் கோட்டையில் நின்றுகொண்டே அது தமிழர் தேசத்திற்கு எதிராகப் புரிகின்ற அநீதிகளையும் அக்கிரமங்களையும் உலகிற்கு உறுதியாக எடுத்துக்கூறினார். ஆபத்துக்களையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டபோதும், அஞ்சா நெஞ்சுடன் அநீதியை எதிர்த்துநின்றார். எல்லாவற்றுக்கும் மேலாக, எம்மக்களுக்கு ஓயாது அரசியல் விழிப்புணர்வூட்டி, தமிழ்த் தேசியத்தைத் தொடர்ந்து வலுப்படுத்தினார். அன்னார் ஆற்றிய அரும்பணி என்றுமே போற்றுதற்குரியது.

திரு. தர்மரட்ணம் சிவராம் அவர்களின் இனப்பற்றிற்கும், விடுதலைப் பற்றிற்கும் மதிப்பளித்து, அவரது நற்பணியை கௌரவிக்கும் முகமாக "மாமனிதர்" என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். உன்னத இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு அழித்துவிடுவதில்லை. எமது தேசத்தின் வரலாற்றில் அவர்களுக்கு என்றும் அழியாத இடமுண்டு.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

வே. பிரபாகரன்
(வே. பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

# முள்ளிவாய்க்கால்

## வலி சுமந்த பதிவுகள்...




MAY 10 TH & 11TH
FRIDAY 7:30 PM & SATURDAY 1:30 PM
WOODSIDE CINEMA
MAY 11 TH
SATURDAY 4:00 PM
YORK CINEMA
MAY 12TH
SUNDAY 12:45 PM
ALBION CINEMA
1+(647) 551 7764
SKYMAGIC
PICTURES
written & directed by
RANJITH JOSEPH
eelamplay



# நினைவுகள் வேகமாக...



அந்த வரைபடைம் எனது கோல்சருக்குள் மடித்தபடி பலநாளாய் கிடக்குது. எனக்கு அதைப் பார்க்கவேண்டுமெண்டோ அதைப் பயன்படுத்தித்தான் மோட்டார்களுக்கு இலக்கின் வகை சொல்ல வேணுமெண்டோ அவசியம் இல்லை. இப்பதான் நிஸ்மியாக்கா வந்தவ. வன்னியெண்டபடியால் இந்த குச்சொழுங்கைகள் அவாவிற்கு வடிவாத் தெரியாது. வரைபடத்தை எடுக்கச் சொல்லி அதில வடிவா விளங்கப்படுத்தச் சொல்லியும் கேட்டவா. எனக்கு பஞ்சியாகத்தான் இருந்தது. அக்கா கேட்டுட்டா எண்டதற்கு காட்டினன்.

வரைபடத்தை பார்க்கேக்க, “இந்த றோட்டிலயே காந்தா உம்மட வீடு” எண்டு அக்கா கேட்டவா. எனக்கு ஒரே விசரா இருந்தது. வீடு இதிலதான் எண்டு காட்டினப்போ எனக்கு ஏதோ செய்துச்சுது. “சீ… என்ன காலமப்பா” என்று சினந்தும் கொண்டன்.

இப்பதான் அக்கா கேட்டா “நீ நிக்கிற இடத்தில் இருந்து எத்தனை கிலோ மீற்றர் தெரியுமா…? என்னண்டா. அப்பதான் அந்த நாள் நினைவிற்கு வந்தது. அங்கதான் இருந்தன். ஆனால், எங் கயோ போட்டான். அக்கா என்னட்ட எத்தனை கிலோ மீற்றர் எண்ட பதில் கேட்காமலே போயிற்றர். அந்த இடத்தவிட்டு எப்ப போனா எண்டு எனக்குத் தெரியேல்ல.

யோசிக்கேக்க மகிழ்ச்சியாகவும் இருந்தது - வெறுப்பாயும் இருந்தது. என்ர உடல் சோர்வா, அலுப்பா இருந்தது. ஏனெண்டா நேற்றிரவு நித்திரை இல்லை. அதற்கு முதல் நாளும் இல்லை. முதல் நாள் வேவுக்காரரோட போய் இரா ணுவத்தின்ர தடம் கிடக்கோ எண்டு பாத்து உறுதிப்படுத் தினனான். அதுதான் இரண்டு நாளா உசார் நிலையில் இருந்திட்டம்.

அந்த நிலையில் உசாராய் இருந்த படியாலதான் அவன் அங்கு வெளிக்கிடேக்க கண்டு அடிச்சிட்டம்.

அவன்ர நகர்வு அந்த இடத்திலேயே தடை செய்யப்பட்டது. எனக்கு ஒரே இராணுவத்தின்ர நினைவுதான். எனெண்டா கொஞ்சத் தூரத்தில் எங்கட வீடு அங்கதான். அம்மா, அப்பா, தம்பி உறவுகள் என எல்லோரும் கூடியிருந்தா ஊர். அவைக ளுக்கு என்ன நடந்ததோ… சீ… நான் இப்படி நினைக்கக் கூடாது. என்னை நானே திட்டிக்கொண்டேன்.

என்ர பிள்ளையன் பாவங்கள். நேற்று வடிவாச் சண்டை பிடிச் சதுகள். தங்கட தங்கட காப்பு நிலைகளிலே என்ன செய்யுதுகள்? வடிவா அவதானிச்சுதுகளோ என்று பார்ப்பம் எண்டுதான் வெளிக்கிட்டன். நான் துவக்க எடுத்துக்கொண்டு வர தேனரசி வந்தாள். முன்னுக்கு நடந்தாள். அதோட குறிஞ்சியும் பின் னுக்கு துவக்கோட வந்தா. இரண்டு கிலோ மீற்றர் நீளத்துக்கு நடந்து நிலைகளைப் பார்த்தோம்.

அது 55வது காப்பரண். அதில நின்ற பல்லவி, குறிஞ்சிதான் உறவுக்காரி என்று எனக்குத் தெரியாது. பல்லவியின்ர பதுங்கு குழிக்க நிண்டபோது குறிஞ்சிதான் அவளிட்டக் கேட்டாள். “பல்லவி இதில இருந்து எங்கட வீடு 2 கிலோமீற்றர் வருமெல்லா…” வன்னியில எண்டா இது கூப்பிடும் தூரம் என் றாள் பல்லவி. அவையளின்ர உரையாடலைக் கேட்க எனக்கு அவையும் தென்மராட்சி என்பது வடிவா விளங்குது. என்ர வீட்டக் கேட்டு நான் வேதனைபடுமாப்போல அதுகளையும் வேதனைப்படுத்த விருப்பமில்லாமல் இருந்ததுச்சுது.

அந்தக் காப்பரண் விட்டுப் போகேக்க எனக்கு குறிஞ்சி, பல்லவி என அதுகளின்ர நினைவுதான் வந்திச்சுது. அதில இருக்கிற அம்மன் கோயிலுக்கு அதுகள் போயிருக்குங்கள். சீ… இப்ப அது சூனியப்பிரதேசமா பாழ்பட்டுக் கிடக்கும். அந்தப் பள்ளியில் படிச்சிருக்குங்கள். அந்த றோட்டால அடிக்கடி போய்வந்திருக் குங்கள். அதுகளும் என்னைப்போலத்தான் நினைக்குங்கள். இராணுவத்தை துரத்தினால், வீட்டை… ஊரை… பார்க்கலாம் எண்டுதானே சிந்திக்குங்கள். எனக்கு இப்ப நல்லா நித்திரை வருது. படுத்தா படுபயங்கரமா வரும். இப்படித்தானே அதுக ளுக்கும் வரும். என்னையறியாமலே வாய்விட்டுச் சொல்லிக் கொண்டேன். அப்பதான் அதுகள் கேட்டதுகள் “என்ன உங்கட





பாட்டுக்கு நித்திரை எண்டு சொல்லிக்கொண்டு போறீயள்?”

“ஒண்டுமில்லை” எண்டன். என்ர நினைவெல்லாம் வீட்ட போச்சுது. காப்பரண் எல்லாம் பார்த்திட்டு என்ர நிலையில் வந்திருந்தன. திரும்பவும் “உசாரா இருங்கோ இராணுவம் நகரக்கூடும்” எண்டு செய்தி வந்திச்சுது.

என்ர சிறுசிறு அணிப் பொறுப்பாளருக்கெல்லாம் உடனே தகவல்களை அனுப்பினன். திரும்பவும் இனி நித்திரை இல்லை மீளவும் வீட்ட போட்டன். எனக்குப் பகல் கொள்ளுறதெண்டாலே படுபயங்கரமாப் பிடிக்காது. இப்ப அந்தக் காலத்தை நினைகக்க ஆசையாய இருந்தது.

காலையில் எழும்பி படிச்சாப் பிறகு சாப்பாடு… பள்ளிக்கூடம் பள்ளியால வந்தும் சாப்பிடுவன் எனக்கு அம்மா சாப்பிடத் தந்திட்டு தம்பிக்கும் கொடுத்திட்டு போய் படுத்திடுவா. சாப் பிட்டிட்டு போனா விறாந்தையில அப்பா நல்ல நித்திரை அடிப் பார். அம்மா முன்னறைக்க படுத்திருப்பா அவவும் நித்திரையா இருப்பா. தம்பி சாப்பிட்டிட்டு வந்து அப்பாவிற்கு பக்கத்தில் படுத் திருப்பான். அக்காவும், அண்ணையும் கட்டாயம் பகல் நித்திரை கொள்ளுவினம். அவையளைப் பார்க்க எனக்கும் நித்திரை கொள்ளவேணும் போல இருக்கும்.

தலையணையைத் தூக்கிக் கொண்டு எனக்குப் பிடிக்காத பாடப்புத்தகத்தையும் எடுத்துக்கொண்டு போய் படிக்கிறதோட படுப்பன். நித்திரை வராது… பேந்து புரண்டு புரண்டு படுத்துப் பார்ப்பேன். அப்பவும் நித்திரை வராது. எழும்பிப் போய் பின் னறைக்குள்ள புழுக்கொடியல் உரப்பைக்குள்ள இருந்து எடுத்து வருவன். கைநிறைய புழுக்கொடியல் இருக்கும். இப்ப புழுக் கொடியல் சாப்பிட ஆசையாக இருக்கிறது. இதுக்க இருக்கிற






இந்த கொஞ்சத் தூரம் ஆமியைத் தூரத்திட்டா அங்க போய் சாப்பிடலாம். அம்மா கட்டாயம் புழுக்கொடியல் போட்டு வைச்சிருப்பா. புழுக்கொடியல் எடுத்துக்கொண்டு தேங்காயும் எடுத்து உரிச்சு உடைச்சுக்கொண்டு வந்து பெரிய நாவலுக்குக் கீழ் கட்டின ஊஞ்சலில் ஆடி ஆடி சாப்பிட்டுப் பார்ப்பன். நித்திரை வராது. பகல் நித்திரை சரிவராது. மனம் கேட்காம திரும்பவும் வந்து படுத்துப் பார்ப்பன். நித்திரை வராது. பேந்து முன்வீட்ட போவன். விபுலனை விளையாடக் கூப்பிடுவமெண்டா. அங்க அவன் தாய்க்குப் பக்கத்தில் படுத்து நித்திரை அடிப்பான். முன் வீட்டு அன்ரியின் மனுசன் வெளிநாட்டில. அவா வீட்டையும் திறந்து போட்டிட்டு நல்ல நித்திரை அடிப்பா.

எனக்கு விசராக்கும். திரும்பி வீட்டை வருவன். மாமரத்தில் ஏறி காயாச்சும் சாப்பிட்டுக் கொண்டு மாமரக் கொப்பில் படுத்துப் பார்ப்பன். அதுவும் சரிவரா. தினம் இதுதான் நடக்கும் எல்லோரும் பகலிலே நித்திரை கொள்ள நான் மட்டும் எதையாவது சாப்பிட்டுக்கொண்டு அது வெளியே திரிவன். இப்ப நான் அன்று போல சின்னவளாகவே இருந்திருக்கலாம். உசார் நிலையில் இருக்கச் சொல்லியெல்லோ தகவல் வந்தது. அந்தக் காலத்தில நித்திரை கொண்டாலும், பகலிலே வரவே வராது. இப்ப எப்பயடா நித்திரை கொள்ளுவன் எண்டிருக்கு.

என்ர பிளாட்டூன். செக்சன் பொறுப்பாளர்கள் எல்லாம் தொடர்பு எடுத்தார்கள். உசாரா தாங்கள் இருப்பதாய் குறிப்பிட்டுதுகள். பல்லவி தொடர்பெடுக்கேக்க கேட்டாள். “அக்கா அவன் வந்தால் அடிச்சுக் கொண்டு அப்படியே தள்ளிக்கொண்டு போய் துப்பர வாக்கி விடுவம்” என்றாள் அதைத்தான் நானும் நினைச்சு வைச்சிருந்தன். கொஞ்சத்தூரம் அவன் ஓட ஓடக் கலைச்சு வீட்டுக்குக் கிட்ட போய்விடலாம். எல்லோருக்கும் இதைத்தானே சொல்லுறனான். ஊரைப் பிடிப்பம். வீட்டை போவம். அதுமட்டும் எல்லாத் துயரையும் தாங்கிக்கொள்ளுவம் எண்டு.

என்ன விரும்புறன் எண்டு சொன்ன முரளிக்குக்கூட இப்படித் தானே சொன்னான். ஊருக்குப் போகும் மட்டும் சண்டையில சாகாதிருந்தா, அங்க போன பிறகு முரளிய விரும்பிறன் என்று சொன்னன். நாலு வருசமா அவனும் எதுவுமே என்னட்ட கதைக்காமல் இருக்கிறான். முரளியும் சண்டையில தான் நிப்பான். என்ர ஊரையும் என்னையும் நினைப்பான். எல்லோருக்கும் தங்கட ஊரைப் பார்க்க உறவுகளோட கதைக்கத்தானே ஆசையாக இருக்கும். திரும்பவும் நான் வீட்ட போய் வந்தன். அம்மா, அப்பா, தம்பி, என்ன செய்வினம்? நடைபேசி கதைக்கத் தொடங்கியதும் முதலில் பல்லவியின்ர தொடர்புதான் கிடைச்சது. அந்தப் பக்கம் அவன் அசைவதாகத் தெரியுதாம். இராணுவத்தின் 24 குழல் வைத்து அடிக்கும் பீரங்கிக் குண்டுகள் வந்து விழுந்தது. வேற கனக்கச் சூடுகளும் வேகமாக வந்து விழுந்தது. வேற செல்களும் வந்து கொண்டிருந்தது. 55வது நிலைப்பக்கம் திருவிழா தொடங்கிற்று. நான் அவசரமாகவும் வேகமாகவும் பல்லவியின்ர நிலைக்கு போகவேண்டியிருந்தது. ஓடிப்போனன்.

குறிஞ்சியும் தேனரசியும் என்னோட ஓடி வந்திச்சினம். குறிஞ்சிக்குச் சன்னம் பட்டிட்டுது. அதோட தான் வரப்போறதா குறிப்பிட்டாள். அவளப் பேசிப்போட்டன். கவலையாக இருந்தது. சண்டையில நேரத்தை வீணடிச்சா எங்களுக்குத்தான் இழப்பு அதிகரிக்கும். வேகமாக நாங்கள் பேயிற்றம். பல்லவி நல்லா சண்டை பிடிச்சுக்கொண்டிருந்தாள். வரைபடத்தைப் பார்த்து செல்விழுந்த கோணம் சொல்ல வேண்டியிருந்தது.

பல்லவி சொன்னாள் “அக்கா அதுக்குள்ள தான் எங்கட வீடு நான் என்னர செக்சனை கொண்டு இறங்கட்டே” தன் கோல் சருக்குள் இருந்த வரைபடத்தை எடுத்து எனக்குக் காட்டினாள். இரண்டு கிலோமீற்றருக்கப்பால் அவளின் வீடு இருப்பதை அந்தக் கணத்திலும் வரைபடத்தில் காட்டினாள் அவள். முன்னோக்கி எதிரி நகர முற்பட்ட பக்கமா நகர முற்பட்டாள். கொஞ்சம் பொறு செல்லால கொடுத்திட்டு இறங்குவம் எண்டாள், ஒரு நல்ல சண்டை கிடைச்சா திருப்பி இறங்கி அடிக்க வேணும். பல்லவி தான் பாய்ந்து அடிச்சுக்கொண்டு போனாள். கொஞ்சத் தூரத்தில் என்னைக் கூப்பிட்ட சத்தம் கேட்டது ஓடிப்போனன். பிள்ளைகள் என்னை முந்திக்கொண்டு அவனைச் சுட்டபடி போய்க்கொண்டிருந்ததுகள். பல்லவி என்னட்ட வா எண்டாள்.



அவளுக்கு வயிற்றில காயம். அக்கா நீங்கள் என்ர அம்மாவையும் போய்ப் பாருங்கோ எண்டவள் உடனே மூச்சுவிட மறந்திட்டாள். அம்மாவைப் போய் பாருங்கோ என்று திரும்பவும் ஒலித்தது. ஆனா, அது என்ர பிரமையா இருக்கவேணும். ஒரு மணித்தியாலத்தில படுபயங்கரமா சண்டை நடந்திட்டுது செக்சன், பிளாட்டூன் எல்லாம் நல்லாச் சண்டை பிடிச்சதுகள் பல்லவியின்ர செக்சன் முன்னுக்கு அடிச்சுக்கொண்டு போனதுதான்... பல்லவியும் விழுந்ததோட அடுத்தடுத்த செக்சனுக்கு இழப்பு வரத் தொடங்கிற்று.

பல்லவி அவவொரு திறமையான சிறு அணிப் பொறுப்பாளர். நல்லாச் சண்டை பிடிப்பாள். என்ர கண்ணுக்கு முன்னுக்கு அப்படிச் சொல்லிப்போட்டுப் போயிற்றாள். என்ர சிந்தனை வெகு நேரமாக ஓடிச்சுது. பல்லவியின்ர நினைவு அடிக்கடி வந்து போகுது. நேற்றைய சம்பவங்களைக் கோத்து மீட்டுக்கொண்டிருந்தபோதுதான் நடைபேசியால் தொடர்பு வந்திச்சு. நிஸ்மி அக்காதான் தொடர்பு கொண்டிருந்தார்.


நேற்று நடந்த சண்டையில எங்கட நிலைகளில் இருந்து பின்னுக்கு காயக்கரார்கள் என்று போனவையின்ர காப்பரண்களை நிறைக்க வேண்டியிருந்தது. அதுக்குத்தான் ஒரு செக்சன் பெடியள் வருகினம் எண்டும் அவதான் நேரா வாறா எண்டும் குறிப்பிட்டா. நேற்று நான் இருந்த நிலையும் இண்டைக்கு என்ர நிலையும் எனக்கே எதையெதையோ எல்லாம் கற்றுத் தந்தது.

இதைத்தான் அடிக்கடி நினைச்சன். பல்லவி வீரச்சாவடைஞ்சா அந்தச் சண்டையில், அவளின்ர செக்சன் மாதிரி ஒரு செக்சன் எண்டாலும் இருந்தா அந்தச் சூனியப் பிரதேசமான ஒரு கிலோமீற்றரையும் பிடித்து முன்னுக்கு நகர்ந்து எங்கட முன்னணி நிலையை அமைச்சிருக்கலலாம். எதிரியும் கொஞ்சம் பயமாகவும் இனி நகர்வெடுக்கத் துணியாமலும் இருந்திருப்பான். இந்த எண்ணந்தான் என்னைப் போட்டுக் குடைஞ்சிது. இன்னும் கொஞ்சப் பேர் இருந்தால் அல்லாட்டி இன்று வந்திருந்தா நிலைமை வேறாக இருந்திருக்கும். எங்களுக்கு வீச்சா சண்டை பிடிக்க ஆக்கள் காணாமல் இருக்குதே. எண்டு நினைக்க கவலையாகவே போட்டுது.

இப்ப நிஸ்மியக்கா சொன்னபடி ஒரு செக்சன் வருதாம் – தம்பியவையாம். வரட்டும் காயப்பட்டுப் போனவையின்ர இடத்தை நிரப்ப எண்டாலும் வரட்டும். நான் நினைச்சுக்கொண்டிருக்கவே அந்த செக்சன் வந்து நிண்டது. வந்தவையளுக:கும் வரைபடம் காட்டி போற நிலைகளையும் காட்டி நிலைகளைச் சொல்லி விளங்கப்படுத்த வேணும். அது என்ர முக்கிய கடமையுமாய் இருக்குது. வரைபடத்தை விரிச்சு விளங்கப் படுத்தினன். அந்த செக்சன் பொறுப்பாளர் எதுவுமே கதைக்காம அதில என்ன இதில என்ன என்று கேட்காம இருந்தது எனக்கு ஆச்சரியமாகவே இருந்தது.

தம்பி என்ன ஒண்டும் கேட்காம இருக்கிறியள் எண்டன். அவன் அந்த வரைபடத்தில் அந்த இடத்தைச் சுட்டிக் காட்டினான். அதிலதான் தன்ர வீடு எண்டான். என்ன பெயர் எண்டு கேட்டன். பல்லவன் எண்டான். நினைவுகள் வேகமாக... நெஞ்சை ஏதோ செய்தது...

நன்றி: – போராளி காந்தா, சித்திரை 2005 எரிமலை



RATHIKA SITSABAIESAN
MAYA D'ELIA
SUTHA SHANMUGARAJAH
COLLINS PERINPANAYAGAM
நம்பிக்கையின் ஒளிக்கீற்று
RAY OF HOPE
A DOCUMENTARY FILM BY
RYAN SINGH PRODUCTIONS LTD
MAY
5
2024
5PM
GALA DINNER
& SCREENING
Scarborough
Convention
Centre
20 Torham Pl,
Scarborough,
ON M1X 0B3
www.rayofhopedoc.com
FOR TICKETS
Murali:
647-831-5161
Ryan:
416-275-8993
RYAN SINGH PRODUCTIONS AND MBI PICTURES PRESENTS RAY OF HOPE STARRING RATHIKA SITSABAIESAN MAYA D'ELIA
SUTHA SHANMUGARAJAH COLLINS PERINPANAYAGAM CULTURAL CONSULTANT DAYANA STANISLAUS EXECUTIVE PRODUCERS RATHIKA SITSABAIESAN
RYAN SINGH PATRICIA SCARLETT NIKILA COLE VIJAI SANKAR MUKUNDA MURALEE CINEMATOGRAPHERS ROGER SINGH RYAN SINGH
COMPOSER ANDRÉS GALINDO ARTEAGA EDITOR KIRK TAYLOR WRITERS / DIRECTORS RYAN SINGH NIKILA COLE
media
Canada
ONTARIO CREATES
CANADA MEDIA FUND
Riipen
DGC ONTARIO
obac
Level UP

# தமிழ்ப் பொதுவேட்பாளர்: பயங்களும் பதில்களும்!

## Presidential elections: ITAK ready to discuss common candidate

08 Apr 2024 | BY Sahan Tennekoon



- Ready to talk to any party or individual despite political differences; MP Sumanthiran

22.04.2024

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை கடந்த 15 ஆண்டுகளில், அதிகம் பேசு பொருளாக மாறியிருப்பது இந்தமுறைதான். அது ஒன்றுக்கு மேற்படட தரப்புக்களால் முன்னெடுக்கப்படுவதும் இந்த முறைதான். அதுமட்டுமல்ல, அது அதிகம் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாகும் ஆபத்துக்கள் நிறைந்திருப்பதும் இந்த முறைதான்.

இந்தக் கோரிக்கையை கோட்பாட்டு ரீதியாக முதலில் முன்வைத்தவர் மு.திருநாவுக்கரசு. இக்கோரிக்கையை அதற்குரிய கோட்பாட்டு அடர்த்தியோடு விளங்கிக் கொள்ளாமல் பிரயோகித்தவர்கள் குமார் பொன்னம்பலமும் சிவாஜிலிங்கமும் ஆவர்.

மு.திருநாவுக்கரசு 2010 ஆம் ஆண்டு, அதாவது ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த அடுத்த ஆண்டு “பொங்குதமிழ்” என்ற இணையதளத்தில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும் என்று கட்டுரை எழுதினார். ஆனால் அந்த ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ்த்தரப்பு ராஜபக்சங்களுக்கு எதிராக வாக்களிப்பதாக நினைத்துக் கொண்டு, அதே ராஜபக்சக்களின் ஆணையை முன்னெடுத்த தளபதி சரத் பொன்சேகாவுக்கு வாக்களித்தார்கள்.


திருநாவுக்கரசுவின் கட்டுரையை யாரும் பொருட்படுத்தவில்லை. பின்னர் 2015 ஆம் ஆண்டும் திருநாவுக்கரசு அதே கட்டுரையை சிறு மாற்றங்களோடு அதே இணையத் தளத்தில் எழுதினார். அப்பொழுது ஆட்சிமாற்ற அலை வீசியது. ராஜபக்சக்களைத் தோற்கடிப்பதற்காக ரணில்+மைத்திரி கூட்டு ஒன்றை மேற்கு நாடுகளும் இந்தியாவும் சேர்ந்து உருவாக்கின. அப்பொழுதும் தமிழ்மக்கள் ராஜபக்சங்களுக்கு எதிராக வாக்களிப்பதாகக் கருதிக்கொண்டு இறுதிக்கட்டப் போரில் தற்காலிகமாக பாதுகாப்பு மந்திரியாக இருந்த மத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தார்கள்.

திருநாவுக்கரசு இரண்டுக்கும் மேற்பட்ட தடவைகள் அதுதொடர்பாக எழுதிய பின்னரும் தமிழ் அரசியல் சமூகம் அது தொடர்பாகக் கவனத்தில் எடுக்கவில்லை. அதனால் நோர்வையில் வசிப்பவரும் திருநாவுக்கரசுவின் மாணவருமான ஒரு புலமையாளர் அவரிடம் கேட்டார்... “என் நீங்கள் திரும்பத் திரும்ப எழுதுகிறீர்கள்?” என்று. அதற்கு திருநாவுக்கரசு சொன்னாராம் ஒருமுறை எழுதியதை யாரும் உள்வாங்கவில்லை என்பதனால்தான் அதைத் திரும்பத் திரும்ப எழுத வேண்டியிருக்கிறது என்று. “கடந்த பல தசாப்தங்களாக தமிழ் அரசியலில் சரியான அறிவியல் முடிவுகள் எடுக்கப்பட்டிருகின்றன. ஆனால் அவை அரசியல் தீர்மானகளாக மாற்றப்படவில்லை” என்று மேற்படி நோர்வீஜியத் தமிழர் அடிக்கடி கூறுவார்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் வந்த பொழுது தமிழ் மக்கள் பேரவை ஒரு சுயாதீனக் குழுவை உருவாக்கியது. அக்குழு ஒரு தமிழ்ப்பொது வேட்பாளரை முன்னிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து எல்லாக் கட்சிகளையும் சந்தித்தது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தேர்தலைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்திருந்தது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அது தொடர்பாக தெளிவான பதில்களைக் கூறவில்லை. கோட்டாபய தனது அமெரிக்கப் பிரஜா உரிமையைத் துறப்பதில் இருக்கும் சட்டச் சிக்கல்களை முன்வைத்து சம்பந்தர் உரையாற்றினார். அதுமட்டுமல்ல, ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தினால் அது சிங்கள மக்கள் மத்தியில் இனவாதக் கருத்துக்களைத் தூண்ட உதவாதா என்றும் அவர் கேட்டார்.

தமிழரசுக் கட்சி அப்பொழுது தமிழ்ப்பொது வேட்பாளரை ஆதரிக்கவில்லை. கூட்டமைப்புக்குள் அங்கம் வகித்த பங்காளிக் கட்சிகள் துணிந்து முடிவெடுக்கவில்லை. விக்னேஸ்வரன் அதை ஆதரித்தார். ஜங்கரநேசன், அனந்தி போன்றவர்களும் அதை ஆதரித்தார்கள். எனினும் ஒரு கட்டத்துக்கு மேல் அந்த



தமிழ் மக்கள் பேரவையின் சுயாதீனக் குழு 2019

விடயத்தை செயலுருப்படுத்த தமிழ்மக்கள் பேரவையால் முடியவில்லை. அது உருவாக்கிய சுயாதீனக் குழுவானது அதுதொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டதோடு சரி.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கும் பல மாதங்களுக்கும் முன்னரே இந்த விடயத்தை முதலில் கையில் எடுத்தவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். அதன் பின் “மக்கள் மனு” என்று அழைக்கப்படும் ஒரு சிவில் சமூகம் அதனை முன்னெடுக்கின்றது. அந்த சிவில் சமூகம் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் இரண்டு கருத்தரங்குகளையும் நடத்தியிருக்கிறது. அதே சமயம் புலம் பெயர்ந்த தமிழ் முதலாளி ஒருவரும் இது தொடர்பில் சிந்திப்பதாகத் தகவல்கள் வெளிவந்தன.

விக்னேஸ்வரன் அது தொடர்பாக வெளிப்படையாகவே பேசி வருகிறார். தமிழ் பொது வேட்பாளர் என்று தெரிவை சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு அடுத்தபடியாக அவர் இப்பொழுது அதிகமாகப் பேசி வருகிறார். அவர் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான அமைப்பின் இணைத்தலைவர்களில் ஒருவரான சிவகுரு ஆதீனத்தின் முதல்வரை அவ்வாறு பொது வேட்பாளராக நிறுத்தலாமா என்றும் ஒரு பரிந்துரையைச் செய்திருந்தார். அதேசமயம் ஈழத்துச் சிவசேனையின் தலைவராகிய மறவன்புலவு சச்சிதானந்தம் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனை பொது வேட்பாளராக சிபாரிசு செய்திருந்தார். இவ்வாறாக தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் இப்பொழுது மேற்பரப்புக்கு வந்துவிட்டது. அது அதிகம் பேசப்படும் ஒரு விடயமாக மாறிவிட்டது. அதில் பல்வேறு தரப்புகளும் ஈடுபாட்டைக் காட்டுகின்றன. அல்லது அதைக் குழப்புகின்றன. அவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவைக் குழப்பும் தரப்புகள் அல்லது அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவிக்கும் தரப்புகள், பின்வரும் காரணங்களை முன்வைக்கின்றன. அவற்றை ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

முதலாவது காரணம், தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவு ஏற்கனவே தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட ஒன்று என்பது. குமார் பொன்னம்பலம் சிவாஜிலிங்கம் போன்றவர்கள் அதில் ஏற்கனவே தோல்வி கண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. குமாரும் சிவாஜியும் அதை அதற்குரிய கோட்பாட்டு அடர்த்தியோடு முன்னெடுக்கவில்லை. அவர்கள் தமிழ் வேட்பாளர்களே தவிர தமிழ் தரப்பில் பெரும்பாலானவர்களின் விருப்பங்களை பிரதிபலித்த பொது வேட்பாளர்கள் அல்ல.

ஆனால் இப்பொழுது பேசப்படுகின்ற தமிழ்ப் பொது வேட்பாளர் எனப்படுகின்றவர், தமிழ் மக்களின் தேசிய ஐக்கியத்தின் குறியீடு. இலங்கை அரசாங்கம் நடத்தும் ஒரு தேர்தலையே தமிழ்மக்கள் மறைமுக பொதுசன வாக்கெடுப்பாக மாற்றலாமா என்ற ஒரு ஜனநாயகப் பரிசோதனை அது. தமிழ்ப்பொது வேட்பாளர் தேர்தலில் வென்று ஜனாதிபதியாக வரப்போவதில்லை. ஆனால் பெருமளவுக்கு தமிழ் வாக்குகளை அவர் திரட்டும் பொழுது, அவர் தமிழ்க் கூட்டு மனச்சாட்சியின் குறியீடாகப் பார்க்கப்படுவார். தமிழ்ப்பொது வேட்பாளர் ஜனாதிபதியாக வருவார் என்ற கற்பனையோடு யாரும் தமிழ் வேட்பாளரை நிறுத்தவில்லை. அவர் சிங்கள வேட்பாளர்களின் வெற்றியை சோதனைக்கு உள்ளாக்குவார் என்ற ஒரு பேர வாய்ப்பு அதில் உண்டு. அதைவிட முக்கியமாக, அவர் தேர்தலில் வெல்லப் போவதில்லை. ஆனால் அவர் தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்ஷம் ஒரு திரளாகத் திரட்டுவார்.

இரண்டாவது காரணம், தமிழ்ப் பொது வேட்பாளர் தோல்வியுற்றால் அது தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளின் தோல்வியாகக் காட்டப்படும் என்பது. உண்மைதான். ஆனால் தேர்தல் என்று வந்தால் வெற்றி மட்டும் தான் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கத் தேவையில்லை. தமிழ் மக்களின் உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து தமிழ்த் தரப்பை ஒன்றிணைப்பதற்கான மிக வலிமையான ஒரு செய்முறையாக அது இருக்கும் என்பதே வெற்றிதான். அங்கு தேர்தல் வெற்றியை மட்டும் வைத்து அந்த முயற்சியின் இறுதியான விளைவை மதிப்பிட வேண்டியதில்லை. கடந்த 15 ஆண்டுகளிலும் இம்முறை பொது வேட்பாளர் என்ற கோரிக்கை மேற்பரப்புக்கு வந்திருப்பது ஒரு வெற்றி. அதை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு எப்படி மேலே உயர்த்துவது என்று தமிழ்த்தரப்பு சிந்தித்து ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

மூன்றாவது காரணம், ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் சிங்கள மக்கள் மத்தியில் இனவாத கருத்துக்களைத் தூண்டிவிடுவார் என்பது. சம்பந்தர் திரும்பத் திரும்ப அதைச் சொல்லுகிறார். தமிழரசு கட்சிக்குள் ஒரு பகுதியினரும் அதைக் கூறுகிறார்கள். அவ்வாறு தூண்டப்படும் சிங்கள வாக்காளர்கள் ராஜபக்சக்களுக்கு வாக்களிப்பார்கள் என்றும் எனவே ராஜபக்சக்களை வெற்றி பெற வைப்பதற்குத்தான் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்படுகிறார் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். தமிழ் மக்கள் எதிர்ப்பைக் காட்டினால் அல்லது தமிழ்மக்கள் தனித்து முடிவு எடுத்தால், அது சிங்கள இனவாதத்தைத் தூண்டிவிடும் என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இங்குள்ள அடிப்படைக் கேள்வி என்னவென்றால், சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதம் இப்பொழுது மட்டும் என்ன தூங்கிக்கொண்டா இருக்கிறது? அப்படி என்றால் விகாரைகளைக் கட்டுவதும் தமிழ் மரபுரிமைச் சின்னங்களை ஆக்கிரமிப்பதும் மேய்ச்சல் தரையை ஆக்கிரமிப்பதும் யார்?

சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் கோபித்துக் கொள்ளும் அல்லது அது தன்னை மீண்டும் பலப்படுத்திக் கொள்ளும் என்று பயப்பட்டால் தமிழ் மக்கள் எதிர்ப்பு அரசியலையே கையில் எடுக்கக்கூடாது. தமிழ்த்தேசியம் என்ற வார்த்தையெல்லாம் பயன்படுத்தக்கூடாது. போராட்டம், சுதந்திரம் என்றெல்லாம் பிரகடனங்களைச் செய்யக்கூடாது.

அதேசமயம் தமிழ்ப் பொது வேட்ப்பாளர் ராஜபக்சக்களை வெல்லவைப்பார் என்று பதட்டமடைபவர்களில் ஒரு பகுதியினர் வெளிப்டையாகச் சொல்லாத ஒரு விடயம் என்ன வெனில், சஜித்துக்குக் கிடைக்கும் தமிழ் வாக்குகளை பொது வேட்பாளர் கவர்ந்து விடுவார் என்பது.

நாலாவது காரணம், ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்துகிறவர்கள் யாரோ ஒரு சிங்கள வேட்பாளரோடு டீல் செய்ய விரும்புகிறார்கள் என்ற சந்தேகம். இருக்கலாம். அதற்கு வாய்ப்புகள் உண்டு. அதேநேரம் அது தமிழ்ப் பொது வேட்பாளரின் கோரிக்கைகள் என்ன என்பதில்தான் தங்கி இருக்கின்றது. ஏனென்றால் தமிழ்ப்பொது வேட்பாளரோடு ஏதோ ஒரு டீலுக்கு வரும் சிங்கள வேட்பாளர் சிங்கள பௌத்த வாக்குகளை இழக்க வேண்டிவரும் என்பதே இலங்கைத் தீவின் கள யதார்த்தமாகும். சரத் பொன்சேகாவுக்கு அதுதான் நடந்தது. மைத்திரிக்கு அது நடக்கக்கூடாது என்பதற்காகத்தான் சம்பந்தர் மையால் உடன்படிக்கை எழுதுவதற்கு பதிலாக இதயங்களுக்கு இடையில் உடன்படிக்கை செய்யப்பட வேண்டும் என்றெல்லாம் இலக்கியத்தனமாகப் பேசினார்.

தமிழ்ப் பொது வேட்பாளர் உச்சமான கோரிக்கையை முன்வைத்தால், அவருடன் எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் பேரம் பேச வரமாட்டார் என்பதே யதார்த்தம். எனவே தமிழ்ப்பொது வேட்பாளர் முன்வைக்கப் போகும் கோரிக்கைகள் எவை என்பதுதான் அதைத் தீர்மானிக்கின்றது.

ஐந்தாவது காரணம், எந்த ஒரு சிங்கள வேட்பாளரையும் நம்ப முடியாது. எனவே தமிழ் மக்கள் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்பது. உண்மை. எந்த ஒரு சிங்கள வேட்பாளரையும் நம்பக் கூடாது என்பதற்காகத்தான் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் முன்வைக்கப்பட வேண்டும் என்று கேட்கப்படுகிறது. 15 ஆண்டுகளாக தமிழ் மக்களின் வாக்குகள் வெற்றுக் காசோலையாக யாரோ ஒரு சிங்கள வேட்பாளருக்கு வழங்கப்பட்டன. அதை நிறுத்தி அதை தமிழ் வேட்பாளருக்கு உரியதாகத் திரும்பினால் என்ன ?

எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப நான் கூறுவது போல, பகிஸ்கரிப்பு ஒரு தெரிவுதான் இந்தியாவில் நோட்டா என்று தெரிவு உண்டு. அதைப்போல. ஆனால் அந்த தெரிவை முன்வைக்கும் ஒரு கட்சி அதற்காக உழைக்க வேண்டும். அந்த தெரிவை மக்கள் மயப்படுத்த வேண்டும். அறிக்கையை விட்டுவிட்டு பேசாமல் இருக்க முடியாது. அப்படி இருந்தால் ஏனைய கட்சிகள் மக்களைப் பிழையான வேட்பாளரை நோக்கிச் சாய்த்துக் கொண்டு சென்று விடுவார்கள். அதாவது தமிழ் வாக்குகள் மீண்டும் வெற்றுக் காசோலையாக யாரோ ஒரு சிங்கள வேட்பாளரை நோக்கிப் போகும். தேர்தலைப் புறக்கணிப்பது ஒரு தெரிவு. ஆனால் அதற்காக உழைக்க வேண்டும். அதை மக்கள் மயப்படுத்த வேண்டும். அதுதான் சுதந்திரத்திற்காகப் போராடும் ஒரு மக்கள் கூட்டம் செய்ய வேண்டியது.

மேற்சொன்னவற்றைத் தொகுத்துப் பார்த்தால், தெளிவான ஒரு சித்திரம் கிடைக்கும். தமிழ்ப்பொது வேட்பாளர் எனப்படுபவர் தமிழ்மக்களின் கூட்டு மனோநிலையின் குறியீடாக இருப்பார். அவர் தமிழ்க்கட்சி அரசியலைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடாது. தமிழ்மக்கள் மத்தியில் தற்போது தூண்டி விடப்படும் பிரதேச, சாதி, சமய, பால் அசமத்துவங்களை அவர் பிரதிநிதித்துவப் படுத்தக் கூடாது. எந்த ஒரு சிங்கள வேட்பாளரோடும் அவர் தன்னிச்சையாக டீலுக்கு போக முடியாது. ஜனாதிபதித் தேர்தல் மூலம் அவருக்கு கிடைத்த பிரபல்யத்தை அவர் அடுத்தடுத்த தேர்தல்களில் முதலீடு செய்யக்கூடாது... போன்ற நிபந்தனைகளின் அடிப்படையில் ஒரு பொது வேட்பாளரை தமிழ் மக்கள் முன் நிறுத்துவார்களாக இருந்தால், அவ்வாறு ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்குரிய கட்டமைப்புகளை தமிழ் மக்கள் உருவாக்க முடிந்தால், அது கடந்த 15ஆண்டு கால தமிழ் அரசியலில் திருப்பகரமான ஒரு நகர்வாக அமையும். இல்லையென்றால், இக்கட்டுரையில் முன்கூறப்பட்ட நோர்வீஜியத் தமிழர் கவலைப்பட்டதுபோல தமிழ் அரசியலில் சரியான அறிவியல் முடிவுகள் எடுக்கப்பட்டபோதிலும், அவை அரசியல் தீர்மானங்களாக மாற்றப்படாததன் ஆகப்பிந்திய விளைவொன்றை தமிழ் மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

நன்றி: நிலாந்தன்



# தமிழீழ விடுதலைப்புலிகள் பிறப்பு




புதிய தமிழ்ப் புலிகள் இயக்கம், 1976 வைகாசி 5ம் நாள் 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்ற புதிய பெயரை சூட்டிக் கொண்டது. இதன் அரசியல் தலைவராகவும், இராணுவத் தளபதியாகவும் தலைவர் பிரபாகரன் அவர்களே இருந்தார். "புதிய தமிழ்ப் புலிகள்" இயக்கத்தில் இருந்த மிகக்கடுமையான சில கட்டுப் பாடுகள் தளர்த்தப்பட்டு, முழுத் தமிழீழ மக்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கக் கூடிய முறையில், சட்ட திட்டங்கள் மாற்றப்பட்டு தலைவர் பிரபாகரனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன.

அத்துடன் தலைவர் பிரபாகரனால், இவ்வமைப்பு நகர்ப்புறக் கெரில்லா அமைப்பாக உருவாக்கப்பட்டுத் தேசிய விடுதலைக் கான நீண்டகால மக்கள் யுத்தம் என்ற இலட்சியத்துடன், தமிழீழ மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்ட இயக்கமாக விரிவடைந்தது. நிராயுதபாணிகளான, வலிமை குறைந்த தமிழீழ மக்கள் சிங்கள இனவாத அரசின் பாரிய இராணுவ வலிமைக்கு எதிராகப் போராடுவதற்கு நீண்ட கெரில்லா யுத்த பாதையே மிகவும் பொருத்தமானது என்பதைத் தனது தீர்க்க தரிசனமான கண்ணோட்டத்தில் உணர்ந்து கொண்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் பரந்துபட்ட மக்கள் பங்கு கொள் ளும் வெகுசனப் போராட்டத்தின் முன்னோடி நடவடிக்கையாக கெரில்லாப் போர் முறைப்படுத்தினார்.

இதுபற்றித் தலைவர் பிரபாகரன் குறிப்பிடுகையில் "கெரில்லாப் போராட்டம் என்பது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம். கெரில் லாப் போர்முறை மக்கள் போராட்டத்திற்கு முரண்பட்டதல்ல. மக்கள் போராட்டத்தின் உன்னத வடிவமாகவே அதனைக் கொள்ளவேண்டும். மக்கள் மத்தியில் கருக்கொண்டு, மக்களது அபிலாசைகளின் வெளிப்பாடாக உருவகம் கொள்ளும் பொழுதே கெரில்லாப் போர் வெகுசனப் போராட்ட வடிவத்தைப் பெறுகிறது. கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலை கொள்ளச் செய்து அப்போரில் மக்களை நேரடியாகப் பங்களிக்கச் செய்து இப்போர் முறையை பரந்துபட்ட போராக விரிவாக்குவதே எனது நோக்கமாகும்" என்று கூறினார்.

***தலைவர் பிரபாகரன், தமிழீழ விடுதலைப் போரில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை முப்பெரும் பிரிவாக வகுத்தார்.***

(1) சிறீலங்கா பொலிசின் உளவுப் படையை, துரோகிகளாக அழித்தல்.

(2) தமிழீழத்தில் உள்ள சிறீலங்கா பொலிஸ் நிர்வாக அமைப்பை நிலைகுலையச் செய்தல்.

(3) இராணுவ அணிகள் முகாம்கள் மீது மறைந்திருந்தும் நேரிடையாகவும் தாக்கி அழித்து, அவ்விடங்களில் தமிழீழ மக்களுக்கு ஏற்ற சிவில் நிர்வாக அமைப்பை உருவாக்கி அத னூடு தமிழீழத்தில் சுயாட்சியை நிறுவுதல்.

1976 ஆடி 2ம் நாள் உரும்பிராயைச் சேர்ந்த நடராசா என்ற பெற்றோல் நிலைய முகாமையாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். 1977 மாசி 14ம் நாள் காவற்துறை கான்ஸ்டபிள் கருணாநிதி மாவிட்டபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1977 வைகாசித் திங்கள் 18ம் நாள் சண்முகநாதன் என்ற பெயரைக் கொண்ட 2 காவற்துறையினர் இணுவிலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1977 ஆவணியில் ஐ.தே.கட்சி அரசால் 'தமிழின அழிப்பு' ஒன்று இலங்கைத் தீவு முழுவதிலும் நடத்தி முடிக்கப்பட்டது. 1978 தை 27ம் நாள் பொத்துவில் தொகுதியின் தமிழர் கூட்டணி வேட்பாளர் கனகரத்தினம் கொழும்பில் வைத் துச் சுடப்பட்டார்.

1978 சித்திரை 7ம் நாள், கொழுப்பு 4ம் மாடி சித்திரவதையில் பெயர் பெற்ற இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை உட்பட 4 சிறீலங்கா உளவுப் படையைச் சேர்ந்த காவற் துறையினர் முருங்கன் மடு வீதிக்கு உட்புறமான காட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1978 சித்திரை 25ம் நாள், முதன்முறையாக புதிய தமிழ்ப் புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கைகளில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் வரை எல்லாமாகச் சேர்ந்து 11 இராணுவ நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் பகிரங்கமாக உரிமை கோரி அறிக்கை விட்டனர்.

1978 வைகாசி 19ம் நாள் "தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச் சட்டம்" சிறீலங்காப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இக் கொடூரமான சட்டம் விடுதலைப் போராளிகளை அழிப் பதற்கு சிறீலங்கா ஆயுதப் படைகளுக்கு சகலவிதமான அதி காரங்களையும் வழங்கியது.

1978 ஆவணி 7ம் நாள் ஐ.தே.க. கட்சியின் ஜே.ஆர்.ஜெயவர்த் தனா அரசு 'புதிய அரசியலமைப்பை' உருவாக்கி தமிழ் மொழியை இரண்டாம் பட்ச நிலைக்குத் தள்ளியது. 1978 மார்கழி 5ம் நாள் திருநெல்வேலியில் சிறீலங்கா அரசுக்கு சொந்தமான வங்கியில் இருந்து 12 லட்சம் ரூபா பறிக்கப்பட் டதுடன் இரண்டு காவற்துறையினரும் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

1979 ஆடி 20ம் நாள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் இனவெறி அரசு விடுதலைப்புலிகள் தடைச்சட்டத்திற்கு எதிராகப் படுமோச மான "பயங்கரவாதத் தடைச்சட்டத்தை" அமுலுக்கு கொண்டு வந்தது. இச்சட்டத்தின் மூலம் ஒருவரை 18 மாதகாலத்திற்கு வெளியுலகத் தொடர்பு ஏதும் இன்றி தனிமைச் சிறையில் வைக் கமுடியும்.

இதே பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்ட அதேதினம் வடக்கில் அவசரகால நிலையைப் பிரகடனப் படுத்தி 1979 மார்கழி 31ம் நாளுக்கு முன் அதவாது 6 திங் களுக்குள் வடக்கே விடுதலைப்போரை (ஜே.ஆரின் மொழியில் பயங்கரவாதத்தை) அழித்து ஒழிக்குமாறு உத்தரவிட்டுப் பிரிகேடியர் வீரதுங்காவை வட மாகாணத்துக்கு அனுப்பினார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன.

சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது இராணுவ அடக்கு முறையைத் தீவிரமாக்கித் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக் கத்தை அழிப்பதற்குச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முனைந்து நின்றபோது ஆயுதப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் உறுதிப்படுத்தி விரிவாக்க வேண்டும் என்ற நோக்கில், தலைவர் பிரபாகரன் அவர்கள் அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சி நடவடிக்கையை முறியடிப்பதற்காகக் கெரில்லா அமைப்பு முறையைப் பலப்படுத்தி அரசியல் பிரிவையும் விரி வாக்க முடிவு செய்தார்.

இதன்படி 1979ம் 1980ம் ஆண்டுகளில் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை தற்காலிகமாகப் பின்போட்டுவிட்டு, இயக்க அமைப்பினைப் பலப்படுத்துவதில் தலைவர் பிரபாகரன் கவனம் செலுத்தினார். இக்கால கட்டத்திலேயே புரட்சிகர அரசியற் கோட்பாட்டைக் கொண்ட அரசியல் திட்டத்தை வரைந்து இதனூடு அரசியல் விழிப்புணர்வு கொண்ட போராளிகளை உருவாக்கினார். இக்காலகட்டத்திலேயே சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைக்குக் குரல் கொடுக்குமுகமாக தமழீழ விடு தலைப் புலிகளின் கிளைகளை நிறுவி சர்வதேச முற்போக்கு அமைப்புகளுடனும் நல்லுறவுகளை ஏற்படுத்துவது தலைவர் பிரபாகரனின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

1981ம் ஆண்டு வைகாசி 31ம் நாள் சிங்கள இராணுவப் படை களும் ஐக்கிய தேசியக் கட்சிக் காடையர்களும் சேர்ந்து யாழ் நகரை எரியூட்டினர். தென்னாசியாவிலேயே தலைசிறந்ததாகக் கருதப்பட்ட யாழ் நூல் நிலையத்தை எரியூட்டி விலைமதிப்பற்ற 94,000 புத்தகங்களைச் சாம்பல் மேடாக்கினர். பத்திரிகை அலுவலகமும் தீக்கிரையாக்கப்பட்டது. இவ்வாறு தமிழினத்தின் மீது கலாச்சாரப் படுகொலைத் திட்டமாக அமைந்த இவ்வழிவு களைத் தலைமை தாங்கிச் செய்து முடித்தவர்கள் அப்போதைய ஐ.தே.கட்சியின் ஆட்சியில் மந்திரியாகவும், பின்னர் எதிர்க் கட்சித் தலைவருமாக இருந்து 24 ஐப்பசி 94ல் குண்டுத் தாக் குதல் ஒன்றில் பலியான ஐ.தே. கட்சியின் சனாதிபதி வேட்பாள ரான காமினி திசநாயக்காவும் என்று நம்பகமாக அறியப் படுகிறது.

இராணுவ அட்டூழியத்தாலும் வன்முறையாலும் தமிழீழ மக் களை அடிபணியச் செய்ய முடியாது என்பதனைச் சிங்கள இனவாத அரசுக்கு உணர்த்த வேண்டும் எனத் தீர்மானித்த தலைவர் பிரபாகரன் படையினர் மீது தாக்குதல்களை ஆரம் பிக்கும்படி போராளிகளுக்கு கட்டளையிட்டார். தாக்குதல்களும் தீவிரமாகின.

***சிறீலங்கா இராணுவத்துக்கு எதிரான முதலாவது தாக்குதல்***

1981 ஐப்பசி 15ம் நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள காங்கேசன் துறை வீதியில் இராணுவ வாகனம் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் 2 இராணுவத்தினர் கொல்லப்பட்டு அவர்களது ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதுவே தமிழீழப் போராட்ட வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இராணுவத்தினருக்கு எதிரான முதலாவது ஆயுத நடவடிக்கையாகும்.

1982 ஆடி 2ம் நாள் நெல்லியடியில் காவற்துறைப் படையின் மீது நடத்தப் பட்ட தாக்குதலில் 4 பேர் கொல்லப்பட்டு 3 பேர் படு காயப்படுத்தப்பட்டனர். அவர்களின் ஆயுதங்களும் கைப்பற்றப் பட்டன.

1982 புரட்டாதி 29ம் நாள் இனவெறியன் ஜெ . ஆர் . ஜெயவர்த் தனா சனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்காக யாழ்ப்பாணம் வந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பொன்னாலைப் பாலத்தில் வந்து கொண்டிருந்த கடற்படை வாகனங்களை அழிப்பதற்கு கண்ணி வெடிகளை விதைத்து வெடிக்க வைத் தனர்.

1982 ஐப்பசி 27ம் நாள் சாவகச்சேரி காவற்துறை நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி 3 பேரைச் சுட்டுக்கொன்று, 3 பேரைக் காயப்படுத்தி, பெரும்தொகையான ஆயுதங்களையும் விடு தலைப்புலிகள் கைப்பற்றிச் சென்றார்கள். இத் தாக்குதலை



அடுத்து வட மாகாணத்தின் பல காவற்துறை நிலையங்கள் மூடப்பட்டன. வடக்கில் காவற்துறை நிர்வாகம் நிலைகுலைந்து முடங்கிப் போனது.

1983 மாசி 18ம் நாள் பருத்தித்துறை காவற்துறை நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1983 பங்குனி 4ம் நாள் பரந்தனருகே உமையாள்புரத்தில் இராணுவத் தொடர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்து நேரடிச் சமரில் ஒரு மணித்தியாலயமாக ஈடுபட்டனர். இத்தாக்குதலில் இராணுவக் கவச வண்டி ஒன்று சேதமாக்ககப்பட்டதுடன் இராணுவத்தினர் ஐவரும் படுகாயம் அடைந்தனர்.

1983 சித்திரை 2ம் நாள் வடமாகாணத்தில் பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக யாழ். அரசாங்க அதிபர் ‘பாதுகாப்பு மாநாடு’ ஒன்றைக கச்சேரியில் நடத்துவதற்குத் திட்டமிட்டு இருந்தபோது மாநாடு தொடங்குவதற்கு ஒரு மணித்தியாலயத்திற்கு முன்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் கச்சேரிச் செயலகக் கட்டிடத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தெறிந்து தமது எதிர்ப்பை சிறீலங்கா அரசிற்கு உணர்த்தினர்.

1983 வைகாசி 18ம் நாள் வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துவதென அறிவிப்பு செய்தது. இத்தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி தலைவர் பிரபாகரன் தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார், சிறீலங்கா அரசின் தேர்தல் மாயையிலிருந்து விடுபடுமாறும் சிறீலங்கா அரசின் சகல நிர்வாகங்களையும் நிராகரிக்குமாறும் வெகுசன ஆயுதப் போராட்டத்திற்கு அணி திரளுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

1983 சித்திரை 29ம் நாள் சிறீலங்கா அரசின் இனவெறி அரசை ஆதரிக்கும் சகல தமிழ்த் துரோகிகளுக்கும் எச்சரிக்கையாக மூன்று ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த இராணுவ நடவடிக்கையின் விளைவாக ஐ.தே. கட்சியின் சார்பில் நின்ற சகல தமிழ் வேட்பாளர்களும் தேர்தலிலிருந்து விலகியதுடன் தமிழர்கள் பலர் ஐ.தே.கட்சியிலிருந்தும் நீங்கிக்கொண்டனர்.

1983 கைகாசி 18ம் நாள் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு முடிவடைவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்பாக நல்லூர் கந்தர் மடத்தில் தேர்தல் சாவடிக்குக் காவலில் நின்ற இராணுவ, காவற்துறைப்படைகளின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலில் இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட காவற்துறையினர் இருவரும் இராணுவத்தினர் இருவரும் படுகாயம் அடைந்தனர். இராணுவத்திடமிருந்து தானியங்கு சுரிகுழல் துப்பாக்கி ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

இவ் வெற்றிகரமான தாக்குதலையடுத்து விடுதலைப் போராளிகள் (அரசாங்கத்தின் மொழியில் பயங்கரவாதிகள்) என்று சந்தேகிக்கும் எவரையும் கண்ட இடத்தில் சுட்டுத் தள்ளவும் பிரேத பரிசோதனை, நீதிமன்ற விசாரணை எதுவுமின்றி சுடப்பட்ட நபர்களின் சடலங்களைப் புதைக்கவும் இராணுவத்துக்கு ஜே.ஆர். அரசு அதிகாரங்களை வழங்கியது.

1983 ஆடி 23ம் நாள் நள்ளிரவில் திருநெல்வேலியிலுள்ள பலாலி வீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் படைப் பிரிவு இராணுவத்திற் கெதிரான திடீர்த் தாக்குதலுக்காக காத்து நின்றது. 14 விடுதலைப் புலிகளைக் கொண்ட இப்பிரிவில் தலைவர் பிரபாகரனும் ஒரு போராளியாக நின்றுகொண்டு அத்தாக்குதலின் தலைமைப் பொறுப்பை லெப்டினன்ட் செல்லக்கிளியிடம் கொடுத்து இருந்தார். குறிப்பிட்ட இடத்துக்கு இராணுவத்தொடர் வந்ததும் கண்ணிவெடியை வெடிக்க வைத்து தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத்தாக்குதலில் இராணுவத்தினர் 13 பேர் பலியாகினர். பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. தலைவர் பிரபாகரன் மட்டும் இத்தாக்குதலில் இராணுவத்தினர் எழுவரை சுட்டுக் கொன்றார்.

இத்தாக்குதல் சிங்கள இராணுவத்தை நிலைகுலையைச் செய்தது. இத்தாக்குதல் சம்பவத்தை உடனடிக் காரணமாக எடுத்துக் கொண்ட சிங்கள அரசு ஏற்கனவே திட்டமிட்டிருந்ததன்படி தமிழினப் படுகொலையை இலங்கைத் தீவு அடங்கலும் பரவலாகக் கட்டவிழ்த்து விட்டது. தமிழ் மக்கள் பல ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் பலர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். கொழும்பில் தமிழர்களின் பொருளாதாரத் தளம் முற்றாக அழிக்கப்பட்டது. இவ்வின ஒழிப்பு முழுமையாகச் சிங்கள அரசின் அமைச்சர்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களதும் அரச படைகளினதும் ஆதரவுடன் நடத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னரே தமிழ்மக்கள் முழுமையாக உணர்ந்து கொண்டனர், தமிழீழத்தை சிறீலங்காவின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து மீட்டெடுத்து, விடுதலை பெற்ற தமிழீழத்தில், தமிழீழ அரசை நிறுவி வாழ்வதுதான் எமக்கும் எமது எதிர்காலச் சந்ததிக்கும் பாதுகாப்பானது என்று. இதனால் ஏற்பட்ட விழிப்புணர்வு தமிழீழ விடுதலைப் போரில் பொதுமக்களும் பங்கேற்கும் நிலையை உருவாக்கியது. தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்து கொள்ளத் தொடங்கினர்.

**தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் நிர்வாகக் கட்டமைப்பின் கீழ் இயங்கியவை:**

01. இராணுவம் (தரைப் படை - பல்வேறு படை அணிகள்): இம்ரான் பாண்டியன் படையணி, ஜெயந்தன் படையணி, சார்ள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, கிட்டு பீரங்கிப் படையணி, ராதா வான்காப்புப் படையணி, குட்டிசிறி மோட்டார் படையணி, சிறப்பு உந்துகணை செலுத்திப் படையணி, விக்டர் கவச எதிர்ப்புப் படையணி, சோதியா படையணி, மாலதி படையணி, அன்பரசி படையணி, ஈருடப் படையணி, யாழ் செல்லும் படையணி, பதுங்கித் தாக்குதல் அணிகள், குறிபார்த்து சுடும் படையணி, ஆழஊடுருவி பதுங்கித்தாக்குதல் அணி, சிறுத்தைப் படையணி, பொன்னம்மான் மிதிவெடிப் பிரிவு, ஆயுதக் களஞ்சிய சேர்க்கை, வேவுப்பிரிவு

02. கடற்புலிகள், நீரடி நீச்சல் பிரிவு, கடல் வேவு அணி, சார்லஸ் சிறப்புக் கடற்புலிகள் அணி, அங்கயற்கண்ணி ஆழ்கடல் நீச்சல் அணி (பெண்கள்), நிரோஜன் ஆழ்கடல் நீச்சல் அணி, கடல் சிறுத்தைகள் சிறப்பு அணி, நீரடி நீச்சல் அணி, படகு கட்டுமான பகுதி, கடற்கண்காணிப்பு பிரிவு (Radar Monitoring)

03. வான்புலிகள்

04. கரும்புலிகள்

05. அரசியற்துறை (அரசியல் தொடர்பு, மக்கள் தொடர்பு, பரப்புரை, கொள்கை முன்னெடுப்புப் பிரிவு)

06. புலனாய்வுத்துறை (வெளியகப் புலனாய்வுப் பிரிவு, உள்ளகப் புலனாய்வுப் பிரிவு)

07. படையப் புலனாய்வுப் பிரிவு

08. தமிழீழப் படைத்துறைப் பள்ளி

09. படைய தொடக்க பயிற்சிக் கல்லூரி, விசேட பயிற்சிக் கல்லூரி, படைய அறிவியல் கல்லூரி, இராணுவ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரி

10. ஒட்டுக்கேட்கும் பிரிவு (Communication Monitoring - இராணுவ நகர்வுகளை விமானதாக்குதல்களை பற்றிய தகவல்களை ஒட்டுக்கேட்டு உசார்படுத்தும் அணி)

11. வரைபட பிரிவு (மாதிரிகள் அமைக்கும் அணி (Model), தொலைத்தொடர்பு பரிபாசை தாள்கள் தயாரிக்கும் அணி)

12. சமர் ஆய்வு மையம்

13. ஆயுத ஆராய்ச்சி மற்றும் உருவாக்கல் பிரிவு

14. அனைத்துலகச் செயலகம் (வெளிநாட்டு கிளைகள் நிர்வாகம்)

15. வழங்கற் பிரிவு

16. விடுதலைப்புலிகளின் சமாதான செயலகம்

17. எல்லைப்படை, துணைப்படை, போருதவிப்படை

18. தலைமைச்செயலகம்

19. தலைமைச்செயலக பாதுகாப்பு அணி

20. இராணுவ தொழிநுட்ப பிரிவு (கணனிப்பிரிவு)

21. போர்க்கருவி தொழிலகம்

★

01. ஒளிப்பதிவுப் பிரிவு (உள்ளக படப்பிடிப்பு, களப் படப்பிடிப்பு)

02. நந்தவனம் (வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்புவோர்களுக்கான தொடர்பாடல் சேவை மையம்)

03. மருத்துவப் பிரிவு, திலீபன் சிறப்பு மருத்துவப் பிரிவு, பொன்னம்பலம் நினைவு மருத்துவமனை, லெப். கேணல் கௌசல்யன் ஞாபகார்த்த நடமாடும் மருத்துவ சேவை

04. தமிழீழ சுகாதார சேவைகள் (மருத்துவ சேவை, உடல் உளநலன் விழிப்புணர்வு சேவைகள்)

05. வெண்புறா (செயற்கைகால் உற்பத்தி நிலையம்)

★

01. தமிழீழக் காவற்துறை (காவல்துறை, குற்றத் தடுப்புப் பிரிவு, குற்ற புலனாய்வுப் பிரிவு, சீர்திருத்தப் பள்ளி)

02. தமிழீழ வன வளத்துறை

03. தமிழீழ நிதித்துறை

04. விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

05. தமிழீழ நீதித்துறை (தமிழீழ சட்டக்கல்லூரி, தமிழீழ சட்டவாக்கப்பிரிவு, நீதிமன்றுகள்)

06. தமிழீழ நிர்வாக சேவை (மாவட்ட திட்டமிடலுக்கும் மேம்பாட்டிற்குமான செயலகங்கள்)

07. சூழல் நல்லாட்சி ஆணையகம்

08. பெண்கள் அபிவிருத்தி மறுவாழ்வு மையம்

09. தமிழீழ பொறியியல் தொழில்நுட்ப வளர்ச்சித் துறை

10. தமிழீழ விளையாட்டுத்துறை

11. தமிழீழ காலநிலை அறிவுறுத்தல் வாரியம்

12. தமிழீழ ஆட்பதிவுத்திணைக்களம்

13. தமிழீழ போக்குவரவு கழகம்

14. வடகிழக்கு மனிதவுரிமைகள் செயலகம் (NESoHR)

15. தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு (விசா வழங்கும் பகுதி)

16. தமிழீழ மாணவர் அமைப்பு (அன்னை பூபதி பொதறிவுப் போட்டி)

17. தமிழீழ வைப்பகம்

18. தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

19. தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை (தமிழீழ வரலாற்றுக் கல்வி நூல் வெளியீடு)

20. சுங்கவரித் துறை

21. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

22. பொருண்மிய மதியுரையகம் (The Economic Consultancy House)

23. அனைத்துலக தொலைத்தொடர்புசெயலகம்

24. மனிதவள செயலகம் (தமிழீழ கிராம சேவகர் பிரிவு)

25. தமிழீழ கல்விக் கழகம்

26. தமிழீழ கட்டுமானப் பொறியியல் செயலகம்

★

01. காந்தரூபன் அறிவுச்சோலை (ஆதரவற்ற ஆண் குழந்தைகள்)

02. செந்தளிர் இல்லம் (5 வயதுக்குட்பட்ட ஆதரவற்ற குழந்தைகள்)

03. செஞ்சோலைச் சிறார் இல்லம் (ஆதரவற்ற பெண் குழந்தைகள்)

04. வெற்றிமனை (வலுவிழந்தோர்)

05. அன்பு இல்லம் (முதியோர்)

06. தளிர்கள் (தாய் தந்தை இருவரும் போராளிகளாக இருப்பவர்கள் அல்லது தாய் தந்தை ஒருவர் மாவீரராக உள்ள சிறார்களின் முன்பள்ளி)

07. இனிய வாழ்வு இல்லம் (காது கேளாத, வாய் பேசாத, பார்வை இல்லாத மாற்றுதிறனாளி சிறுவர் சிறுமிகளுக்கானது)

08. சந்தோசம் உளவள மையம் (மனநோயாளிகளுக்கானது)

09. நவம் அறிவுக்கூடம் (பார்வை இழந்த போராளிகளுக் கானது)

10. மயூரி இல்லம் (இடுப்பின்கீழ் வலுவிழந்த பெண் போரா ளிகளுக்கானது)

★

01. அறிவமுது பொத்தகசாலை

02. விடுதலைப் புலிகள் செய்தி இதழ், ஈழநாதம் செய்தி இதழ், வெளிச்சம் செய்தி இதழ், சுதந்திரப் பறவைகள் (பெண்கள் செய்தி இதழ்)

03. ஆவணப்படுத்தல், பதிப்புத்துறை, வெளியிட்டுப் பிரிவு

04. தமிழீழ தேசியத் தொலைக்காட்சி

05. நிதர்சனம் (திரைப்படத் தயாரிப்பு, ஒளிவீச்சு வீடியோ சஞ்சிகை தயாரிப்பு, மொழியாக்கப்பிரிவு)

06. புலிகளின் குரல் வானொலி, தமிழீழ வானொலி, சிங்கள வானொலி

07. தமிழீழ இசைக்குழு

08. இணைய செய்தி நிறுவனங்கள் (தமிழ்நெற் என்ற ஆங் கில இணையமும் புதினம் என்ற தமிழ் செய்தி இணையமும் நேரடி தொடர்பாடலுடன் செயற்பட்டிருந்தன)

★

01. மாவீரர் பணிமனை

02. தியாகசீலம்

03. மாவீரர் துயிலும் இல்லங்கள்

★

01. சேரன் வாணிபம், சேரன் சுவையகம்

02. பாண்டியன் உற்பத்திப் பிரிவு, பாண்டியன் வாணிபம், பாண்டியன் சுவையூற்று

03. சோழன் தயாரிப்புகள்

04. பொன்னம்மான் உரவகை வாணிபம்

05. தென்றல் இலத்திரனியலகம்

06. தமிழ்மதி நகை மாடம், தமிழ்நிலா நகை மாடம், தமிழரசி நகை மாடம்

07. அந்திவானம் பதிப்பகம்




08. இளந்தென்றல் குடிவகைப் பிரிவு

09. ஒளிநிலா திரையரங்கு

10. அந்திவானம் பதிப்பகம்

11. இளவேனில் எரிபொருள் நிலையம்

12. இளந்தென்றல் தங்ககம், A9 தங்ககம்

13. காலணி (பாதணி உற்பத்தி மையம்)

14. மருதம் வாணிபம்

15. மருதம் புலால் விற்பனை நிலையம் (மாமிசம்)

16. மரமடுவம் (காட்டுமரங்கள், விறகுகள் விற்பனைப் பகுதி)

17. கேடில்ஸ் தும்புத் தொழிற்சாலை

★

01. தமிழ் ஊடக அறிவியல் கல்லூரி

02. தொழில் நுட்பக் கல்லூரி

03. அரசறிவியற் கல்லூரி

04. தமிழீழ பல்கலைக்கழகம் (கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் இதற்கான திட்டப்பணிகள் தொடங்கப்பட்டபோதும் முழுமையடையவில்லை)

05. சிறுவர் கணனிப் பூங்கா

★

01. விழிப்புக்குழு (கிராமங்களுக்கான இரவுப் பாதுகாப்பு)

02. கிராம கடற்றொழிலாளர் சங்கம் - சமாசம் - சம்மேளனம் (மாவட்டம்) - இணையம் (மாகாணம்) கட்டமைப்புகள்

03. மாவீரர் அரங்குகள்

04. மாவீரர் நினைவு விளையாட்டு அரங்குகள்

05. மாவீரர் நினைவு வீதிகள்

06. மாவீரர் நினைவு குடியிருப்புத்திட்டங்கள்

07. மாவீரர் போராளிகள் குடும்பநலன் காப்பகம்

08. மாவீரர் நினைவுப் பூங்காக்கள் (தியாகசீலம் பூங்கா, சந்திரன் பூங்கா)

09. மாவீரர் நினைவுப் படிப்பகங்கள்

10. மாவீரர் நினைவு நூலகங்கள்

11. மாவீரர் நினைவு விலங்கியல் காப்பகம்

12. மாமனிதர் விருதுகள் (தமிழ்த்தேசியப்பணி, சமூக, பொதுத் தொண்டுகள் செய்வோருக்கானது)

இன்னும் பல...



# வங்குரோத்தான நாட்டை நோக்கி வரும் சுற்றுலாப் பயணிகள்!

21.04.2024

களுத்துறையில் ஒரு சுற்றுலாப் பயணி-அவர் ஒரு வெள்ளைக்காரர்- ஒரு தேநீர்க் கடையில் வடை சாப்பிடுகிறார். அவரை கடைக்குள் உபசரித்து வடையோடு இரண்டு விதமான சம்பல்களையும் கொடுத்த அந்த கடையைச் சேர்ந்த ஒருவர், அவரிடம் ஒரு வடைக்கும் ஒரு பால் தேனீருக்கும் மொத்தம் 800 ரூபாய் வாங்குகிறார். சுற்றுலாப் பயணிக்கு அந்தத் தொகை அதிகம் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. அவர் அந்த வழியால் வரும் ஆட்களை மறித்து வடையின் விலை என்னவென்று கேட்கிறார். அந்த வழியால் வந்த இரண்டு சிங்களப் பெண்கள் ஓரளவுக்கு ஆங்கிலம் கதைக்கிறார்கள், அவர்களில் ஒருவர் அந்த வடையின் விலை 120 ரூபாய் என்று கூறுகிறார். வெள்ளைக்காரர் உண்மையை கண்டுபிடித்து விட்டார் என்பதை அறிந்த கடைக்காரர் சிறு தொகையை திரும்ப கொடுக்கிறார். இந்த விடயம் “டிக்டொக்” காணொளியில் பரவலாகப் பகிரப்பட்டது. அதன் விளைவாக கடைக்காரருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன .

ஏற்கனவே இது போன்ற மற்றொரு சம்பவத்தில் ஒரு சுற்றுலாப் பயணியை ஒரு கொத்துரொட்டி கடைக்காரர் அவமதிக்கின்றார். சம்பவம் நடந்தது கொழும்பு புதுக்கடையில். அங்கேயும் ஒரு இடியப்ப கொத்து என்ன விலை என்று கேட்டபோது கடைக்காரர் 1900 ரூபாய் என்று கூறுகிறார். சுற்றுலாப் பயணி அதை நம்பாமல் கேள்வி கேட்டபோது கடைக்காரர் சுற்றுலாப் பயணியை நோக்கி வாயை பொத்து என்ற சமிக்கையை காட்டுகிறார். அது சமூக வலைத் தளங்களில் பரவலாக வெளிவந்தது. விளைவாக கடைக்காரர் மீது போலீசார் சட்ட நடவடிக்கை எடுத்தார்கள்.

இந்த இரண்டு விடயங்களையும் முன்வைத்து, சமூக வலைத்தளங்களில் பகிடியாக ஒரு விடயம் பகிரப்படுகிறது. இனி சாப்பாட்டுக் கடைக்கு போகும் போது வீடியோவையும் ஓன் பண்ணி விட்டு சென்றால் சாப்பாட்டுக் கடைக்காரர்கள் மரியாதையாக நடந்து கொள்வார்கள்நியாயமான விலையைகக் கூறுவார்கள் என்பதே அந்தப் பகிடியாகும்.

ஆனால் சுற்றுலாப் பயணிகளை பாதுகாப்பது போல அரசாங்கம் உள்ளூர் மக்களை சாப்பாட்டுக் கடைக்காரர்களின் விடயத்தில் பாதுகாக்கும் என்று எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. இது தொடர்பாக முகநூலில் ஒரு மருத்துவர் ஒரு குறிப்பை எழுதியிருந்தார். நட்சத்திர அந்தஸ்துள்ள சுற்றுலா விடுதிகளில் உணவின் விலை உச்சமாகத்தான் உள்ளது. சாதாரண இளநீரில் இருந்து தொடங்கி மேற்கத்திய முறையிலான உணவுகள் வரை எல்லாவற்றுக்கும் பெரிய விலை தான். ஏன் அப்படியென்று சுற்றுலாப் பயணிகள் கேட்பதில்லை. ஏனென்றால் நட்சத்திர விடுதிகளில் அதுதான் விலை. அதையே தெருவோரக் கடைக்காரர் செய்தால் அது வழக்காகி விடுகிறது என்ற தொனிபட மேற்படி மருத்துவர் ஒரு குறிப்பை போட்டிருந்தார்.

இது விடயத்தில் இரண்டு விடயங்களைச் சுட்டிக்காட்ட வேண்டும். முதலாவது வெள்ளைத் தோலைக் கண்டால் அல்லது சுற்றுலாப் பயணிகளைக் கண்டால் உள்ளூர் வியாபாரிகள் விலையை உயர்த்திக் கூறும் ஒரு நிலைமை எப்பொழுதும் உண்டு. இது இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவும் உட்பட ஆசிய ஆபிரிக்க நாடுகள் பெரும்பாலானவற்றில் காணப்படும் ஒரு பொதுத் தோற்றப்பாடு. ஒரு வெளிநாட்டுப் பயணிக்கு ஒரு பொருளை டொலர் மதிப்பில் விற்க முற்படுவது. இதுதான் புதுக்கடை மற்றும் களுத்துறைச் சம்பவங்களின் பின்னணி. இது முதலாவது .


இரண்டாவது விடயம்,சுற்றுலாப் பயணிகள் மட்டுமல்ல உள்ளூர் பணக்காரர்களும் சுற்றுலா விடுதிகளில் உணவு அருந்தும் பொழுது அந்த விலைப்பட்டியலைக் குறித்துக் கேள்வி கேட்பதில்லை. சில கிழமைகளுக்கு முன் யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாக அமைந்திருக்கும் ஒரு மரக்கறி உணவகத்தில் விற்கப்படும் உணவுகளின் விலைப்பட்டியல் சமூக வலைத்தளங்களில் பரவலாக வெளிவந்தது. நட்சத்திர அந்தஸ்துள்ள உணவு விடுதிகள் சாதாரண உணவுகளுக்கும் குடிபானங்களுக்கும் பல மடங்கு விலையைப் போடுகின்றன. பணக்காரர்களும் சுற்றுலாப் பயணிகளும் அதைக் கேள்வி கேட்காமல் நுகர்கிறார்கள். அதையே தெருவோரக்கடை என்று வந்தால் அல்லது தெருவோரத்தில் பொருளை விக்கும் ஏழை என்று வந்தால் ஆயிரம் நியாயங்கள் கேட்டு விலையை எப்படிக் குறைக்கலாம் என்று முயற்சிக்கிறார்கள் .

இது சமூக வலைத்தளங்களின் காலம். மனிதர்கள் நடமாடும் கமராக்களாக மாறிவிட்டார்கள். எனவே இது போன்ற செயல்கள் நடக்கும் பொழுது அது உடனுக்குடன் படமாக்கப்படுகின்றது. எடுத்த கையோடு சுடச்சுட சமூக வலைத்தளங்களில் செய்தியாக்கப்படுகின்றது. குற்றங்களைத் தடுப்பதற்கும் அநியாயங்களைத் தடுப்பதற்கும் அது உதவுகின்றது. குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் தங்களை உள்ளூர் வியாபாரிகள் ஏமாற்றுகிறார்கள் அல்லது சுரண்டப் பார்க்கிறார்கள் என்ற உணர்வு அதிகரித்து வருகிறது. சமூக வலைத்தளங்களின் ஆதிக்கமும் அதற்கு காரணம். இவ்வாறு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் விழிப்புக் காரணமாக மேற்சொன்ன இரண்டு சம்பவங்கள் தொடர்பாகவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்கம் இந்த விடயத்தில் உஷாராகக் காணப்படுகின்றது. சுற்றுலா பயணிகளைக் கவர வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு உண்டு ஏனென்றால் சுற்றுலாப் பயணிகள்தான் இப்பொழுது நாட்டுக்குள் டொலர்களைக் கொண்டு வரும், பொன்முட்டை இடும் வாழ்த்துக்களாகும். இந்த மாதத்தில் முதல் ஒன்பது நாட்களில் மட்டும் மொத்தம் 50 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்குள் வந்திருக்கிறார்கள்.

நாட்டின் பெரும்பாலான நட்சத்திர அந்தஸ்த்துள்ள விடுதிகள் மட்டுமல்ல சாதாரண விடுதிகளும் சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழிகின்றன. நாட்டின் உயர்தர மதுச்சாலைகள், தேநீர்க் கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் போன்றவற்றிலும் கடற்கரைகளிலும் உல்லாசப் பயணத் தலங்களிலும் பெருமளவுக்கு சுற்றுலாப் பயணிகளைக் காண முடிகின்றது.

சுற்றுலாப் பயணிகள் அதிக தொகையாக இலங்கைக்குள் வருவதற்கு பிரதானமாக இரண்டு காரணங்கள் உண்டு. இது ஒரு அழகிய நாடு. அது முதலாவது முக்கியமான காரணம். இரண்டாவது காரணம், நாட்டின் நாணயப் பெறுமதி வெகுவாகக் குறைந்துவிட்டது. இதனால் ஒரு வெளிநாட்டவர் தன்னுடைய நாணயத்தை இங்கே செலவழிக்கும் பொழுது குறைந்த செலவில் அதிக அளவு நன்மைகளைப் பெற முடியும். இக்காரனத்தால் இந்தியாவில் இருந்தும் சுற்றுலா பயணிகள் அதிக தொகையாக வருகிறார்கள். குறிப்பாக இந்தியாவுக்கும் மாலை தீவுகளுக்கும் இடையிலான உறவுகளில் நெருக்கடிகள் தோன்றிய பின் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கையை நோக்கி ஊக்குவிக்கப்படுகின்றார்கள். இந்தியாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் வெள்ளைக்காரர்களைப் போல காசை அள்ளி வீச மாட்டார்கள் என்ற ஒரு அபிப்பிராயம் சுற்றுலா விடுதி உரிமையாளர்களிடமும் உள்ளூர் வணிகர்களிடமும் உண்டு. அமெரிக்க ஐரோப்பிய சுற்றுலாப் பயணிகளை விடவும் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கையின் சந்தை நிலவரங்கள் தொடர்பாக அதிகம் விழிப்புடன் இருப்பதும் அதற்கு ஒரு காரணம்.




இவ்வாறு வரும் சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானவர்கள் நாட்டின் தெற்குப் பகுதியை நோக்கியே போவதாக ஓர் அவதானிப்பு உண்டு. வடக்கு கிழக்கை நோக்கி வருபவர்களின் தொகை ஒப்பிட்டுளவில் குறைவு என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது. வடக்கு கிழக்கில் உள்ள விருந்தகங்கள், சுற்றுலாத் தங்கங்களின் விருந்தோம்பும் பண்பைக் குறித்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளை கவரத்தக்க விருந்தோம்பல் பண்பாடும் அதற்குரிய விருந்தோம்பல் வலை அமைப்பும் தமிழ்ப் பகுதிகளில் குறைவு என்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது.அவ்வாறு சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க ஒரு சுற்றுலாப் பாரம்பரியத்தை அல்லது ஒரு சுற்றுலாப் பண்பாட்டைக் கட்டியெழுப்பத் தேவையான உயர் கற்கை நெறிகள் இப்பொழுது தமிழ்ப் பகுதிகளில் உண்டு. எனினும் ஆயுத மோதல்களுக்குப் பின்னரான கடந்த 15 ஆண்டுகளிலும் கவர்ச்சிமிகு செழிப்பான விருந்தோம்பல் பாரம்பரியம் ஒன்றைத் தமிழ் மக்கள் மத்தியில் கட்டியெழுப்ப முடியவில்லை என்று ஒரு விமர்சனம் உண்டு. உள்ளூர் சாப்பாட்டுக் கடைகளிலேயே உபசரிப்பு செழிப்பாயில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு.

இன்னும் சில மாதங்களில் நல்லூர் திருவிழா வருகிறது. அதையொட்டி புலம்பெயர்ந்த தமிழர்கள் அதிகரித்த தொகையில் யாழ்ப்பாணத்தை நோக்கி வருவார்கள். இனிவரும் மாதங்களில் நாட்டுக்கு அதிகம் வருவாயை ஈட்டித் தரப்போகும் தரப்புகளில் ஒன்றாக புலம்பெயர்ந்த தமிழர்கள் காணப்படுவார்கள். முன்பு புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது சொந்தக்காரர்கள் நண்பர்களின் வீடுகளில் தங்குவதுண்டு. ஆனால் இப்பொழுது இந்தப் போக்கு மாறி வருகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் சுற்றுலா விடுதிகளில் தங்குவதற்கு விரும்புகின்றார்கள். உறவினர்களின் வீடுகளில் தங்குவதை விடவும் சுற்றுலா விடுதிகளில் தங்குவதை அவர்கள் விரும்பக் காரணம் என்ன?

மிகவும் துயரமான ஒரு காரணம் உண்டு. உறவினர்கள் நண்பர்களின் வீடுகளில் தங்கும் பொழுது உறவினர்களும் நண்பர்களும் இவர்களிடம் எதையாவது எதிர்பார்க்கின்றார்கள். அவர்கள் எதிர்பார்ப்பதை இவர்கள் கொடுக்க முடியாத போது அல்லது இவர்கள் கொடுப்பது அவர்கள் எதிர்பார்த்ததை ஈடு செய்யாத போது அங்கே அதிருப்தி உண்டாகிறது. அதனால் மனக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. விடுமுறைக் காலத்தை தாய்நாட்டில் சந்தோஷமாகக் கழிப்பதற்கு என்று வரும் புலம்பெயர்ந்த தமிழர்கள் பலர் மேற்சொன்ன காரணத்தால் தமது விடுமுறை நாட்கள் மன அழுத்தம் மிக்கவைகளாக மாறின என்று குறைபடுகிறார்கள்.

மேலும் அங்கிருந்து வரும் முதலாம் தலைமுறை புலம்பெயர்ந்த தமிழர்களைப் பொறுத்தவரை. பெரும்பாலானவர்களுடைய பெற்றோர் இப்பொழுது உயிரோடு இல்லை. எனவே பெற்றோரோடு தங்க வேண்டிய நிர்ப்பந்தமும் அவர்களுக்குக் குறைவு. மேலும் பிள்ளைகள் வளர்ந்து விட்டன. தங்கப் போகும் வீடுகளிலும் பிள்ளைகள் வளர்ந்து விட்டன. ஒரு குறுகிய காலத்துக்குள் எல்லாரையும் உள்வாங்கும் அளவுக்கு உள்ளூர் வீடுகளின் அறைகள் போதாமல் இருக்கலாம். மேலும், வெளிநாட்டில் வளர்ந்த பிள்ளைகள் “ஏசி” அறைகளைக் கேட்கிறார்கள். அதுவும் புலம்பெயர்ந்த தமிழர்கள் சுற்றுலா விடுதிகளில் தங்குவதற்கு ஒரு காரணம். இது போன்ற காரணங்களால் சுற்றுலா விடுதிகளுக்கு வருமானத்தை ஈட்டும் ஒரு தரப்பினராக புலம் பெயர்ந்த தமிழர்களும் மாறி வருகிறார்கள்.




எதுவாயினும் நாட்டுக்குள் வெளிநாட்டுக் காசு வருகிறது. பன்






னாட்டு நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இயங்கும் ஓர் அரசாங்கத்தைப் பொறுத்தவரை, அது ஒரு வரப்பிரசாதம். அது நாட்டின் டொலர் கையிருப்பைக் கூட்டுகின்றது. அது போலவே வெளிநாட்டுக்குச் சென்ற தமிழ் மக்கள் மற்றும் சிங்கள மக்கள் அனுப்பும் காசும் நாட்டின் டொலர் கையிருப்பை அதிகப்படுத்துகிறது. அண்மைக் காலங்களில் 10பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளி நாடுகளில் தொழில் புரிவோர் அனுப்பியிருப்பதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். இவை தவிர அரசாங்கம் வரிகளை உயர்த்தியிருக்கின்றது. மின்சாரக் கட்டணம் தொலைதொடர்புக் கட்டணம் போன்ற உள்ளூர்ச் சேவைக் கட்டணங்களை அதிகப்படுத்தியுள்ளது. இவற்றால் அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கின்றது. இவை போன்ற பல காரணங்களினாலும் நாட்டின் பொருளாதாரம் ஒப்பீட்டளவில் நிமிர்த்தப்படுகிறது என்று ஓர் உணர்வு ஆங்கிலம் தெரிந்த படித்த நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் ஏற்பட்டு வருகின்றது.

சில மாதங்களுக்கு முன்பு பச்சை மிளகாய் ஒரு கிலோ 2000 ரூபாய்க்கு மேல் போனது. ஆனால் இப்பொழுது உள்ளூர் சந்தைகளில் 100 ரூபாய்க்கு சற்று அதிகமாகப் போகின்றது. அப்படித்தான் தக்காளிப் பழம் பெரியது ஒரு கிலோ 800 ரூபாய்க்கு மேல் போனது. இப்பொழுது 50 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரை போகின்றது. மரக்கறி விலை குறைகிறது. கடல் உணவுகளின் விலையும் குறைக்கின்றது. அரசாங்கம் சாதாரண சிங்கள மக்களைக் கவரும் நோக்கத்தோடு நெத்தலிக் கருவாடு, சீனி, பருப்பு போன்றவற்றின் விலைகளை அவ்வப்போது குறைத்து வருகின்றது. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் பொழுது மேலும் பல சலுகைகளை எதிர்பார்க்கலாம்.

ஜனாதிபதித் தேர்தலை நோக்கி நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்துவதற்காக ரணில் விக்கிரமசிங்க கடுமையாக உழைக்கின்றார். அவர் மீண்டும் ஒரு தடவை ஜனாதிபதியாக வருவதை மேற்கு நாடுகள் விரும்புகின்றன. பன்னாட்டு நாணய நிதியம் போன்ற உலகப் பெரு நிறுவனங்களும் விரும்புகின்றன. எனவே ஜனாதிபதித் தேர்தலை நோக்கி அவர் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு மேற்படி தரப்புகள் அவருக்கு உதவும்.

எனினும் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்கள் என்று கூறப்படுகின்றவை சாதாரண சிங்கள மக்களைச் சென்றடைந்தனவா என்ற கேள்விக்கு விடை முக்கியம். ஏனெனில் ஜனாதிபதியைத் தீர்மானிப்பதற்குரிய பிரதான வாக்காளர்கள் சிங்களக் கிராமங்களில்தான் இருக்கிறார்கள். சிங்கள பௌத்த அரசியலின் வாக்கு வங்கியின் இதயம் கிராமங்களில்தான் உண்டு. கிராமப்புற வாக்காளர்கள் அரசாங்கத்தைப் பற்றி என்ன கருதுகிறார்கள் என்பதுதான் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிக்கப் போகின்றது.

நன்றி: நிலாந்தன்

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 4வது அமர்வுக்கான கனடா தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்கள்

**Election Commission**
**Transnational Government of Tamil Eelam**
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தேர்தல் ஆணையம்
Canada

**Mr. Sivabalan Balasundaram**
**Canada Election Commissioner** **tgteelection2024@gmail.com**

Press Release #6
Apr 26, 2024

**நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் 4வது அமர்வுக்கான கனடா தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தல்கள்.**

இம்முறை **7** இடங்களில் போட்டியிருப்பதாக கணிக்கப்பட்டது. இதன்படி

1. பிரம்டன் வடக்கு ஒறேன்ஞ்வில்
2. மிசிசாகா கிழக்கு
3. ரொரண்டோ, ஸ்காபரோ-பீச்சஸ்
4. ரொரண்டோ, ஸ்காபரோ-சென்ரர்
5. ரொரண்டோ,ஸ்காபரோ-கிழக்கு
6. ரொரண்டோ,ஸ்காபரோ-வடக்கு
7. பிக்கரிங், விற்பி.

ஆகிய இடங்களே அவையாகும்.

தற்போது உள்ள நிலவரப்படி மிசிசாகா கிழக்கு வேட்பாளர் விஜயகுமாரி துரைராஜா தேர்தல் போட்டியிலிருந்து பின்வாங்கியுள்ளார். எனவே அங்கு தேர்தல் நடப்பதற்கு வாய்ப்பில்லை. மேலும் ரொரண்டோ ஸ்காபரோ பீச்சஸ் பகுதியிலுள்ள தேர்தல் வேட்பாளர்களில் கனகேந்திரன் கனகசபாபதி (ஈழவேந்தன் ஐயா) உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதால் போட்டியிலிருந்து வெளியேற்றுமாறு அவரது குடும்பத்தினர் கேட்டதற்கிணங்க கனடா தேர்தல் ஆணையாளரால் அவரின் உடல்நிலையை கருத்தில்கொண்டு போட்டியிலிருந்து விலக்கி வைக்கவுள்ளார்.

| வேட்பாளர்கள் பெயர் | தொகுதி | வாக்களிக்குமிடம் | அஞ்சல் குறியீடு |
|---|---|---|---|
| • சிந்தியா சிறிபிரகாஸ்<br>• ஜோன் கிறிஸ்ரின் அந்தோனிப்பிள்ளை | பிரம்டன் வடக்கு ஒறேன்ஞ்வில் 9 | Ebenezer Community Hall 4494 Ebenezer Rd, Brampton, ON L6P 0R8 | **L7A, L6Z,L6R,L9P,L9V, L9W** |
| • இரவிறாயினி நடராஜா<br>• சிவானி ரமேஸ் | ஸ்காபரோ சென்ரர் 17 | Sankkamam Party Hall, 42 Tuxedo ct, Scarborough, ON, M1G 3S3 | **M1G, M1H, M1P, M1R, M3A, M3B,M2L,M2P** |
| • வையந்தலக்சுமி வையாபுரி<br>• விஜிதரன் வரதராஜா | ஸ்காபரோ கிழக்கு 18 | 1160 Tapscott Rd, unit #1, Scarborough, ON, M1X 1E9 | **M1B,M1C,M1E,M1X** |

1

**Election Commission**
**Transnational Government of Tamil Eelam**
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தேர்தல் ஆணையம்
Canada

**Mr. Sivabalan Balasundaram**
**Canada Election Commissioner** **tgteelection2024@gmail.com**

| | | | |
|---|---|---|---|
| • அந்தோனிப்பிள்ளை சுரேஸ்குமார்-சிலுவைராஜா<br>• குமுதினி குனரட்ணம் | ஸ்காபரோ வடக்கு 19 | 210 Silver Star Blvd #850, Scarborough, ON M1V 5J9 | **M1X,M1V,M1W,M1S, M2H,M2M,M2R,M2N, M2K,M2J** |
| • ரோய் கரோல்ட் சென்யூட் காடினர் - விக்னராஜா<br>• தனிநாயகம் சன்முகநாதன் | பிக்கரிங் விற்பி டர்கம் 20 | 785 Westney Rd S, Unit #9, Ajax, ON L1S 7G1 | **LOH,L1R,L1M,L1N,L1P, L1X,L1Y,L1W,L1V** |

**வாக்காளர்களின் தகுதி**

வாக்காளர்களின் தகுதி நிலையை கருத்தில் எடுத்து **17** வயது பூர்த்தி செய்ததை உறுதிபடுத்தும் முகமாக ஆள் அடையாள சான்று, இருப்பிடத்தை உறுதிசெய்ய அஞ்சல் குறியீடு உள்ள அட்டை அல்லது ஆவணம் கொண்டு சென்று வாக்களிக்கலாம்.

**வேட்பாளரின் பரப்புரைகள்**

வேட்பாளர்கள் தேர்தல் நடைமுறைக்கையேட்டில் கூறியபடி போட்டிவேட்பாளரின் பரப்புரைக்கு குந்தகம் ஏற்படாமல் பரப்புரை, விளம்பரம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

பரப்புரையின் போது ஏற்படும் பிரச்சனைகளை தேர்தல் கண்காணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**வாக்களிப்பு நிலையம்**

வாக்களிப்பு நிலையத்தில் அமைதியையும் பண்பையும் கடைப்பிடிப்பது சிறப்பு.

வேட்பாளர்களின் பிரதிநிதி தலா ஒருவா் வாக்களிப்பு நிலையத்தில் நிற்க அனுமதி உண்டு. வேட்பாளரின் பிரதிநிதி தொடர்பான விபரத்தை ஆணையாளருக்கு எழுத்தில் வேட்பாளரினால் அனுப்பப்படல் வேண்டும்.

ஊடகத்தை சேர்ந்தவர்களில் ஒருவர் நிகழ்வை பதிவுசெய்ய அனுமதிக்கப்படுவர்.

வாக்களிக்கும் நேரம் காலை **9** மணி தொடக்கம் மாலை **6** மணி வரை என முடிவு செய்யப்படுகிறது.

2

**Election Commission**
**Transnational Government of Tamil Eelam**
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தேர்தல் ஆணையம்
Canada

**Mr. Sivabalan Balasundaram**
**Canada Election Commissioner** **tgteelection2024@gmail.com**

வேட்பாளர்களின் தொகுதிகளில் உள்ள தமிழ் மக்கள் தமது வரலாற்று கடமையாக வாக்குகளை உங்கள் வேட்பாளர்களுக்கு செலுத்த வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைமை தாங்கும் அலுவலர் மற்றும் பதில் ஆனையாளர்கள் இவற்றை கண்காணித்து வழிப்படுத்தி தலைமைத்தேர்தல் ஆணையாளருடன் தொடர்பில் இருந்தபடி பிணக்குகள் ஏதும் வரும் இடத்து அவற்றை தீர்த்து வைப்பார்கள்.

வாக்களிப்பு முடிந்த பின் வாக்குப்பெட்டிகளை பாதுகாப்பு அலுவலர்களுடன் பாதுகாப்பாக தேர்தல் ஆணையாளரின் அனுமதியுடன் குறித்த இடங்களில் எண்ணப்பட்டு வெற்றியாளர் அறிவிக்கப்படுவர்.

தேர்தலின் வெற்றியாளர்கள் மே-5 அன்றே தேர்தல் ஆணையத்தால் வெளிப்படுத்தப்படுவார்கள்.

**நாடு கடந்த தமிழீழ அரசாங்க தேர்தல் ஆணையம் கனடா**
**437-265-8483**

**TGTE** பற்றி:- நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் (TGTE) என்பது உலகெங்கிலும் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பாகும். 2010 இல் ஸ்தாபிக்கப்பட்ட TGTE ஆனது இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காக நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் சுயநிர்ணயம் ஆகியவற்றை நோக்கிச் செயற்படுகிறது.

ஊடகத் தொடர்பு:- பிரதாப் கிட்னபிள்ளை, செய்தித்தொடர்பாளர் TGTE தேர்தல் ஆணையம் - கனடா 437-246-9043

3


நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின்
4வது
பொதுத் தேர்தல்
ரவிரஜனி நடராஜா (மருத்துவர்)
இலக்கு ஒன்றே!
இனத்தின் விடுதலை!
எமது மண்ணுக்கும் மக்களுக்கும்
தன்னலமின்றி உறுதியுடன்
சமரசமின்றி செயற்பட
வாக்களியுங்கள்
காலம் : வைகாசி 5ம் நாள்
நேரம் : மு.ப 9மணி ~ பி.ப 6மணி
இடம் : Sankkamam Party Hall,
42 Tuxedo ct, Scarborough . ON,
M1G 3S3
வாக்காளர் அஞ்சல் குறியீடுகள் :
M1G, M1H, M1P, M1R, M3A, M3B, M2L, M2P
வாக்காளர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிபடுத்தும் முகமாக ஆள் அடையாள சான்று, இருப்பிடத்தை உறுதிசெய்ய அஞ்சல் அடையாளம் உள்ள அட்டை அல்லது ஆவணம் கொண்டு சென்று வாக்களியுங்கள்.


CYNTHIA
SRI PRAGASH
FOR NEXT TGTE MP
BRAMPTON NORTH
ORANGEVILLE #9
JOIN
TEAM CYNTHIA
ON ELECTION DAY
MAY 5TH
9 AM to 6 PM
WHERE:
Ebenezer Community Hall
4494 Ebenezer Road
Brampton ON L6P 0R8
FOR MORE INFORMATION
647-501-5195
eelamatters@outlook.com
"Let us stand united as one"
"தமிழரின் தாகம்
தமிழீழத் தாயகம்"
BRAMPTON NORTH & ORANGEVILLE #9
L7A - L6Z - L6R - L6P - L9V - L9W


VOTE
DR. KUMUTHINI KUNARATNAM
FOR YOUR NEXT TGTE MP
ELECTION DAY:
MAY 5TH
9:00 am to 6:00pm
SCARBOROUGH NORTH RIDING:
M1X, M1V, M1W, M1S, M2H,
M2M, M2R, M2N, M2K, M2J
YOUR VOTE IS YOUR VOICE!
VOTER ELIGIBILITY:
To cast your vote, be 17+, and bring ID with postal code or proof of residence.
VOTING LOCATION:
210 Silver Star Blvd #850
Scarborough, M1V 5J9
TAMIL'S DESTINY IS IN TAMIL'S HANDS
THE THRIST OF TAMILS IS THE HOMELAND OF TAMIL EELAM
தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்!
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!


சுதந்திரமான மற்றும் இறையாண்மை கொண்ட தமிழீழத்தை கட்டியெழுப்பும் உன்னத பாதையில் பயணிக்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உலகளாவிய தமிழீழ வாக்கெடுப்பு ஒருங்கிணைப்பாளர் டாக்டர். குமுதினி குணரத்தினம் முதன்மை படுத்தும் முக்கிய விடயங்கள் :
1) எங்கள் மக்களுக்கான நீதி, சுயநிர்ணய உரிமை,இறையாண்மை மற்றும் சமத்துவத்தை வலியுறுத்தும் வட்டுக்கோட்டை தீர்மானத்தை ஆதரிப்பது
2) உலகெங்கும் வாழும் தமிழ்ச்சொந்தங்களின் அடிப்படை உரிமைகள்,கலாச்சாரப்பாதுகாப்பு,மொழியியல் உரிமைகளை உறுதி செய்வது.
3) இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டு ஏதிலிகள் ஆக்கப்பட்டு நிர்க்கதியாய் நிற்கும் தமிழர்களிற்கான நீதி மற்றும் பொறுப்புக்கூறல்களுக்கு சர்வதேச சமூகத்திடம் வலியுறுத்துவது.
4) ஒன்றிணைந்த உலகளாவிய புலம்பெயர் வலையமைப்பை வலுப்படுத்தி சர்வதேச அரங்கில் நமது குரலை வலுக்கச்செய்வது.
5) தமிழ் இளைஞர்களின் மேம்பாட்டிற்கான அனைத்துவழிகளையும் சீர்செய்வது. குறிப்பாக சமூகத்தின் அனைத்துசெயற்பாடுகளிலும் தமிழ்ப்பெண்களின் பங்களிப்பை அதிரிக்கச்செய்வது.
6) தமிழீழ விடுதலைக்கு சர்வதேச ஆதரவை பெறுவதற்கான அனைத்து மட்ட முயற்சிகளிலும் ஈடுபடுவது சுதந்திரமான இறையாண்மைகொண்ட தமிழீழத்திற்கான எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து நீதிக்கான இந்த அறப்போரில் உங்கள் பங்களிப்பையும் உறுதிசெய்ய தயவுசெய்து உங்கள் வாக்கை *டாக்டர்.குமுதினி குணரத்தின* மாகிய எனக்கு அளிக்குமாறு அன்பாக வேண்டுகிறேன்.
சரியான திசையின் ஒரு வாக்கு அது குமுதினிக்கான வாக்கு!
வாக்களிக்கும் தேதி: ஞாயிற்றுக்கிழமை, மே 5
நேரம்: காலை 9:00 மணி முதல் மாலை 6:00 மணி வரை
இடம்: 210 Silver Star Blvd #850, Scarborough, ON, M1V 5J9
வாக்களிக்க தகுதியான அஞ்சல் குறியீடுகள்:
M1X, M1V, M1W, M1S, M2H, M2M, M2R, M2N, M2K, M2J
உங்கள் ஓட்டுநர் உரிமத்தை கொண்டு வாருங்கள். உங்களிடம் ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால், வாக்களிக்க புகைப்பட அடையாள அட்டை மற்றும் உங்கள் பெயருடன் உங்கள் முகவரியைக் காட்டும் ஆவணத்தை கொண்டு வாருங்கள்.


முள்ளிவாய்க்கால் நினைவு நாள்
Mullivaikkal Remembrance Day
ஈழத்தமிழின அழிப்பு நாள்
Eelam Thamil GENOCIDE DAY
தமிழ்த்தேசிய துக்க நாள்
Thamil National MOURNING DAY
2009 மே May 18
2024 15 Years ஆம் ஆண்டு
Only in 2009 Over 146, 679 Eelam Thamils were murdered and more then 70,000 Thamils unaccounted. Over 95,000 Thamil Women Widowed by Sri Lanka's Government Forces, More then 50,000 Thamils Children Orphaned.
1948 தொடக்கம் ஈழத் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு தொடர்கிறது...
Since 1948 Structural Genocide Continues Against Eela Thamils by Sri Lankan Government
The Genocide of Thamils in Sri Lanka's one of the biggest tragedies of 21st century and the World still remains Silent.
Government of Canada & United Nations Recognize Thamil Eelam Genocide and demand International Investigation on Genocide of Eelam Thamils
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of the Thamils is the Homeland of Thamileelam
சங்கத்தமிழ்